# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 16 புதன்கிழமை (30.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 216


## பொருளாதார வளர்ச்சி 6.2% இருந்து 7.2 % ஆக வளர்ச்சி

# அரச ஊழியர் சம்பள உயர்வு இந்த வருடத்தில் கிடைக்காது!

## துண்டு விழும் தொகை: 43 ஆயிரத்து 880 கோடி ரூபா

கொழும்பு, ஜூன் 30

**அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு 2011 ஆம் ஆண்டிலேயே வழங்கப்படும். சம்பள அதிகரிப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் என்று பதில் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசும் போது தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் நேற்றுமாலை சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடி யது. வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்படி பதில் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்தார்.

பதில் நிதி அமைச்சர் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துக் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களைப் போன்று அரச சேவையின் புதிய சம்பளக் கட்டமைப்பு அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கலந்து ரையாடப்பட்டு 2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப் படும்.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை 43 ஆயிரத்து 880 கோடி என மதிப்பிடப் பட் டுள்ளது. கடந்த வருடத்தின் துண்டு விழும் தொகையுடன் ஒப்பிட்டால் இது இரண்டு சதவீத வீழ்ச்சியாகும். கடந்த வரு டத்தின் வரவு - செலவுத் திட்ட துண்டு விழும் தொகை 47 ஆயிரத்து 640 கோடி யாக இருந்தது.(23ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட்டில் எதுவுமே இல்லை: ஐ.தே.க. சபையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூன் 30

வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப் பித்து பதில் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உரையாற்றிக்கொண்டிருந்தார். மாலை 4 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர எழுந்து இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒன் றுமே இல்லையெனக் கூச்சலிட்டார். இதை அடுத்து ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சுலோ கங்களை கோஷித்தவாறு சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

அரச எம்.பிக்கள் பதிலுக்கு கூச்சலிட ஆரம்பித்தனர். இந்தக் களேபரம் சுமார் ஐந்து நிமிடம் நீடித்தது. 4.05 மணிக்கு அமைச்சர் வரவு-செலவுத் திட்ட உரையை முடித்துக்கொண்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தமிழர்கள் விரும்பினால் வன்னி மக்களுக்கு நேரடியாக உதவலாம்

### பிரதி அமைச்சர் முரளிதரன் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 30

புலம்பெயர்ந்த மக்கள் , மீளக்குடி யமர்ந்த மக்களுக்கு நேரடியாக உதவி புரிந்து அவர்களது வாழ்க்கையைக் கட்டியெழுப்ப விரும்பினால், அரசு அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கும் என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித் தார்.

மீள்குடியேற்ற அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதியமைச்சர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ் அமைப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மலேசிய ஈழ அகதிகள் எந்நேரமும் கைதாகலாம்!

கொழும்பு, ஜூன் 30

மலேசியாவில் உள்ள ஈழத் தமிழ்அகதி கள் எந்த நேரமும் கைது செய்யப்படலாம்.

இவர்களைக் கைதுசெய்வதற்கென 'ரெலா' என்கிற மலேசிய துணை ஆயுதக் குழு அலைந்து திரிகின்றது என்று கூறப் படுகிறது.

இந்தத் துண்ண ஆயுதக் குழுவுக்கு அகதிகளைக் கைதுசெய்யவும், சிறை வைக் கவும், நாடு கடத்தவும் மலேசிய அரசி னால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கு வாழ்கின்ற இந்த ஈழத் தமிழர் கள் உண்மையிலேயே அகதிகள்தான் என் பதை உறுதிப்படுத்தி ஐ.நா. அகதிகள் ஸ்தாபனம் அவர்களுக்கு அடையாள அட்டைகளையும் வழங்கி உள்ளது.

ஆனால், இந்த அடையாள அட்டைகளை மலேசிய அதிகாரிகள் மதிப்பதில்லை என்று ஈழ அகதிகள் கவலை தெரிவிக்கின் றனர். (அ-சி)

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 40 கோடியே 78 லட்சம் டொலர் கடனுதவி

கொழும்பு, ஜூன். 30

இலங்கைக்கான 260 கோடி அமெரிக்க டொலர் கடனுதவியில் இருந்து மூன்றா வது கட்டக் கொடுப்பனவாக 40 கோடியே 78 லட்சம் அமெரிக்க டொலரை உடன டியாக வழங்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் வழங்கப்பட்டி ருக்க வேண்டிய மூன்றாவது கட்டக் கொடுப் பனவை நாணய நிதியம் தாமதித் திருந் தது.கடந்த வருடத்துக்கான வரவு - செல வுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட அரச அதிபராக இமெல்டா நாளை பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ். மாவட்ட அரச அதிபராக திருமதி இமெல்டா சுகுமார் நாளை வியாழக்கிழமை பதவியேற்க உள்ளார்.

யாழ். அரச அதிபராகப் பணியாற்றிய கே.கணேஷ் ஓய்வு பெற்றதை அடுத்து இவர் யாழ். அரச அதிபராக பொது நிர்வாக உள் நாட் டலு வல்கள் அமைச்சின்ால் நியமிக்கப் பட் டுள்ளார்.

அவரது இடத்துக்கு கிளிநொச்சி அரச அதிபராக முன்னர் பணியாற்றிய நா. வேத

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் பதவியிலிருந்து கணேஷ் ஓய்வு பெறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த ஐந்தரை வருடங்களாக யாழ்ப் பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபராகப் பணியாற்றிய கந்தையா கணேஷ் இன்று ஜூன் முப்பதாம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

இதற்கு முன்னர் இவர் மன்னார், வவ னியா ஆகிய மாவட்டங்களின் அரச அதிப ராகவும் பணியாற்றியவர்.

மிகவும் இக்கட்டமான காலகட்டங்க ளில் பணியாற்றுவதற்குத் தமக்கு மன வலிமை அளித்த இறைவனின் கரு ணையை நினைவு கூர்ந்துள்ள அவர், தமது பணிகளைச் சுலபமாக ஆற்றுவதற் குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங் கியவர்களுக்குத் தமது நன்றியைத் தெரி வித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு இம்முறை 684 மாணவர்கள் அனுமதி பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2009-2010 ஆம் கல்வியாண்டுக்கு 684 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புதிதாக அனுமதி பெறும் மாணவர்களின் விவரங்கள் அடங் கிய பட்டியல் யாழ். பல்கலைக் கழகத் துக்கு நேற்றுக் கிடைத்தன.

புதிய மாணவர் பட்டியல் விவரம் 21 ஆம் பக்கத்தில்

இந்த விவரப்பட்டியலின் பிரகாரம் - சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப் பும் ஆகிய கற்றை நெறிகளுக்கான பதிவு கள் எதிர்வரும் 9 ஆம் திகதியும் -

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## தசாகாதி கிரஹயஞ்ஞ அழைப்பு

22.06.2010 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்னையின் ஆத்ம சாந்திக் கிரியைகள் கீழ்வரும் திகதிகளில் தொடர்ந்து நடைபெறும்

**திருமதி சிதம்பரேஸ்வரக்குருக்கள் அன்னலட்சுமி அம்பாள்**

நாளை (01.07.2010) வியாழக்கிழமை தசாகம். 02.07.2010 வெள்ளிக்கிழமை ஏகோதிஸ்டம் மாசிகம் 03.07.2010 சனிக்கிழமை சபிண்டீகரணம் 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை கிரஹயஞ்ஞம் அனைவரும் இக்கிரியைகளில் பங்குபற்றுவதோடு 05.07.2010 நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அம்மாவின் ஆத்மா சாந்திபெற அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

271/2, சிவன் வீதி, நோணிக்கல், வவுனியா. 0778357283

சிவஸ்ரீ நா.சிதம்பரேஸ்வரக்குருக்கள் குடும்பம்
கனகாம்பிகை அம்மன் கோயில், இரணைமடு கிளிநொச்சி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 04.06.1941

உதிர்வு 31.05.2010

அமரர்

**கந்தசாமி பாலசுப்பிரமணியம்-J.P**

கடந்த 31.05.2010 இல் இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணக்கிரியைகளின் போது எமக்கு உறுதுணையாய் நின்ற உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் , தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல் மூலம் துக்கம் பகிர்ந்தோருக்கும், மலர்வளையம், பூமாலை சாத்தியோருக்கும் அஞ்சலிக் கூட்டத்தை நடத்தி அவரை உன்னத நிலையில் நிறுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் மேலும் எமது குடும்பத்துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.06.2010) புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

32, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 4475 (100063)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமார் உதயகுமார் (இராசா)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமார் உதயகுமார் 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தரோடையைச் சேர்ந்த திரு.திருமதி முத்துக்குமார் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் கந்தரோடை, சித்தியார் வளவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா தம்பதியினரின் மருமகனும், விஜயலஷ்சிமியின் (சாந்தினி) அன்புக் கணவரும், திருமதி சிந்தி சுகேந்திரன், சோபனகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜசிங்கம் சுகேந்திரனின் (லண்டன்) அன்பு மாமனாரும், சுஜானியின் பேரனும், சிவகுமாரதாஸ், பாஸ்கரகுமார் (கந்தரோடை, ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), திருமதி விமலகுமாரி மகேந்திரன் (கனடா) அகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி பவானிதேவி பூபாலசிங்கம் (லண்டன்), திருமதி மைதிலி இராசநாயகம், காலஞ்சென்ற திருமதி பத்மினி கிருஷ்ணராஜா, திருமதி மாங்கிளி நித்தியானந்தன், சிவப்பிரகாசம் (கோப்பாய்), சிவசுப்பிரமணியம் (இத்தாலி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், முத்துப்பிள்ளை சிவகுமாரதாஸ், வரதலக்சுமி பாஸ்கரகுமார் (இந்தியா), சி.மகேந்திரன் (கனடா), புனிதவதி குமாரவேற்பிள்ளை, அமரர் ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீஜெயராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி ராஜிபிருந்தா கேதீஸ்வரன் (லண்டன்), திருமதி கபிலன் ஷைலஜா (இந்தியா), லக்சுமணகுமார் (இந்தியா), லக்சுமிபிரியா (இந்தியா), அபிராமி, அமரர் கமலவதனி, சகுந்தலா, திருமதி விஜயகுமார் நளினி, பாலகுமாரன், மேகலா, சிவமாலா, பிரணவரூபன் ஆகியோரின் சித்தப்பாவும் வித்தியா, சத்தியேஷ், சுகி (கனடா), அருண், வனஜா (லண்டன்), ஹம்சத்வதனி, அர்ச்சுதன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், தர்ணியன் (லண்டன்), மொழி (லண்டன்), பிரவீன் (லண்டன்), நிரூஷன் (லண்டன்), அவ்னி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் 05.07.2010 திங்கட்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, Due des Bretons,
94700 Maison Alfort,
FRANCE.
T.P. France : 0033-149777662
0033-612304511

தகவல் : மு. பாஸ்கரகுமார்
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)
0094-0777065363
சித்தியார் வளவு, சுந்தரோடை, சுன்னாகம்.

## தென்மராட்சியில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இருவர் காயமடைந்த சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன.

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர கற்குவியலில் ஏறியதில் கச்சாயைச் சேர்ந்த கே.சிவநேசன் (வயது 50) என்பவரும்,

மாடு கட்டியிருந்த கயிற்றுடன் இழுபட்டு வந்த கொமாண்டோ கம்பி மோட்டார் சைக்கிளுக்குள் புகுந்ததில் தூக்கி வீசப்பட்டு கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த கே.தர்மலிங்கம் (வயது 58) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(1-207)

## சிகரட் வைத்திருந்தவருக்கு நீதிமன்று அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 120 சிகரட் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகரை சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தினர் கைது செய்தனர்.

இந்த வர்த்தகர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் வர்த்தகரை 20 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து எதிர்வரும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை வரை வழக்கினை ஒத்திவைத்தார்.

(1-207)

## கபிலநாத் கொலை வழக்கு: சந்தேக நபருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் படுகொலை தொடர்பான வழங்கின் சந்தேக நபர்கள் ஏழு பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஜயேந்திரா, சந்தேக நபர்களை பிணையில் விடக் கோரி மனு ஒன்றைச் சமர்ப்பித்தார். இந்த மனுவை நிராகரித்த பதில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் சந்தேக நபர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-207)

## நீதிமன்றில் திடீரென ஒலித்தது தொலைபேசி; அபராதம் 500 ரூபா!

சாவகச்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி நீதிமன்றச் செயற்பாடுகள் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒருவரின் கையடக்கத் தொலைபேசி மணி திடீரென ஒலித்தது. அதைத் தொடர்ந்து தொலைபேசி வைத்திருந்த வரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சம்பந்தப்பட்டவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் 500 ரூபா அபராதம் விதித்தார்.

(ஒ-207)


## ஒத்துமாறல்

அன்மையில் வெளிவந்த வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞான பீடத்திற்கு தெரிவாகிய மாணவர் ஒருவர் அதே கற்கை நெறியை கொழும்பு, ஜெயவர்த்தனபுர ஆகிய ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய மாணவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

**தொடர்பு: 0773483347**

UK Student Visa

UK | Canada | Australia | Newzealand | Malaysia

- புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
- 15 வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் முலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- அங்கீகாரம் பெற்ற College / University அனுமதி
- [illegible]
- Reject /Refusal visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்

ADMISSION INTAKE 2010 | AUG | SEP
OFFER LETTER WITH IN 3 DAYS
NO IELTS

CALL : 0772 513 805


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை மகேஸ்வரி

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சின்னத்துரை நேற்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் V.T.K. கந்தையா - காலஞ்சென்ற இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இலக்ஷ்மி தம்பதியினரின் அன்பு மருமகளும் காயத்ரி தேவி (கனடா), அருளானந்தநாதன் (அவுஸ்திரேலியா), சிவநாதன் (ஜேர்மனி), இந்திராதேவி, பத்மநாதன் (லண்டன்), சபாநாதன் (நெதர்லாந்து), பத்மினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, தனலக்ஷ்மி (லண்டன்), மகாலக்ஷ்மி, கெஷலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரமேந்திரா, பத்மினிதேவி, நகுலாதேவி, விக்னேஸ்வரன், ஜெயஈஸ்வரி, நிர்மலாதேவி (சுஜி), இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் சுகன்யா - ரெஜின், அர்ஜீன், நீருஜா - பிறேம்ஆனந், ஷறீகா, ஷறீகன், அறுத்ரிகா, கஸ்துரிகா, உபாசனா, உபாசன், உபநயா அம்றிஷ், அனித், ஜெனித், ஜெனாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏகீஷன், கைலாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ.விக்னேஸ்வரன்
(மருமகன் - சண்முகன் வர்த்தக நிலையம், குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்).

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். T.P. 021 222 5020

### கதிர்காமு சின்னக்கண்டு

மயிலிட்டி வடக்கு, ஆலடி, சலப்பத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது அளவெட்டியில் வசித்து வருபவருமான கதிர்காமு சின்னக்கண்டு நேற்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஜானகியின் பாசமிகு தந்தையும் இரவீந்திரனின் (ரவி - சுவிஸ்) அன்பு மாமனாரும் இரஜீந்திரன், சோபனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2010) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சின்னத்துரை மனோகரன் (ராசன்).

முதலியார் கோயிலடி, அளவெட்டி வடக்கு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 01 ★ 1943

மறைவு 31 ★ 05 ★ 2010

**சின்னத்தம்பி நாகேந்திரம்**

பாச ஊற்றாய் பண்பின் உறைவிடமாய்
குடும்ப குலவிளக்காய் அன்புக்கு இலக்கணமாய்
எமை ஆதரித்து அரவணைத்து வாழ
வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 463, நாவலர் வீதி, அரியாலை. (பி/56861)

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.


மாபெரும் விளையாட்டு விழா
பாரதி இளைஞர் மன்றம்
புலம்பெயர் வாழ் கம்பர்மலை பாரதி சமூக நலன்விரும்பிகள் சங்க ஆதரவுடன்
கம்பர்மலை பாரதி இளைஞர் மன்றம் நடத்தும்

**பாரதி விளையாட்டு விழா 2010**

காலம்: 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை

சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் (ஆண்/பெண்) கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், கிறீஸ் கம்பம் ஏறுதல், தலையணை சண்டை, விநோத உடைப்போட்டி, வீசி அஞ்சல் (கழகங்கள்) வடமராட்சிக்கு உட்பட்ட வீரர், வீராங்கனைகள்

உங்களுடைய பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

தொடர்புகள்/ பதிவுகள்: க.மகேஷ் 0779672094
உ.மிரேஷ் 0772247629

பாரதி இளைஞர் மன்றம்,
கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கு.
(100057)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## இனப்பிரச்சினைத் தீர்வு... என்னாகும்?

வடக்கு , கிழக்கு இணைந்த ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்வதற்கு, பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிட்டனின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் மார்க் குட்டிங்கிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் முன்வைத்த கோரிக்கை இதுதான்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இந்த நாட்டை ஆண்டவர்கள் பிரிட்டிஷ்காரர்களே. தாம் இந்த நாட்டைக் கைப்பற்றியபோது இங்கு தனித்தனியாக இருந்த சிங்கள, தமிழ் இராச்சியங்களை ஒன்றிணைத்தவர்கள் பிரிட்டிஷ்காரர்களே. அந்த வகையில் தாம் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டிய கடமை ஒன்று இன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு உண்டு.

ஆனால் -

இலங்கை தன்னாதிக்கமும் சுயாதிபத்தியமும் உள்ள ஜனநாயக நாடாக உள்ளதால், அதன் விவகாரங்களில் தலையிட முடியாது என்ற காரணத்தைக் கூறி, ஏனைய நாடுகளைப் போன்று பிரிட்டனும் தமிழருக்கு நீதி கிடைக்க உதவமுடியாத நிலையைச் சுட்டிக்காட்டித் தப்பித்துக்கொள்கிறது.

மேலும், அருகில் உள்ள இந்தியாவின் கருத்துக்களையும் ஆலோசனைகளையுமே முழு அளவில் காதில் போட்டுக்கொள்ளாத இலங்கை அரசு, பிரிட்டன் கூறும் ஆலோசனைகளை கிட்டவும் முகர்ந்து பார்க்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. ஆயினும் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதால் பிரிட்டனும் இதில் அக்கறையுடன் கவனம் செலுத்தவேண்டும்.

இதற்கிடையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு முற்றுமுழுதாக இந்நாட்டில் இருந்தே வரவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இருபத்து மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது விரலை வைத்துச் சுட்டுக்கொண்டது. இலங்கையில் இப்போது தோன்றியுள்ள அரசியல் கள நிலைகளின் பின்னணியில், மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தனது கையைப் புகுத்த சற்று முனைந்திருக்கிறது.

ஆயினும், இது விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பையும் தாம் பெரிதாக விரும்பவில்லை என்பதனை ஜனாதிபதி சூசகமாக இரண்டொரு நாள்களுக்கு முன்னர் கூறியிருக் கிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தவேண்டிய தீர்வை இந்தியாவால் (வெளியில் இருந்து) கொண்டுவரமுடியாது.

இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களை, தீர்வைக் கொண்டுவருபவர்கள் இதனைத் தெரிந்திருக்கவேண்டும். தீர்வு யோசனைகளை பெரும்பான்மை இன மக்கள் நிராகரித்துவிட்டால் பிறகு எவரும் எதுவும் செய்யமுடியாது. ஆகையால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எங்கள் நாட்டிலேயே வகுக்கப்படவேண்டும்; வரையப்படவேண்டும். மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எல்லா சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் - என்று ஜனாதிபதி இந்திய ஊடகவியலாளர் ஒருவருக்கு விளக்கியுள்ளார்.

மத்திய அரசுடன் மாகாணங்கள் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முடியுமா என்பது குறித்து நாம் ஆராய விரும்புகிறோம். இது மிகவும் முக்கியமானதாகும். அதனாலேயே மேல்சபை அமைக்கும் யோசனையைப் பரிசீலித்து வருகிறோம் - என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இணக்கத்துடன் தீர்வு ஒன்றைக் காண விரும்புகிறேன். ஆனால், எமது நெருக்கடிகளை அவர்கள் விளங்கிக்கொள்வது அவசியம். பெரும்பான்மையினரின் ஆதரவில்லாவிடில் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் இயலாத காரியமாகிவிடும். இவ்வாறாக இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தப்பட்ட விடயத்தை பிறர் தலையீடு இல்லாமல், பெரும்பான்மையினருக்கு இடைஞ்சல் தராத விதத்தில், கையாளவே ஜனாதிபதி விரும்புகிறார் என்பது வெள்ளிடை மலைபோல் தெரிகிறது.

ஆகையால், பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்கள், மஹிந்த அமைக்கவுள்ள இனப்பிரச்சினைத் தீர்வு என்ற குகைக்கு ஊடாகச் சென்று வெளிச்சத்தைக் காண்பதில் பல அம்சங்களை, தந்திரோபாயங்களைக் கையாளும் திறமை பெறவேண்டும். அதில் தேர்ச்சி காண மிகுந்த இராஜதந்திரமும், ஒருமித்த நிலையும் அத்தியாவசியமானவை.

இலக்கு எது என்பதில் தெளிந்த சிந்தனையும், நேர்கொண்ட நோக்கும், அப்பழுக்கில்லாத அரசியல் விவேகமும், தூரப்பார்வையும், காட்டிக்கொடுப்பில்லாத ஒற்றுமையும் பிரதானமாகத் தேவை.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் பல தசாப்தங்களாக, பல வடிவங்களில், பல கட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது. ஆயினும் அவ்வப்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் எமது உரிமைப் பிரச்சினையைத் தமது நிலைப்பாட்டின் பார்வையில் மட்டுமே அடித்தளமிட்டனர். அந்த நிலை மீண்டும் ஏற்படாமல், முன்னெச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செயற்படுவதனை ஆத்மார்த்தமாக்கிக் கொள்வது அவசியத்திலும் அவசியம்.

'தோற்றுப்போன' நிலையில், கிடைப்பதை இரு கரம் ஏந்தி பெற்றுக்கொண்டால் பரவாயில்லை என்ற சிந்தனை தமிழர் தரப்பிடம் கிஞ்சித்தும் வேண்டாம். விவேகமும், ஒற்றுமையும், நேர்மையும் எவ்வேளையும் வெற்றிதரும் என்பதனை நன்றாக உணர்வோமாக.

# மலேஷியாவில் விஸா கட்டுப்பாடு காரணமாக ஆஸிக்கான அகதி படகுகள் குறைந்தன

கோலாலம்பூர், ஜூன் 30

இலங்கையில் இருந்தும் ஆப்கானிஸ்தானில் இருந்தும் விஸா கேட்டு வரும் விண்ணப்பங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு மலேஷியா அரசாங்கம் எடுத்துள்ள முடிவின் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் புகலிடம் தேடிச் செல்வதற்கு வரும் ஆள்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

அடைக்கலம் கோரி படகுகள் மூலம் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததமை காரணமாக அகதிகளின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் நடைமுறையை நிறுத்தி வைப்பதாக கடந்த ஏப்ரல் மாதத்தில் மலேஷியா அரசாங்கம் அறிவித்திருந்தது. மலேஷியா மனித உரிமை நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் ரெம்மே லீ கூறுகையில்-

'மலேஷியா அரசின் இக் கொள்கை ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது' - என்றார்.

ஆஸ்திரேலியா அரசு மலேஷியா அரசுடன் தொடர்ச்சியாக அகதிகள் பிரச்சினை பற்றி ஆலோசனை நடத்தி வந்துள்ளது. அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் படி அது கேட்டுக் கொண்டிருந்தது.

இவ்வாறு அழுத்தங்கள் அதிகரித்ததன் காரணமாக ஆப்கானில் இருந்தும் இலங்கையில் இருந்தும் அகதிப் படகுகள் வருவது குறைந்து விட்டது என்றும் அவர் கூறினார். (ப)

## மடு உற்சவ விசேட பஸ் சேவைகள்; போக்குவரத்துச் சபையினர் ஏற்பாடு

### இன்றும் நாளையும் யாழ். , பருத்தித்துறையில் இருந்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

மடு தேவாலய உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து மடுவுக்கான விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து இன்று 3 பஸ்களும் நாளை வியாழக்கிழமை இரு பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன என்றும் -

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு ஒரு பஸ்ஸும் நாளை காலை 7 மணிக்கு ஒரு பஸ்ஸும் பக்கதர்களின் நன்மை கருதி சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ- 14)

## கிளிநொச்சி செயலகத்தில் இன்றும் நடமாடும் சேவை நடைபெறும்

### நேற்றைய நிகழ்வில் பிரதி அமைச்சர் டிலான் , நாமல்

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பதிவாளர் திணைக்கள நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது. இன்றும் இந்தச் சேவை தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

நேற்றுக் காலை கிளிநொச்சி செயலகத்தில் ஆரம்பமான நடமாடும் சேவை நிகழ்வில் பொது நிர்வாக பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பதிவாளர் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைக்களுக்கான சான்றுப் பத்திரம் இந்தச் சேவையில் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர்களின் பிரச்சினைகளும் இந்த நடமாடும் சேவையில் பரிசீலிக்கப்பட்டன.

இந்தச் சேவை இன்றும் தொடர்ந்து இடம்பெறும் என்றும் ஏனைய பிரதேசங்களுக்கான சேவைகள் அடுத்த கட்டமாக இடம்பெறும் என்றும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ- 1- 405)

## மாநாட்டு மொத்தச்செலவு ரூபா 301 கோடி 50 லட்சம்

### முதல்வர் தகவல்

கோவை, ஜூன் 30

தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு நேரடியாக ரூபா 68 கோடி 50 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், கோவை நகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளுக்காக ரூபா 243 கோடி செலவிடப்பட்டுள்ளது என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

கோவையில் திங்கட்கிழமை அவர் அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு -

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தொடக்க விழாவில் ஏறத்தாழ 2 லட்சம் பேர் பங்கேற்றனர். கலை, இலக்கிய வரலாற்றை விளக்கும் வகையில் அன்றைய தினம் மாலையில் நடந்த இனியவை நாற்பது ஊர்திகள் அணிவகுப்பை 5 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

ஜூன் 24 முதல் 26 ஆம் திகதி நடைபெற்ற கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றரை லட்சம் பேர் கலந்து கொண்டனர். பொதுக் கண்காட்சியை நான்கு நாள்களிலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

இணைய மாநாட்டில் 110 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இம் மாநாட்டில் 500 பேர் பங்கேற்றுள்ளனர். மாநாட்டின் சிறப்பு மலரில் 130 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

ஜூன் 24 முதல் 27 வரை நடைபெற்ற ஆய்வரங்குகளில் 55 தலைப்புகளில் 239 அமர்வுகளில் 913 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமர்வரங்குகளில் 50 நாடுகளில் இருந்து 840 பேர் வருகை தந்தனர். இதில் 152 பேர் கட்டுரை சமர்ப்பித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா (4 பேர்), கனடா (11), சீனா (1), செக்கோஸ்லோவியா (1), பின்லாந்து (1), பிரான்ஸ் (1), ஜெர்மனி (5), கிரீஸ் (10), இத்தாலி (10), ஜப்பான் (2), மலேசியா (23), மொரீசியஸ் (3), நெதர்லாந்து (3), நியூஸிலாந்து (1), ஓமன் (1), ஹாங்காங் (10), ரஷ்யா (1), சிங்கப்பூர் (22), தென்னாபிரிக்கா (3), தென் கொரியா (38) இலங்கை (38), தாய்லாந்து (2), ஐக்கிய அரபு நாடுகள் (1), இங்கிலாந்து (9), அமெரிக்கா (14) ஆகிய நாடுகளில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர். - என்றார்.

## ஈழத்தமிழ்க் குழந்தைகளின் நல நிதிக்காக ஆஸியில் வைரமுத்துவின் கலைநிகழ்ச்சி

சென்னை, ஜூன் 30

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி மற்றும் மெல்போர்ன் நகரங்களில் கவிஞர் வைரமுத்துவின் செம்மொழித் தமிழ்ப் பாடல்கள் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

இலங்கையில் வாழும் தமிழ்க் குழந்தைகளின் நல நிதிக்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சிக்காக இன்று தனது குழுவினரோடு ஆஸ்திரேலியாவுக்கு வைரமுத்து புறப்படுகிறார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் ஜூலை 3 ஆம் திகதி மாலை 7 மணிக்கும், மெல்போர்ன் நகரில் ஜூலை 4 ஆம் திகதி மாலை 6 மணிக்கும் இந்தக் கலைநிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

சுமார் 7 ஆயிரம் திரைப்படப் பாடல்களை கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார். அவற்றில் ஆங்கிலச் சொல் தலவாது, செம்மொழிப் பாடல்கள் மட்டும் இடம்பெறும் மாபெரும் கலை நிகழ்ச்சியை ஆஸ்திரேலியாவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வைரத்தில் முத்துகள் என்ற தலைப்பில் நடைபெறும் இந்த கலை நிகழ்ச்சியில் கவிஞர் வைரமுத்து பங்கேற்கிறார்.

மேலும், நடிகர் விவேக், பின்னணி பாடகர்கள் மனோ, உன்னிகிருஷ்ணன், சுஜாதா, சுவேதா மேனன் உள்ளிட்டவர்களும் கலந்து கொள்கின்றனர். செம்மொழிப் பாடல்கள் பிறந்த பின்னணியை கவிஞர் வைரமுத்து விவரிக்க, அதைத்தொடர்ந்து பாடல் பாடப்படும். அவருடைய முதல் பாடலான 'பொன் மாலைப் பொழுது...' பாடல் முதல் 'உசுரே போகுதே...' பாடல் வரை 40 பாடல்கள் பாடப்படுகின்றன.

இந்த கலை நிகழ்ச்சியில், 'வைரமுத்துவின் ரசிகை' என்ற குறும் நாடகத்தை நடிகர் விவேக் குழுவினர் வழங்குகின்றனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆஸ்திரேலியாவில் உள்ள சரிந்தா அறக்கட்டளை சார்பாக ஏ.வி. மோகன் ஏற்பாடு செய்து வருகிறார். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 17 | 01.07.2010 வியாழக்கிழமை |
| திதி | : பஞ்சமி பி.இ. 01.28 வரை |
| நட்சத்திரம் | : அவிட்டம் காலை 07.34 வரை |
| சுபநேரம் | : 07.26 - 08.56 |
| ராகுகாலம் | : 01.26 - 02.56 |

## யாழ். ஆஸ்பத்திரியின் பணிப்பாளராக பவானி

யாழ்ப்பாணம் , ஜூன் 30

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்திய கலாநிதி திருமதி பசுபதி ராஜா பவானி நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 10 ஆம் திகதியன்று இவர் கடமையைப் பொறுப்பேற்க உள்ளார்.

இவர் வவுனியா வைத்திய சாலையில் சுமார் 5 வருடங்கள் பணிப்பாளராகக் கடமையாற்றி உள்ளார். இவரது இடம் மாற்றத்தையடுத்து வவுனியா வைத்திய சாலையின் பணிப்பாளராக வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## இரு பெண்களுக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கைதடி கயிற்றிசிட்டி கந்தசாமி கோவில் தேர் உற்சவத்தின் போது அடியார் ஒருவரின் சங்கிலியைத் திருடிய இரண்டு பெண்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் புத்தளத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களையும் பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்த இருவரையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓட்டோவில் தப்பிச் சென்ற வேளையில் அப்பகுதி இளைஞர்கள் பிரஸ்தாப பெண்கள் இருவரையும் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத் திருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ- 207)

## விளக்கமறியல்

யாழ்ப்பாணம் , ஜூன் 30

தென்மராட்சிப் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் ஏ.எம்.எம். றியால் உத்தரவிட்டார்.

கடந்த வாரம் ' போரூட் ' நிறுவனத்தினரால் பிரதேச செயலகத்தில் வைத்து மீளக்குடியேறிய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கிய வேளை -

தமது பிள்ளைகளுக்கு சைக்கிள்கள் கிடைத்துள்ளதா என அறிந்து கொள்ள அவரின் சைக்கிளை நிறுத்தி விட்டுச் சென்ற போது அது திருட்டுப் போனமை தெரிந்ததே. (ஒ- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EUROPA
Bildungsforum

# நாட்டிய மயில் 2010

## "நாட்டிய மயில்" 2010ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கடந்த வருடங்களில் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் கொழும்பில் நடைபெற்றது போல அகில இலங்கை ரீதியிலான ஒரு நாட்டிய மயிலை தெரிவு செய்வதற்காக இப்போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு கிரீடமும் அதற்கான பெறுமதி வாய்ந்த பரிசுத் தொகையும் வழங்கப்படும். அவர்களது ஆசிரியர்களுக்கும் கௌரவிப்பும் சான்றிதழும் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகளுக்கான விதிமுறைகள்

1. 20 - 25 வயதிற்குட்பட்டிருத்தல்
2. விடயம் - பதவர்ணம் (தமிழில் அமைதல் வேண்டும்)
3. நேரம் 20 நிமிடங்கள் மட்டும்
4. நடன தாரிகள் பக்கவாத்தியம் அல்லது ஒலி நாடாவை உபயோகிக்கலாம்.

★ விண்ணப்பதாரிகள் தங்களுடைய
முழுப்பெயர்
பிறந்த திகதி
பால்
வதிவிட முகவரி
அடையாள அட்டை இல.
வதியும் மாவட்டம்
தற்போதைய தொழில் (மாணவர்கள் என்றால் குறிப்பிடவும்)
தொலைபேசி இல
நடன ஆசிரியர் பெயர்
நாட்டியத்துறையிலுள்ள அனுபவமும் தகைமைகளும்
என்பன குறிப்பிடப்படவேண்டும்.

குறிப்பு: இது ஒரு போட்டி நிகழ்ச்சியாகையால் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கட்டாயம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
நடன ஆசிரியர்களால் மாணவர்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன், தகவல்கள் உண்மையானதென உறவினரல்லாத இருவரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
விண்ணப்பதாரிகளிடம் எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
விண்ணப்ப முடிவு திகதி: 30.07.2010

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேலதிக தொடர்புகளுக்கும் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**Europa Bildungsforum**
★ இல.27, குளுதாகொட வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல: 0113088961
தொலைநகல்: 2722125

**Europa Bildungsforum**
★ஐரோப்பிய மொழியியற் கல்லூரி
29, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 720 0157

நன்றியுடன் Europa Bildungsforum
(ஐரோப்பிய மொழியியற் கல்லூரி)

(100077)

# 'அமுத விழா' பரிசில் நாள்

சாவகச்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய 'அமுத விழா' (1930 - 2010) பரிசில் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிப் போதனா நிலைய விரிவுரையாளர் வன்னிய சிங்கம் பரந்தாமனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பரிசில்களை யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய பிரதி அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் வழங்குவார்.

(ஒ-207)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடாசலை ஆசிரியை திருமதி லோ.சிவகுமாரன் அவர்களின் பாசமிகு சகோதரன்

**நடராஜா தர்மதேவன்** (கர்பனை)

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/ யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

அதிபர், ஆசிரியர், மாணவர் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர் சங்கம்.

# Bereavement of

*That is a fake*
*The death of my father*
*He born to make*
*Hear I say further*

*Poet born in poverty*
*Rich man in poetry*
*God gave him poems*
*Dad has them as rhythms*

**P.Sathyaseelan**

*Child has its Language*
*Chant in its young age*
*Big child know the usage*
*Began to make as his homage*

*Poems for Child*
*Points for who is wild*
*Play with words*
*"Play" not over in this world*

*Poet is living*
*"Possum" I'm not lying*
*Handsome lover is still living*
*Hands will write until I'm as living*

**Sathyaseelan Vannan**

# 50 ஆவது வருட அரச சேவையைப் பாராட்டுகின்றோம்

அரசாங்க அதிபர் **உயர்திரு.கந்தையா கணேஷ்**

யாழ்.மாவட்டத்தின் அரசாங்க அதிபராக 01.01.2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமையாற்றி, மாவட்டத்தில் மிகவும் நெருக்கடியான, இக்கட்டான சூழ்நிலையில் அர்ப்பணிப்புணர்வுடனும் பொறுமையுடனும் தனது 50 வருட முதிர்ந்த நிர்வாகத்திறத்தின் அனுபவம் மூலம் யாழ்.மாவட்டத்தை வழிநடத்தி நல்லாட்சியுடன் இணைந்த பொதுச் சேவைக்கு தம்மை அர்ப்பணித்ததோடல்லாமல், யாழ்.மாவட்டம் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதற்கான பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, மாவட்ட மக்களின் துன்பதுயரங்களில் பங்கெடுத்து, அவர்களின் நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வுக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த எமது அரசாங்க அதிபர் உயர்திரு.க.கணேஷ் அவர்களின் சேவை எமக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். அவர் தனது அரச அதிபர் சேவையை நிறைவு செய்யும் இந்நாளில் (30.06.2010) அவரது சேவையை நாம் நினைவு கூர்ந்து அவர் காட்டிய வழிநின்று எமது கடமைகளை ஆற்றுவோம் என்பதுடன், அவர் மேலும் பல உயர் பதவிகளை வகித்து இந்நாட்டிற்கும் மக்களுக்கும் தமது சேவையைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/568756)

**மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தினர்,**
**மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

### "வடக்கின் வசந்தம்" அபிவிருத்தித்திட்டம்

1. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
3. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகர மற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
4. கேள்விப்பத்திரங்கள் 01.07.2010 ஆம் திகதியிலிருந்து 15.07.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் 15.07.2010 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் 3 மணிக்கு கேள்விப்பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப்பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப்படிவங்களை பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும், மேலதிக தகவல் தேவைப்படின் பாடசாலைகள் வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| வேலையின் விவரங்கள் | மீளளிக்கமுடியாத படிவக்கட்டணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் |
|---|---|---|
| பாடசாலைத் தேவைகளுக்கான தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கலும் | 5,000.00 | 50,000.00 |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பாடசாலை வேலைகள் பகுதியினில் வழங்கப்படும் இரண்டு படிவங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ளவேண்டும்.
7. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும், மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையில் இட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மாவட்டத் திட்டமிடல் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 15.07.2010 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் இடப்படவேண்டும்.
8. குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.

க.கணேஷ்,
மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்,
அரச அதிபரும்/மாவட்டச் செயலரும், யாழ்.மாவட்டம்.

(சி/568454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களின் விவரங்கள் கணனி மயப்படுத்தப்படும்

## தரவு திரட்டும் பணிகள் ஆரம்பம்

மூளாய், ஜூன் 30

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

மேற்படி பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பங்களினதும் தொழில், வருமானம், கல்வி நிலை, வீட்டு வசதி, குடிநீர் மற்றும் மலசலகூட வசதி உட்பட ஏனைய அனைத்து விடயங்களும் சேகரிக்கப்பட்டு கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வலி. மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக குடும்பங்களின் தகவல் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக குடும்பங்கள் தொடர்பான சகல விவரங்களையும் வெளிக்கொண்டு வரக்கூடிய வகையிலான வினாக்கொத்து வடிவில் அமைந்த தரவு சேகரித்தல் படிவங்கள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கடமையிலிருக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறான தரவு சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

இவ்வாறு சேகரிக்கப்படும் அனைத்துத் தகவல்களும் கணனியில் களஞ்சியப்படுத்தப்படும். தேவைக்கேற்ப தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும் இம் முயற்சி பெரிதும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (50-99)

## சர்பால் வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள சப்பல் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த இந்த வீதி தற்போது தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப்பட்டு வரு கின்றது.

சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகச் செல்லும் இந்த வீதியில் ஒரு பகுதி தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டுள்ளது. (50-224)

## யாழ்.மாவட்டத்தில் கடந்த 6 மாதத்தில் 19பேர் டெங்கு நோயினால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆறு மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 356பேர் டெங்கு நோய்த்தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

பருத்தித்துறையில் கடந்த 25ஆம் திகதியில் படைவீரர் ஒருவரும் டெங்கு நோயினால் மரணமடைந்துள்ளார். அவருடன் கடந்த ஆறு மாதத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தகவலை யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி சிவசங்கர் திருமகள் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் கடந்த ஆண்டு டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் முழுமூச்சில் செயற்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் குடாநாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 356பேர் டெங்கு நோய்த்தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

ஒரு இராணுவ வீரர் உட்பட 19 பேர் உயிரிழந்துள்ளனர். டெங்கு நோய்த்தாக்கத்தினைக் கட்டுப்படுத்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஊடாக கிராமங்கள் தோறும் டெங்கு ஒழிப்புக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (50-9)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மோட்டார் சைக்கிள் சில்லு மாணவனுக்கு சிக்கி சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு இளைஞர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எம்.விமலராஜ் (வயது 18) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (50-207)

## காச நோயாளிகள் இனங்காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் இருவருக்கு காசநோய் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இருவரும் யாழ். பண்ணை மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு காசநோய் ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட காசநோய் தடுப்புப் பிரிவினரால் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆதார வைத்தியசாலைகளிலும் காசநோய் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் சாவகச்சேரி வைத்தியசாலையில் காசநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்ட காலம் இருமல், உடல்மெலிவு, பசியின்மை, இரவுக் காய்ச்சல், அதிகவியர்வை போன்ற அறிகுறிகள் காணப்படின் வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

## அமைச்சர் டியூ குணசேகர 10ஆம் திகதி யாழ்.வருகிறார்

### கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில் உரையாற்றுவார்

யாழ்ப்பாணம், ஜூன் 30

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்.வரும் அமைச்சர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 67ஆவது ஆண்டு நினைவுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

இந்தக் கூட்டம் அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் து.குகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. தோழமைக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

## பார்வதியம்மாள் மீண்டும் வல்வை ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாய் பார்வதியம்மாள் மீண்டும் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முன்னர் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த பார்வதியம்மாள் மேலதிக சிகிச்சைக்காக இம்மாத நடுப்பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

உணவு உட்கொள்வதில் அவர் சிரமங்களை எதிர்நோக்கியதால் சில பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது அவர் மீண்டும் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (50-16)

## வைத்தியசாலைச் சிற்றூழியர்களுக்கு சீருடைத்துணி வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்களுக்கு இவ்வாண்டுக்கான சீருடைத்துணிகள் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சீருடைத் துணிகள் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கப்பகுதியில் வழங்கப்படுவது வழக்கம்.

தற்போது ஆறுமாதங்கள் கழிந்த நிலையிலும் இதுவரை சீருடைத்துணிகள் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை சென்றாண்டில் சீருடைத் துணிகள் விநியோகிக்கப்பட்ட போதிலும் அதற்கான தையல் செலவு இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டது. (50-224)

## வலிகாமம் மேற்குப் பகுதியில் பொலிஸாரின் இரவுநேர ரோந்து

மூளாய், ஜூன் 30

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை பொலிஸார் அதிகரித்துள்ளனர்.

கிராமிய விழிப்புக் குழுக்களின் அங்கத்தவர்களுடன் இணைந்து இவ்வாறான ரோந்து நடவடிக்கைகள் தினசரி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் குற்றச் செயல்கள் இடம் பெறாமல் தடுக்கும் முகமாகவே இந்த ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இவ்வாறு இரவு நேரத்தில் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக மேலதிகமாகப் பொலிஸார் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். (50-99)

## யாழ்ப்பாணத்தில் தொழில் ரீதியான தகவல் திரட்டும் செயற்றிட்டம்

மூளாய், ஜூன் 30

யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழில் ரீதியிலான தகவல் திரட்டும் செயற்றிட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை புள்ளி விவரத்திணைக்களத்தின் யாழ். கிளை மேற்கொண்டு வருகின்றது.

தொழில் ரீதியிலான பரம்பல் மற்றும் தொழில் பல அளவு உட்படப் பல்வேறு தரவுகள் சேகரிக்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கைக்காக மேற்படி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கிராம மட்டத்துக்குச் சென்று விவரம் திரட்டவுள்ளனர். (50-99)

## யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் விவரங்கள் சேகரிப்பு

மூளாய், ஜூன் 30

யாழ்.மாவட்டத்தில் உள்ள யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான பெண்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்தகால யுத்தம் காரணமாக கணவனை இழந்த அல்லது கைவிடப்பட்ட பெண்கள் தொடர்பான தகவல்களே தற்போது குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் திரட்டப்பட்டு வருகின்றன.

இத்தரவு திரட்டும் நடவடிக்கை குறித்து அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் யாழ்.செயலகத்தினால் அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன.

தற்போது கிராமமட்டத்தில் மேற்படி தகவல் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. (50-99)

கோப்பாய் மக்கள் வங்கி நீடித்த கருமபீட அலகின் முதலாவது சிசு உதான அலகு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சித்திரவடிவேல் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும்- மக்கள் வங்கி ஓய்வுபெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர் க.மகேஸ்வரன் வங்கி அலகின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்திலும்- மக்கள்வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகாந்தன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும்- மக்கள் வங்கியால் பாடசாலை பயன்பாட்டிற்கென வழங்கப்பட்ட தொலை பேசியை பாடசாலை அதிபர் ம.ஞானசம்பந்தனிடம் கோட்டக்கல்வி அதிகாரி கையளிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாதி தேவை

வைத்திய நிலையத்திற்கு தாதி தேவை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

**முருகானந்தா வைத்திய நிலையம்,**
இல.34, புங்கன்குளம், பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 071 8839393 (100065)

## TVகள், Box வகைகள் விற்பனைக்கு

புதிய, பாவித்த Sony wega 21 "TV கள் Panasonic 21" Flat TV கள் Box வகைகள், Pentium 4 Computer, FH Radio (digital Tuning, Casete) என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: R.ஸ்ரீமகேஸ்வரன் [அப்பளக் கொம்பனி],
சீனிப்புளியடி ஆரம்பப் பாடசாலை அருகில்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே.: 0771393670 (100066)

## வீடு, காணி விற்பனைக்கு

வடலியடைப்பு பிரதான வீதியில் மதவடி சந்திக்கு அருகில் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 078 9135002, 021 320 5646


# சனசமூக நிலையங்களின் சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலி.கிழக்குப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இச் சம்மேளனத்தின் தலைவராக த.கிருஷ்ணராசா, செயலாளராக அ.கணபதிப்பிள்ளை, பொருளாளராக கா.கதிர்காமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 19 பேர்கொண்ட இச்சபை உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சபை வலி.கிழக்கு பிரதேச சபையின் அனைத்து வேலைத் திட்டங்களிலும் பங்கெடுப்பதுடன் பிரதேசத்தில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் நல்ல முறையில் செயற்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-டி-ரி)

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஒவ்வொரு பிரதேச சபை பிரிவுகளிலும் உருவாக்கப்பட்டுள்ள சனசமூக நிலைய சம்மேளனங்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(எ-டி-ரி)

# வீதிகளைப் புனரமைக்க மதிப்பீடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலி.கிழக்குப் பிரதேசத்தில் இதுவரை காலமும் அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து, அண்மையில் விடுவிக்கப்பட்ட இடைக்காடு, வளலாய் பிரதேசங்களில் வீதிகள் புனரமைப்புத் தொடர்பான மதிப்பீடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 20 வீதிகள் இந்த மதிப்பீட்டிற் காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புத்தூர் பிரதேசசபை செயலாளர் த.நடராசா தெரிவித்தார்.

இதேவேளை உலக உணவுத் திட்டத்தின் கீழ் 13 வீதிகள் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. அச்சுவேலி ஜோன்ராஜ் வீதி, உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை வீதி என்பவற்றின் திருத்த வேலைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-டி-ரி)

# "நெல்சிப்" திட்டத்தின் அறிக்கைகள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 30

''நெல்சிப்'' திட்டத்தின் கீழ் வலி.கிழக்கு பிரதேசத்தில் 05 கொத்தணி வலயங்களாகப் பிரித்து அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் தொடர்பாக சனசமூக நிலையப் பிரதிநிதிகளுக்குக் கடந்த 28ஆம் திகதி விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளைக் கிராமங்கள் தோறும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக புத்தூர் பிரதேச சபையின் 5 உப அலுவலகங்களிலும் மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த சனசமூக நிலையப் பிரதிநிதிகள் இந்த அறிக்கைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-டி-ரி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப் படிப்புகள் பீடம்

**பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி**
(MA in Public Administration)
**பண்பாட்டியலில் முதுகலைமாணி**
(MA in Cultural Studies)
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை**
(Second semester Examination)

மேற்படி கற்கை நெறிகளுக்கான பரீட்சை எதிர்வரும் 12.08.2010 இல் ஆரம்பமாகும். இதற்குத் தகுதிவாய்ந்த மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகத்தில் பெற்று 10.07.2010 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டையை 01.08.2010 இல் இருந்து பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
29.06.2010 (சி/568749)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28.01.1934
மறைவு: 30.06.2009

அமரர்
**கார்த்திகேசு யோசேப்**
(ஓய்வுபெற்ற பரிசாரகர்,
யாழ்.போதனா வைத்தியசாலை)

முகம் மறைந்து போய் ஓராண்டு ஆனதப்பா
அகம்விட்டு அகலாத நினைவுகளால் அழுது புலம்புகின்றோம்
நீங்கள் வளர்த்த அன்பு மலர்கள் வாடுதப்பா
எங்களை பாசத்தோடு வளமாக வாழவைத்ததை
எக்காலமும் நன்றியுடன் மறவோம் அப்பா
அன்பின் இறைவா கார்த்திகேசு- யோசேப் நித்திய
பேரின்ப வீட்டில் நிலையாய் நிலைத்திருக்க திருக்குடும்ப மாதா
வழியாய் உம்மைப் பிரார்த்திக்கின்றோம்

ஞானப்பிரகாசர் வீதி, மனைவி, பிள்ளைகள்,
மல்வம், உடுவில், சுன்னாகம். உற்றார், உறவினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் தம்பிரத்தினம்
**சுரேந்திரன்**
(ஆனந்தன்)

மண்ணில் மகிழ:
11.05.1964

நெஞ்சம் நெகிழ:
31.05.2010

நித்திய நிலையடைந்த எம் நித்திய
ஆனந்தமே
எங்கள் குடும்பத்தின் குல
ஒளியே-இன்று
நித்திலம் தனில் மறைந்து எம்
நெஞ்சத்தின் மறவாத பக்கங்களில்
குடிகொண்டு
எம்மை வாழவைக்கும் எங்கள்
குலத் தெய்வமே...

உங்கள் நீங்காத நினைவுகளோடு
என்றும் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

சுசிலா (மனைவி)

நிரந்தர முகவரி:
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.
தற்காலிக முகவரி:
சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**கந்தசாமி மனோன்மணி (மணி)**
[முறிவு நேறிவு வைத்தியர், கட்டுடை, மானிப்பாய்]

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி மனோன்மணி நேற்று (29.06.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்காள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம், வீரசிங்கம், குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகம்மா, இரத்தினம், பாக்கியம், சரஸ்வதி, இராசையா, நாகேஸ்வரி, கதிரமலை ஆகியோரின் மைத்துனியும் சதீஸ்குமார் (லண்டன்), தயாநிதி (ஜேர்மனி), பவாநிதி (பனை தென்னை வள அ.வி.கூ.சங்கம்) சிவநிதி (ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்), உதயகுமார் (ஜேர்மனி), ஜெயாநிதி ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராணி (லண்டன்), சக்திவேல் (ஜேர்மனி), சுதாகரன் (பிரான்ஸ்), முருகானந்தன், சுவர்ணா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சுயந்தன், வினிசியா, ஜெரன்சிகா, கபில்ராஜ், கஜனி, யூட்கனிஸ்ரன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை, மானிப்பாய். (100064) தகவல்: குடும்பத்தினர்

## 2 ஆம் ஆண்டு நிறைவு நினைவு

அமரர்
**காசிப்பிள்ளை பஞ்சாட்சரம்**

தோற்றம் 04.05.1927 மறைவு 22.06.2008

திதி: சங்கடகர சதுர்த்தி

அண்ணனெம் பருத்திப் பிள்ளையாரொடும்
அருள்சேர் தம்பி
நல்லை-எம் இணுவைக் கந்தன் நலன்தரு
விளாத்தியானின்
எண்ணமும் வாழ்வுமாய் எங்கள் இதயத்தில்
நீங்காதென்றும்
நல்லொளித் தீபமாய் எந்நாளிலும்
வாழ்வீர் அப்பா
இல் அக விளக்கே போற்றி!!!

'செல்வபதி'
பாப்பா தோட்ட வீதி, இணுவில் மேற்கு. (100073) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**சங்கரப்பிள்ளை இராமசாமி**
(ஓய்வுபெற்ற ஊழியர்,
பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)

கனால் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இராமசாமி நேற்று (29.06.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் வல்லிபுரம், சுந்தரம், நடராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பாக்கியம், கந்தசாமி, தருமலிங்கம், கதிர்காமு ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, நாகராசா, Dr.விக்கினேஸ்வரராஜா, சிறிஸ்கந்தராசா, காலஞ்சென்ற யோகராஜா மற்றும் பஞ்சாட்சரதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோன்மணி, அமிர்தரஞ்சினி, Dr.ஊதிகா, விஜயமாலா, சின்னத்துரை (அம்பாள் கிறசர், ஊரெழு) ஆகியோரின் மாமனும் சரவணன்-சங்கீதா, முகுந்தன், பிரசன்னா, கலாதரன்- கார்த்திகா, ஐங்கரன், காயத்திரி, சிறீரங்கன், தர்சிகா, கஸ்தூரி, கௌரி சங்கர், பவித்திரன், கௌதமி, சங்கீர்த்தனன், அபிராமி, காலஞ்சென்ற பிரசாத் மற்றும் துளசிகா ஆகியோரின் பேரனும் பிரஜீனின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2010) முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி, தகவல்:
மாதகல். (100071) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊறணி அந்தோனியாரின் ஆசி பெறுவதற்கு பெரும் எண்ணிக்கையில் திரண்ட பக்தர்கள்

ஆனைக்கோட்டை,ஜூன்30

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் திருவிழாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆலயத்தைச் சூழவுள்ள பல கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து வெவ்வேறு திக்குகளிலிருந்து வருகை தந்த பக்தர்கள் கண்ணீர்மல்கி புனித அந்தோனியாரைத் தரிசித்தனர்.

உடைந்து போயும், தரைமட்டமாகியுமுள்ள தமது வீடுகளைத் தூரத்திலிருந்தே அவதானித்த மேற்படி கிராம வாசிகள் தமது உள்ளக் குமுறல்களை புனித அந்தோனியார் முன் சமர்ப்பித்தமையானது உள்ளத்தை உருக்குவதாயிருந்தது.

இருபது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் அகதி வாழ்க்கை இனியும் முற்றுப் பெறாதா என்ற ஏக்கமே தம் முன்னால் விரிந்திருந்ததாக ஒரு கிராம வாசி தெரிவித்தார். தூர்ந்துள்ள தமது வீடு வாசல்களின் கட்டடங்கள் போலவே தமது மனங்களும் தூர்ந்தே கிடப்பதாக இன்னொரு இடம் பெயர்ந்தவர் கண்ணீருடன் தெரிவித்தார்.

''எப்போது எனது சொந்த மண்ணிற்குத் திரும்புவேன்...'' என்று ஒரு பக்தர் அனைவருக்கும் முன்னால் குமுறி அழுததையும் காணமுடிந்தது.

மேற்படி ஆலயத்தின் பிரதான மண்டபக் கூரைகள் கழற்றப்பட்டு காட்சி தந்தது. ஆலயச் சுற்றாடல்கள் எங்கும் காட்டுமரங்கள் வளர்ந்து பெரிய பற்றைகளாகக் காணப்பட்டன. பக்தர்கள் எவரையும் ஆலய வளவிலிருந்து ஓரடிகூட வெளியே செல்ல படையினர் அனுமதிக்கவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்த மேற்படி திருவிழாவில், தூர இடங்களிலிருந்து முப்பதுக்கு மேற்பட்ட வாகனங்களில் வருகை தந்த 1500இற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அனுமதிக்கப்படவில்லை.

மேற்படி திருவிழாவை ஒழுங்கு செய்த ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கையில், தாம் குறைந்த பட்சம் மாதத்தில் ஒரு தடவையாவது ஊறணிக்குச் சென்று மேற்படி ஆலயத்தில் பூசை, வழிபாடுகளை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கான அனுமதியை பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர். (50-20-224)

## தேங்காய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.குடாநாட்டில் தேங்காயின் விலை திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

சந்தைகளில் தேங்காய் ஒன்று 20ரூபா முதல் 30 ரூபா வரை விற்கப்படுகின்றது.

தென்மராட்சி மற்றும் தீவுப் பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான தேங்காய்கள் யாழ் . நகருக்கு தினமும் எடுத்துவரப்படுகின்றன.

அதே போன்று புத்தளத்தில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான தேங்காய்கள் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன.தேங்காய்கள் அதிகளவில் வந்து சேர்வதால் அவற்றின்விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

(50-224)

## போதனா வைத்தியசாலையில் 16ஆம் இலக்க விடுதியும் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.போதனா வைத்தியசாலை 16 ஆம் இலக்க விடுதியும் நேற்று முதல் வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டது.போதனா வைத்தியசாலையில் நவீன வசதிகளைக் கொண்ட மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த மாடிக் கட்டடத்தை அமைப்பதற்கு முன்னோடியாக ஏற்கனவே 17 ஆம் 18 ஆம் இலக்க விடுதிகள் வேறு இடங்களுக்கு இடமாற்றப்பட்டன. நேற்று 16 ஆம் இலக்க விடுதியும் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

இந்த நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத்தை அமைப்பதற்காக மேற்படி விடுதிகள் உடைக்கப்படவுள்ளன.

தற்போது அமைக்கப்படும் இந்த மாடிக் கட்டடத்தின் மூலம் வைத்தியசாலையின் இடநெருக்கடி ஓரளவு தீர்ந்து விடும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (50-224)

## குடத்தனை வீதியின் ஒரு பகுதி இதுவரை திருத்தப்படவில்லை

தென்மராட்சி,ஜூன்30

வரணி பிரதேசத்தின் ஊடாக 6 ஆம் கட்டை குடத்தனை வீதியின் ஒரு பகுதி வீதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இன்றுவரை பாழடைந்த நிலையில் உள்ளது. இவ்வீதி புனரமைப்பில் பருத்தித்துறை பிரதேச வீதி அதிகார சபையினர் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயற்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசம் மக்கள் குடியிருப்பு அல்லாத தரவைப் பிரதேசமாக விளங்குவதுடன் சிறிய காட்டுப் பிரதேசமாகவும் உள்ளது. மாரி காலத்தில் இவ்வீதிக்கு மேலால் வெள்ளம் பாய்ந்தோடுவதனால் பாதைக் கற்கள் அள்ளப்பட்டு மண்பாதையாகவே தற்சமயம் காட்சியளிக்கின்றது. இப்பகுதியில் சிறிய கண்மதவு ஒன்று முழுதாக உடைந்த நிலையில் வாகனப் போக்குவரத்து இடம் பெறுகின்றது.

தற்சமயம் தென்பகுதியில் இருந்து வரும் கூலர் வாகனங்கள், வியாபாரிகளின் வாகனங்கள் படைத்தரப்பினரின் வாகனங்கள் யாவும் இப்பாதையூடாகவே வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு பயணிக்கின்றன. வீதி அபிவிருத்திச் சபையினரின் கவனம் இவ்வீதியின் புனரமைப்பு சார்பில் செலுத்தப்படல் வேண்டும் என பயணிகள் தரப்பில் கோரப்படுகின்றது. (50-122)

## படித்த மகளிர் குடியேற்றத்துக்கு கடந்த சனிமுதல் மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு மின்விநியோகம் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பிரிவு மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன், வடபிராந்திய கட்டமைப்பு பொறியியலாளர் கே.லிங்கரூபன் ஆகியோர் கலந்து கொண்டு மின் விநி யோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இப் பகுதிக்கு மின் விநியோகம் வழங்கவென 160 கே.வி. மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-207)

## சாவகச்சேரி பஸ் நிலையத்தில் உள்ள மலசல கூடத்திலிருந்து துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள மலசலகூடம் உள்ளே செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது. இதனால் இதனுள்ளே செல்பவர்கள் மூக்கைப் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இந்த மலசல கூடம் பஸ் நிலையத்திற்கு அருகே உள்ளதால் சாவகச்சேரிக்கு செல்வோரும் சுற்றுலாப் பயணிகளும் செல்வதாகவும் மலசலகூடத்தைப் பயன்படுத்துவதற்கு கட்டணம் அறவிடப்படுகின்ற போதிலும் மல சலகூடத்திற்குள் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது.

மேலும் மல சலகூடச் சுவர்களில் வெற்றிலை உமிழ்ந்த கறை உறைந்து போயிருப்பதையும், மலசலகூடத்தில் உள்ள கதவுகளின் கீழ்ப்பகுதி அரை அடி தூரத்திற்குப் பழுதடைந்து ஓட்டையாக உள்ளது.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பயன்படுத்தும் மலசல கூடத்தினை பாவிப்பதற்கு கட்டணம் அறவிடும் நிர்வாகத்தினர் அதனை ஒழுங்காகப் பராமரித்து மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் வைத்திருக்கமாட்டார்களா என கூறப்பட்டது. (50)

## அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான மூன்றுநாள் பயிற்சிப் பட்டறை

நாவற்குழி,ஜூன்30

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளையின் அனுசரணையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான 3 நாள் பயிற்சி நெறி ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஹோட்டல் கிறீன் கிராஸில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட 3 துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

சுகாதார, கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன்,பிரதேசசெயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

அனர்த்த முகாமைத்துவதத்தில் சிறப்பு பயிற்சி பெற்ற நௌஷாட் வள ஆளணியினராகக் கலந்து கொண்டார்.

அனர்த்தம் தொடர்பான இடர் காரணிகளை இனங்காணலும், அவற்றைக் குறைத்தலும் என்பவை தொடர்பான விழிப்புணர்வும், செயற்திறனும் அரச அலுவலர்களுக்கு இவரால் வழங்கப்பட்டது.

இடர் வருமுன் காப்பது தொடர்பான விடயங்களே இதில் முன்னுரிமையாக விவாதிக்கப்பட்டன.

(50-121)

## புங்குடுதீவு அந்தோனியார் திருவிழா வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

புனித யாத்திரை தலமான புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு திருப்பலி பூசை இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை விழா நடைபெற்று நற்கருணைப் பவனி, ஆசிர்வாதம் என்பன இடம் பெறும்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை திருவிழா இடம்பெறும். அன்றைய தினம் காலை 7மணிக்கு கூட்டு வழிபாடும், 8.30 மணிக்குத் திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து 9.30 மணிக்கு அந்தோனியார் முனிந்திரானின் தேர் பவனியும் நடைபெறும்.

நண்பகல் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (50-224)

## அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளுக்கு கேபிள் தொலைபேசி இணைப்பு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்30

அரியாலை, கொழும்புத்துறை, சுண்டிக்குழிப் பகுதிகளுக்கு ஸ்ரீலங்கா நிறுவனத்தின் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

இதற்கென இலந்தைக்குளம் வீதியில் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை விரைவில் அமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். ரெலிக் கொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரிவர்த்தனை நிலையம் ஊடாக அரியாலை, கொழும்புத்துறை, சுண்டிக்குழி போன்ற இடங்களுக்கான தொலைபேசி இணைப்புக்கள் மேலும் அதிகரிக்கப்படும் - என்றுதெரிவிக்கப்பட்டது. (50-224)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவிழாத் திருப்பலியை குருக்கள் இணைந்து ஒப்புக் கொடுப்பதையும் முதல் படத்திலும், திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும், புனித அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனி இடம் பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் : ஆனைக்கோட்டை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழர்களைக் குறிவைக்கும் இந்தியாவின் இரகசிய நடவடிக்கைகள்

நிராஜ் டேவிட்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் இந்தியா சென்று இந்திய அரசுடன் சில ஒப்பந்தங்கள் செய்துவிட்டு திரும்பியிருந்த சந்தர்ப்பத்தில் தென் இந்திய ஊடகவியலாளர் ஒருவருடன் தொடர்புகொண்டு அங்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிப் பேசினேன்.

இந்தியாவும் இலங்கையும்


மன்மோகன் சிங்

வெளிப்படையாகக் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்கள் ஒருபுறம் இருக்க, இரகசிய ஒப்பந்தங்கள் சிலவற்றிலும் இந்த இரண்டு நாடுகளும் கைச்சாத்திட்டிருக்கலாம் என்று தாம் நம்புவதாக அந்த ஊடகவியலாளர் தெரிவித்தார்.

குறிப்பாக இந்த இரண்டு நாடுகளின் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து அல்லது இலங்கை புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் இந்தியப் புலனாய்வுப் பிரிவு ஓர் இரகசிய நடவடிக்கையை மேற்கொள்ளும்படியான ஒப்பந்தம் ஒன்றும் அங்கு கைச்சாத்திடப்பட்டிருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது என்றும் அந்த ஊடகவியலாளர் சந்தேகம் தெரிவித்திருந்தார்.

ஆனால், அந்த இரகசிய ஒப்பந்தம் பற்றிய எந்த விடயமும் வெளியில் விடப்படவில்லை என்றும், வெறும் ஊகங்களின் அடிப்படையில்தான் இந்த சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசும் இந்தியாவின் புதுடில்லியும் இணைந்து மேற்கொள்ளும் இரகசியப் புலனாய்வு நடவடிக்கை என்றால் அது ஒன்றும் அமெரிக்காவைக் குறிவைத்தோ, அல்லது சீனாவைக் குறிவைத்தோ இருப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை. அது நிச்சயம் ஈழத் தமிழரை - அவர்களிடம் எஞ்சியிருக்கும் பலத்தை - அவர்களது எதிர்காலச் செயற்பாட்டை குறிவைத்துத்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படி என்னதான் இரகசிய நடவடிக்கைகளை ஈழத் தமிழருக்கு எதிராக இந்தியா செய்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது?

தலையைப் போட்டு பிய்த்துக்கொண்டு இருக்கின்ற பொழுது, தமிழ்நாடு விழுப்புரம் ரயில் தண்டவாள தகர்ப்புச் சம்பவம் பற்றிய செய்தி வெளியாகி இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ குழுவினரது இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் இன உணர்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும், இந்திய மத்திய அமைச்சர் பா.சிதம்பரத்தின் மீதான கொலை முயற்சி என்றும் ஆரம்பத்தில் இந்திய அரச அதிகாரிகளால் பரபரப்பாகக் குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் மறுதினமே தமிழ்நாட்டு ஊடகங்களால் அந்தச் சம்பவம் மத்திய - மாநில அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்று அடையாளப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் பரவலாக உருவாகி வரும் ஈழத் தமிழர் ஆதரவு அலை, அந்த அலையினூடாக தமிழ் நாட்டில் உருவாகிவிடக்கூடிய பிரிவினைவாதம் போன்றனவற்றைத் தடுக்கும் நோக்கத்தில், இந்தியப் புலனாய்வுப் பிரிவு இனிவரும் காலங்களில் மேற்கொள்ளக்கூடியதான சதிகளின் ஆரம்பமாக அந்த விழுப்புரம் ரயில் தண்டவாள தகர்ப்பு நடவடிக்கை அமைந்திருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து, சிரஞ்சிவி மாஸ்டர் என்ற விடுதலைப் புலிகளின் ஒரு புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர் கைது செய்யப்பட்ட சம்பவம் தமிழ் நாட்டில் இடம்பெற்றிருக்கின்றது. இவரது கைது பற்றிய செய்தியை இந்திய பொலிஸார் ஆரம்பத்தில் வெளியிடவில்லை. அவரது கைது இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அவரது கைது பற்றிய செய்தி தமிழ்நாட்டில் உள்ள தமிழ் உணர்வாளர்களிடையே பரவியதைத் தொடர்ந்துதான் அந்தக் கைதை தமிழ்நாடு பொலிஸார் ஒப்புக்கொண்டு வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அதேபோன்று இலங்கையில் இருந்து தப்பி தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள பல விடுதலைப் புலி உறுப்பினர்கள், புலிகளின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டுகின்றனர் எனவும் அவர்கள் குடும்ப சகிதமாகத் இரகசிய சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு கடுமையாக விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தமிழ் நாட்டில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களை மனதில் பதித்துக்கொண்டு, இப்பொழுது மீண்டும் பழைய கேள்விக்கே வருவோம்.

ஈழத் தமிழர்களைக் குறி வைத்து இந்தியா திட்டமிட்டுள்ள - நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இரகசிய நடவடிக்கைகள் என்ன?

இந்தியா மேற்கொள்வதாகக் கூறப்படுகின்ற இரகசிய நடவடிக்கைகள் பற்றி உறுதியாகத் தெரியாவிட்டாலும், இந்தியா செய்யக்கூடியதான அந்த நடவடிக்கைகளை ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

முதலாவது தமிழ்நாட்டில் இந்திய விரோத அல்லது தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கையை முன்வைக்கக்கூடிய சக்திகளைப் பலவீனப்படுத்தவேண்டிய தேவை இந்தியாவின் நடுவண் அரசுக்கு இருக்கின்றது. ஈழத் தமிழர் ஆதரவு என்ற பெயரில் அங்கு பரவலாக எழும்பியுள்ள தமிழ் உணர்வும், ஈழத் தமிழர் மீதான இன அழிப்புக்கு இந்தியாவும் துணைபோயிருந்ததால். எழுந்துள்ள இந்திய விரோத நிலைப்பாடும், கால ஓட்டத்தில் பாரிய எதிர்விளைவுகளை தமிழ்நாட்டில உருவாக்கிவிடச் சந்தர்ப்பம் இருக்கின்றது.

எனவே, இதனை முளையிலேயே கிள்ளிவிடவேண்டிய தேவை இந்தியாவின் மத்திய அரசுக்கும், இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பதில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்ற இந்தியப் புலனாய்வுப் பிரிவுகளான 'றோ' மற்றும் 'சீபிஐ' போன்றனவற்றுக்கும் இருக்கின்றது. தமிழ்நாட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவான 'கியூ' பிரிவுடன் இணைந்து இந்த பணிகள் தமிழ் நாட்டில் முடுக்கி விடப்பட்டிருக்கலாம் என்று தமிழ் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்ததாக, ஈழத் தமிழர்களின் எதிர்கால நகர்வுகளைக் கண்காணிக்க வேண்டியது மற்றும் அந்த நடவடிக்கைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றுவது அல்லது குழப்புவது, முடிந்தால் ஈழத் தமிழர்களின் நகர்வுகளை கையகப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை இந்தியா செய்வதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

தமிழ் இன அழிப்புக்கு பல வழிகளிலும் காரணமாக இருந்த நாடு இந்தியாதான் என்பது அனைத்து ஈழத் தமிழருக்கும் நன்றாகத் தெரியும். இந்தியாவைப் பழிவாங்குவதற்கு புலம்பெயர் ஈழத் தமிழர்களில் பலர் துடித்துக்கொண்டிருகின்றனர் என்பதும் இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும். வன்னியில் இருந்து தப்பி வந்து வெளிநாடுகளில் ஒன்று சேர்ந்துவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் இந்திய விரோத மனப்பான்மை சற்று அதிகமாகவே இருக்கும் என்பதை இந்தியா நிச்சயம் ஊகித்திருக்கும். எனவே, அதற்கு எதிராக இந்தியா ஏதாவது நடவடிக்கை எடுத்தேயாக வேண்டிய கட்டாயத்தில் நின்றுகொண்டிருக்கின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் மேற்குலகில் அவர்கள் மிகப் பெரிய அளவில் தீர்மானம் எடுக்கும் சக்திகளாக உருவாகிக்கொண்டு வருவதை இந்தியா அறிந்திருக்கின்றது. ஈழத் தமிழர்களின் அடுத்த தலைமுறை மேற்குலக நாடுகளில் முக்கிய பங்கை வகிக்கப் போவதையும் இந்தியா நன்கு அறிந்திருக்கின்றது. எனவே, ஈழத் தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் இந்திய விரோத மனப்பான்மையுடன் வளராதபடி - ஒன்றுபடாதபடியான - நகர்வை எடுக்கவேண்டிய தேவையும் இந்தியாவுக்கு இருக்கின்றது.

அடுத்ததாக, விடுதலைப் புலிகளின் பயிற்றப்பட்ட போராளிகள் இந்தியாவின் உள்ளூர் கிளர்ச்சியாளர் களான நக்சலைட்டுக்கள், வேறு தீவிரவாத அமைப்புகளின் கைகளில் விழுந்துவிடாமல் தடுக்கும் தேவையும் இந்தியாவுக்கு இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் பெரும் ஆயுதக்

சிதம்பரம்

கடத்தலில் ஈடுபட்டமை இரகசியமல்ல. பலவிதமான நவீன ஆயுதங்களை பெருமளவில் கொள்வனவு செய்வதற்கும் - அதனை கடல்வழியாக நகர்த்துவதற்கும், விநியோகிப்பதற்குமான வலைப்பின்னல், ஆளணி வசதிகள், பலம் ஆகியன விடுதலைப் புலிகளின் சர்வதேச வலைப்பின்னலுக்கு இருக்கின்றது என்பதும் இந்தியாவுக்கும் தெரியும். இந்தியா மீது தீராப் பகைகொண்டுள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு அப்படியான ஆயுதங்களை இந்தியாவில் இருக்கும் பிரிவினைவாத சக்திகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையைத் தடுக்கவேண்டிய தேவையும் இந்தியாவுக்கு இருக்கின்றது.

இதுபோன்ற பல்வேறு காரணங்களுக்காக இந்தியா இலங்கை புலனாய்வுப் பிரிவினருடைய உதவியுடன் புலம்பெயர் ஈழத் தமிழரைக் குறிவைத்து சில இரகசிய



நடவடிக்கைகளை எடுப்பதற்கு இருக்கும் சந்தர்ப்பத்தை எவரும் இலகுவில் மறுத்துவிடமுடியாது.

சரி இப்பொழுது வேறு சில கேள்விகளுக்கு வருவோம்.

எப்படியான இரகசிய நடவடிக்கைகள் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் புலம்பெயர் ஈழத் தமிழரைக் குறிவைத்து எடுக்க முடியும்?

அதனைத் தடுப்பதற்கு ஈழத் தமிழர் என்ன செய்யவேண்டும்?

இவை பற்றி நாம் விரிவாகப் பார்ப்பதற்கு முன்னதாக, இதுவரை ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா செய்ததாக வெளிவந்த சில இரகசிய நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்பது நல்லது என்று நினைக்கின்றேன்.

இது, இனிமேல் இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் நடைமுறைப்படுத்த சாத்தியமாக உள்ள இரகசிய நடவடிக்கைகளை ஈழத்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்ட அபிவிருத்திக் கூட்டம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி!

கொழும்பு, ஜூன் 30

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் திருப்தியளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் ஹில்புல்லா ஆகியோர் தலை மையில் இடம்பெற்றது.

இக்கூட்டம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் கூட்டத்தில் பல அமைச்சர்கள் கலந்துகொண்டனர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபைத் தலைவர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் அபிவிருத்தி தொடர்பாக கேட்ட கேள்விகளுக்கு காத்திரமான பதில்கள் கிடைக்கவில்லை.

குறிப்பாக நான் ஒரு விடயத்தை முன் வைத்தேன் ''கெவிலியா மடுப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. இதுகுறித்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டேன். ''இது சிங்களக் குடியேற்றம் இல்லை; மீள்குடியேற்றமே!'' என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பதிலளித்தார்.

இது சிங்களக் குடியேற்றம் என்பது பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகும். இதற்கே அவர்களிடம் உரிய பதில் இல்லை.

இந்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனரே தவிர, இதனால் மக்களுக்கு பிரயோசனமான பலன் எதுவும் கிட்டவில்லை என்பதுதான் உண்மை. அத்துடன், திருப்திகரமான வகையில் இந்தக் கூட்டம் அமையவில்லை. - இவ்வாறு அரியநேத்திரன் எம்.பி. கூறினார். (எ)

## சிவில் வழக்குகளை புதன் கிழமைகளில் விசாரிக்க மூதூர் நீதிமன்றம் தீர்மானம்

மூதூர், ஜூன் 30

மூதூர், வெருகல், சேருவில ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து வரும் சிவில் வழக்குகளை மூதூர் நீதிமன்றில் ஒவ்வொரு புதன்கிழமையும் விசாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க கடந்த இரண்டு புதன் கிழமைகளில் விசாரணைகள் மூதூர் நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றன.

இதற்காக தற்காலிக ஏற்பாடாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் பதிவாளர் கடந்த இரு புதன்கிழமைகளிலும் மூதூர் நீதிமன்றத்தில் கடமையில் ஈடுபட்டார்.

இதே நடைமுறையில் மேற்குறித்த மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வழக்குகளையும் மூதூர் மாவட்ட நீதிமன்றம் விசாரிக்கும்.

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டு திறக்கப்பட்ட மூதூர் நீதிமன்றக் கட்டடத்தில் இந்நீதிமன்றமும் இயங்கவுள்ளது. இதன் மாவட்ட நீதிபதியாக மூதூர் நீதிமன்ற நீதிபதியே செயற்படவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## எச்.ஐ.வி. நோய் தொடர்பாக விழிப்புணர்வு வீதி நாடகங்கள்

மட்டக்களப்பு, ஜூன் 30

எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய் தொடர்பாக பாடசாலை சமுகத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வீதி நாடகங்களை நடாத்துவதற்கு ஏறாவூர் பற்று-02 கல்விக்கோட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எயிட்ஸ் நோய், நோய் பரவும்விதம், நோய்த் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்கும் வழிமுறைகள் ஆகியவற்றை தெளிவுபடுத்தும் வகையில் இந்த வீதி நாடகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.சுகுமாரன் தெரிவித்தார்.

இதன்மூலம், சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்புவதற்கும், எயிட்ஸ் நோயின் அபாய நிலை பற்றி மக்களுக்கு போதிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏறாவூர்பற்று -02 கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 10 இடங்களில் நடமாடும் வீதி நாடகங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் செங்கலடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. வீதிநாடகத்தில் பங்குபற்றவுள்ள 80 மாணவர்களுக்கு இதன் போது, பயிற்சியளிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு வீதி நாடகங்களை அரங்கேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக தரிசனம் என்ற நிறுவனம் இந்த வேலைத் திட்டத்திற்கு உதவி வழங்க முன் வந்துள்ளது என கோட்டக் கல்விப் பணிப்பாளர் கூறினார். (எ)

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மூன்று அமைச்சர்கள் பங்கேற்பு

மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மகளிர் விவகாரம், சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட கைத்தொழிற்றுறை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்தோடு கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் து.சத்தியானந்தி, அரச அதிபர் எஸ். அருமைநாயகம், திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டில் திணைக்களங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள், மீள்குடியேற்றம் ஆகியவை தொடர்பாக விரிவாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (எ)

## காவலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூன் 30

மூதூர், இருதயபுரம் காட்டுப்பகுதியிலுள்ள வயலுக்கு காவலில் ஈடுப்படச் சென்ற நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

குறித்த வயலில் கட்டப்பட்டிருந்த பரணிலிருந்து தவறிவீழ்ந்து அவர் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த 55 வயதுடைய சரவணபவன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

அத்துடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# தோட்ட மக்களுக்கு சலுகை விலையில் கோதுமை மா வழங்கப்பட வேண்டும்

### சில கட்சிகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 30

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு கோதுமை மா விலை தொடர்பில் நிவாரணம் வழங்கப்படவேண்டும் என சில கட்சிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மலையக பெருந்தோட்ட மக்களின் பிரதான உணவுப் பொருட்களில் ஒன்றாக கோதுமை மா காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்ட மக்களுக்கு கோதுமை மா சலுகை அடிப்படையில் விற்பனை செய்யப்படவேண்டும் என தொழிலாளர் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெருந்தோட்ட மக்களுக்கு கோதுமை மா விலையில் நிவாரணங்களையோ அல்லது சம்பள உயர்வையோ வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் துணைத் தலைவர் பீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த 200 ஆண்டுகளாக பெருந்தோட்ட மக்களின் பிரதான உணவாக கோதுமை மா இருந்து வந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர், கோதுமை மாவின் விலை உயர்வு மேலும் தொழிலாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விலை அதிகரிப்பினால் அன்றாட உணவை உட்கொள்வதில் பெருந்தோட்ட மக்கள் சவால்களை எதிர்நோக்க நேரிடும் - என இலங்கைத் தொழிலாளர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் சதாசிவம் தெரிவித்துள்ளார். (எ)

## பஸ்ஸில் நசுங்கி பெண் மரணம்

கொழும்பு, ஜூலை 30

பொசன் பண்டிகையை முன்னிட்டு பிபிலை மஹியங்கனை வீதியில் முதலாம் மைல்கல்லுக்கு அருகாமையில் நடத்தப்பட்ட தண்ணீர்ப் பந்தலில் குளிர்பானம் வழங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவர் பாதையில் வந்த தனியார் பஸ் ஒன்றில் நசுங்குண்டு உயிரிழந்துள்ளார்.

பலத்த காயங்களுடன் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இப் பெண் சிகிச்சை பலனளிக்காது மரணமாகினார் என பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிபிலை தெவக்கெட்டிய பிரதேசவாசியான ஐந்து பிள்ளைகளின் தாயே இவ்வாறு பலியாகியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் கைப்பற்றப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிபிலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன பஸ்நாயக்கவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (எ)

## கசிப்புத் தயாரிக்கும் நபர்களுடன் தொடர்பு வைத்திருந்த கான்ஸ்டபிள்!

### விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 30

கலேவெல தென்னக்கோன்புர பிரதேசத்தில் கசிப்பு தயாரிக்கும் நிலையத்தை நடத்தி வந்தார் எனக் கருதப்படும் வர்த்தகர் ஒருவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார் எனச் சந்தேகிக்கப்படும் கான்ஸ்டபிள் ஒருவருக்கும், தம்புள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவருக்கும் எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பிட்ட கசிப்பு வர்த்தகருடன் இந்தக் கான்ஸ்டபிள்கள் இருவரும் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்பு கொண்டதற்கான போதிய ஆதாரங்கள் கிடைத்ததை அடுத்தே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்த விசாரணை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கண்டி பொலிஸ் நிலையத்தின் மத்திய மாகாண போதை, துஷ்பிரயோக ஒழிப்புப் பிரிவினர் தென்னக்கோன்புரத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறிப்பிட்ட கசிப்பு வர்த்தகருடன் மேலும் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது முப்பதாயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன், கசிப்பு வடிப்பதற்குப் பயன்டுத் தப்படும் உபகரணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## மனைவியின் வருகையில் தாமதம் வீட்டுக்குத் தீ வைத்தாராம் கணவர்!

கொழும்பு, ஜூன் 30

திருமண வீடொன்றுக்குச் சென்ற மனைவி வீடு திரும்புவதற்கு தாமதம் ஏற்பட்டதையடுத்து கோபமுற்ற கணவர் தங்களது வீட்டையே எரித்து நாசமாக்கியுள்ளார் என தெனியாய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மனைவியைப் பயமுறுத்துவதற்காகவே அவர் இப்படிச் செய்தார் என்றும், எனினும் எதிர்பாராத விதமாக தீ விரைவாகப் பரவி அதிக சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது கணவரின் செயலால் சுமார் ஒருலட்சம் ரூபாவரை சேதம் ஏற்பட்டுள்ளது என மனைவி கொடுத்த முறைப்பாட்டடுத்து கணவன் விசாரணைக்காக தெனியாய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (எ)

## வறக்காப்பொளை நகரம் நவீன நகராக அபிவிருத்தி

டெடிகமைத் தொகுதியின் தலைநகராகக் கருதப்படும் வறக்காப்பொலை நகரம் பல வசதிகள் கொண்ட நவீன நகராக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

புறநகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இந்நகரமையத்தில் அரச காரியாலயங்கள், வங்கிகள் மற்றும் வியாபார நிலையங்கள் என்பனவும் அமையவுள்ளன.

அத்துடன், கண்டி - கொழும்பு பிரதான வீதிக்கு மாற்று வீதியாக வறக்காப்பொலை நகரினூடான புதிய மாற்றுவீதியும் புனரமைக்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரையும் பரவசப்படுத்திய இசை நிகழ்ச்சி

சென்ற செவ்வாய்க்கிழமை 8 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இந்தியாவிலிருந்து வந்த அக்கரைச் சகோதரிகளான சுபலக்ஷ்மி, சொர்ணலதா என்னும் இரு இளம் இசைக் கலைஞர்களின் வயலின் வாத்திய விருந்தினை பிரபல தொழில் அதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்களின் ஏற்பாட்டில் இசைத்துறை சார்ந்த ரசிகர்களும்,

**இ.குமாரசாமி சர்மா,**
ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர், வண்ணார்பண்ணை.

கலைஞர்களும், ஆர்வலர்களும் காணும் வகையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

இந்திய தேசம் இசைத்துறையில் மிகவும் உயர்ந்து பெரும் கலைஞர்கள் உருவாகி நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றனர். அந்தவகையில் இவ்இளம் வயலின் கலைஞர்களும் தனித் திறமை படைத்தவர்கள். அவர்கள் இருவரும் இணைந்து வெகு சிறப்பாகவும், இனிமையாகவும் ரசிகர்களைக் கவரும் வண்ணம் பாடல்களைத் தெரிந்து வாசித்து பெரும் பாராட்டுக்களைப் பெற்றனர்.

சாவேரி ராக வர்ணத்துடன் வயலின் இசை ஆரம்பமானது. ஹம்சத்வனி ராகத்தில் வாதாபி கணபதிம் எனும் விநாயகர் கீர்த்தனையை ஆலாபனை செய்து வாசித்து சுரங்கள், பல சங்கதிகள் என்பன விரைவுடன் துரிதமாக வாசித்தமை பாராட்டத்தக்கது. தியாகராஜரின் பஞ்சரத்தின் கீர்த்தனைகளில் ஒன்றான ஆரபி ராகத்தில் அமைந்த 'சாரஞ்சனி' என்னும் கீர்த்தனையை வெகு சுருக்கமாக வாசித்து பின்னர் வராளி ராக ஆலாபனை செய்து அதில் மிகவும் பிரசித்தமான ' காவா வா கந்தா வா' என்னும் பாபநாசம் சிவன் பாடலினை பல நிரவல் கள் செய்து இணைந்து வாசித்தனர்.

பிலகரி ராக ' பரிதாப மிச்சி தே' எனும் பாடலினைத் தொடர்ந்து சண்முகப்பிரியா ராகத்தில் ஆலாபனை மிகவும் பிரமாதமாகவும், விஸ்தாரமாகவும் வாசித்து அதில் தானம் செய்து பல்லவியினை ராக மாளிகையில் கம்சானந்தி: கம்சராகம்: பெகாக்: தேஷ் முதலான ராகங்களில் வாசித்தமை பிரமாதமாக அமைந்தது.

பக்க வாத்தியக் கலைஞர்களின் தனி ஆவர்த்தனம் நிகழ்வில் மிருதங்கக் கலைஞர் என். மாதவன் தனது தனித் திறமையினை மிருதங்க வாசிப்பின் மூலம் வெளிக்காட்டி சபையினரின் பலத்த கரகோசத்தினைப் பெற்றார்.

' சின்னஞ் சிறு கிளியே' என்னும் பாடலினை ராகமாலிகையில் வாசித்து சிந்து பைரவி ராகத்தில் ' விஸ்வேஸ்வர தரிசனமே '' என்னும் பாடலினை இணைந்து இனிமையாக வாசித்து தில்லானாவுடன் பலத்த கரகோசத்தின் மத்தியில் நிறைவு பெற்றது. அவர்கள் இடையிடையே ராகங்களின் பெயரினையும் பாடலினையும் கூறியமையினால் பலரும் பயன் அடைந்தனர். ஒலி வாங்கி மட்டும் குளறுபடி செய்யாது அமைந்து இருந்தால் இசை நிகழ்வு மிகவும் ஒலி அமைப்புடன் சிறப்பாக இருந் திருக்கும்.

இசைத்துறை சார்ந்த மூத்த கலைஞர்கள் பலரும் நுண்கலைப்பீட இசைத்துறை சார்ந்தோர்களும் இசை பயில்பவர்களும் பெருமளவு கலந்து கொள்ளாமை பெரிய குறைபாடாகப் பலரும் கூறினர். அழைப்பிதழ்கள் தனித்தனியாக எவருக்கும் விடுக்காத போதும் இது ஓர் பொது நிகழ்ச்சி என்பதனால் ரசிகர்கள், ஆர்வலர்கள், மூத்த இசைக் கலைஞர்கள் பெருமளவாக வந்து கலந்து சிறப்பித்து இருந்தால் எல்லோருக்கும் பெருமையாக அமைந்திருக்கும். எதிர்காலத்தில் இவ்வாறான இசை நிகழ்வுகள் நடக்கும் பொழுது எமது மூத்த இசைக் கலைஞர்கள் தவறாது கலந்து ஆதரவு கொடுப்பார்கள் என இசை உலகம் எதிர்பார்க்கின்றது.

## வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 30

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட் பட்ட வீதிகளுக்கு எஸ்லோன் குழாய் நிறு வனத்தினரால் பெயர்ப் பலகைகள் பொருத் தப்பட்டுள்ளன.

முதற் கட்டமாக நுணாவில் சந்தி தொடக் கம் மீசாலை - புத்தூர் சந்தி வரை யான ஏ-9 வீதியில் உள்ள 50இற்கும் மேற்பட்ட வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகள் நாட்டப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50 - 207)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதி சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடி யேற் றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திரு விழாவும் இடம் பெறும்.

திருவிழாக் காலங்களில் தின மும் திரு விளையாடற் புராணம் என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(204)


## சேவை நலன் பாராட்டு

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையில் கடமைபுரிந்து இன்று (30.06.2010) ஓய்வுபெறும்
**திரு.கிருஸ்ணபிள்ளை பரமதாஸ்**
அவர்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதுடன் இவர் உடல், உள ஆரோக்கியத்துடன் நீடூழி காலம் வாழ்ந்து மேலும் சமூகப்பணி செய்து சிறப்படைய இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. [96645]

நண்பர்கள்.



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 659 திகதி 28-06-2010

வெற்றி எண்கள்

09 10 33 59 M (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 24,689,350/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொழ பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருத்தினால் | - | 24,689,350/= | - |
| 4 இலக்கங்கள் பொருத்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருத்தினால் | 07 | 2,000/= | 14,000/= |
| 3 இலக்கங்கள் பொருத்தினால் | 363 | 1,000/= | 363,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருத்தினால் | 554 | 1,000/= | 554,000/= |
| 2 இலக்கங்கள் பொருத்தினால் | 15260 | 60/= | 915,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருத்தினால் | 7196 | 40/= | 287,840/= |
| 1 இலக்கம் பொருத்தினால் | 179125 | 20/= | 3,582,500/= |
| | | மொத்தம் | ரூ. 6,116,940/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 600145443-3-43 |
| காலி | 600154931-3-43 |
| பொலன்னறுவை | 600145651-6-26 |
| மட்டக்களப்பு | 600153828-6-46 |
| கண்டி | 600140842-4-04 |
| கம்பஹா | 600150133-6-46 |
| களுத்துறை | 600144374-3-43 |
| கம்பஹா | 600150002-4-14 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,516,940/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 25,174,060/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, களாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977இல் பிறந்த, எட்டில் செவ்வாயும் 15 கிரக பாவ மும் உடைய தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த வரனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.
தொடர்பு இலக்கம்:- 0772304509



## தவறிவிட்டது

சிவன் வீதி, உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த ஆறுமுகம் சதீஸ்குமார் என்பவரின் தற்காலிக அடையாள அட்டை (771233872V) கந்தர்மடச் சந்திக்கும் காக்கை தீவுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமானவர் பரிசுக்குரியவராகக் கருதப்படுவார்.
தொடர்பு: சிவக்கொழுந்து ஆனந்தராசா
வைத்தீஸ்வரா வீதி, உடும்பிராய் மேற்கு, உடும்பிராய்.


# பத்தாவது ஆண்டு நினைவுதினம்

## செல்வன் பாலா.கோபிநாத்

(விஞ்ஞானப் பிரிவு மாணவன், யாழ்.இந்துக்கல்லூரி-வேலணை 4)

திதி:- சதுர்த்தி 30.06.2010

இலங்கையில் மலர்வு 05-12-1980 | இந்தியாவில் உதிர்வு 20-06-2000

**நினைவு ஆக்கம்**

இந்துவில் பூத்திருந்த
இன் முகம் எங்கே? எங்கே?
இந்தியா போவதென்றான்
இன்றவன் போனதெங்கே?

கோபிசந்தனம் அதன்
வாசனை எங்கே? எங்கே?
கோபிநாத் எனும்
மனவாசனை போன தெங்கே?

வேலணை ஈந்த காற்றில்
முதல் மூச்சிழுத்தவன் நீ
வேலூரின் காற்றிலேயா
கடைசி மூச்சு கரைய விட்டாய்?

போதியாய் இருந்து கொண்டு
பொன்மொழி பகன்ற நண்பா!
போதி மாதவன் தேசம் போயோ
ஆவி நீ சோரவிட்டாய்?

நிலமகள் நொந்திடாமல்
மெது நடை நடந்த நண்பா!
நிலவிற்கு குறைவிலாமல்
புன்னகை புரிந்த நண்பா!

தீய சொல் தீட்டிடாத்
உனையுமா தீயிலிட்டார்?
பால் மனம் படைத்திருந்த
உனக்குமா பாலைவிட்டார்?

காவிரி கங்கை புண்ய
கோதாவாரி புனல்களினால்
புனிதம் பெற்ற மண்ணில்
மனிதம் நீ துறந்ததினால்

அடைந்திடும் உந்தன் ஆன்மா
ஆண்டவன் வீடு சென்ற
வேண்டுதல் ஒன்றே அன்றி
வேறென்ன செய்ய நண்பா!

- நண்பன் வைத்தியர் அனோமிலன்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- குடும்பத்தினர்

தகவல்: AY.Dr. ஐ.பாலசுப்பிரமணியம்
வேலணை 4.
TP : 0213216799, 021 568 2261

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படித்தால் அறிவு வராது

ஓர் இலக்கியக் கூட்டத்தில் பேசும்போது பேராசிரியர் அறிவொளி அவர்கள், படித்தால் அறிவு வராது என்று திருவள்ளுவர் கூறுகிறார் என்று சொன்னார். கூட்டம் அதிர்ச்சி அடைந்து என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு இருந்தது. அறிவொளி சொன்னார். *"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு."* என்கிறார் வள்ளுவர். இதற்கு என்னாங்க அர்த்தம்? மணற்கேணி அதாவது ஆற்றில் தோண்டப்படும் கிணறு. அதிலே நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாகத் தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நீர் ஊறும். அதுபோல எவ்வளவு அதிகமாகப் படிக்கின்றோமோ அவ்வளவு அதிகமாக அறிவு பெருகும் இதுதானே அர்த்தம்? சரி, ஆற்றில் நீர் வற்றியிருக்கும் நாளில் தோண்டினால் நீர் ஊறும். ஏனுங்க ஊறுது? அடியில தண்ணீர் இருக்குது. தோண்டினால் கிடைக்குது. பாலைவனத்துல எவ்வளவு தோண்டினாலும் தண்ணீர் கிடைக்குமோ? கிடைக்காது. ஏன்? அங்கே தண்ணியில்லே. அதுபோலத்தான் அறிவு இருக்கிறவன் படிச்சா, அறிவு பெருகும். இல்லாதவன் படிச்சா? பெருகாது. அதனால்தான் ஒரு வகுப்பிலேயே ஒருத்தன் 80 மார்க் வாங்கறான். இன்னொருத்தன் 10 மார்க் வாங்குறான். தோண்டினதுல குற்றமில்ல. உள்ளே உள்ளது அவ்வளவுதான் என்றார்.

# நான் என்பது எது

மாலிண்ட் (Malind) என்னும் பேரரசன் தனது அரசசபைக்கு வந்து அருளாசி வழங்குமாறு நாக்சேன்(Nagsen) என்னும் மேன்மை நிறைந்த துறவிக்குச் சொல்லியனுப்பினான்.

தூதுவன் ஒருவன் நாகசேனிடம் சென்று, வணங்கி "துறவியாரே, எங்களது பேரரசர் உங்களைப் பார்க்க விரும்புகிறார். நான் உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன் என்றான்.

அதற்கு நாகசேன், "நீ விரும்பினால் நான் வருகிறேன். ஆனால் தயவு செய்து என்னை மன்னித்துவிடு. இங்கு நாகசேன் என்று ஒருவரும் இல்லை. அது வெறும் பெயர் மட்டுமே. அது ஒரு தற்காலிகமான முத்திரைதான்" என்று பதிலளித்தார்.

காவலர்கள் பேரரசனிடம் நாகசேன் மிகவும் விநோதமான மனிதனாக உள்ளார். அவர் தான் வருவதாகக் கூறுகிறார். ஆனால் நாகசேன் என்று ஒரு நபர் அங்கு இல்லை என்று கூறுகிறார் என்றனர். பேரரசன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான்.

நாகசேன் சரியான நேரத்தில் அரசனுடைய தேரில் வந்து சேர்ந்தார். பேரரசன் அவரை அரண்மனை வாயிலில் வரவேற்று, "நாகசேன் துறவி அவர்களே, நான் உங்களை வரவேற்கிறேன்?" என்று கூறினார்.

இதைக் கேட்டு அந்தத் துறவி சிரிக்க ஆரம்பித்தார். "நாகசேனுக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நாகசேன் என்ற பெயருடைய யாரும் இங்கு இல்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்" என்று கூறினார். உடனே பேரரசன், "நீங்கள் புதிர் போட்டு பேசுகிறீர்கள். நீங்கள் இல்லையெனில் எனது அழைப்பை ஏற்றுக் கொண்டிருப்பது யார்? இந்த வரவேற்புக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பவர் யார்?"என்று கேட்டார்.

அதற்கு நாகசேன் பின்னால் திரும்பிப் பார்த்து, "இதுதானே நான் வந்த தேர்?" என்று கேட்டார்.

"ஆம், அதுவேதான்."

"தயவு செய்து அந்தக் குதிரைகளை அவிழ்த்து விடுங்கள்." உடனே அதைச் செய்தனர்.

துறவி அந்தக் குதிரைகளைக் காட்டி,"இவைகள் தான் நான் வந்த தேரா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பேரரசன், "இந்தக் குதிரைகள் எப்படி தேராக ஆக முடியும்?" என்று கேட்டார்.

துறவி ஜாடை காட்டியதன்படி குதிரைகள் அப்பால் கொண்டு செல்லப்பட்டன. அதன்பின் அந்தக் குதிரைகளைப் பூட்டக்கூடிய நுகத்தடி கழற்றப்பட்டது.

"இந்தத் தடிகள் தான் தேரா?"

"இல்லை, இந்தத் தடிகள் தேர் இல்லை."

இதேபோல் அந்தத் துறவி அந்தத் தேரின் ஒவ்வொரு பகுதியையும் கழற்றச் சொன்னார். ஒவ்வொரு பகுதியையும் அந்தப் பேரரசன்,"இது தேர் இல்லை" என்று கூறி வந்தான். இறுதியில் அங்கு ஒன்றுமில்லை. அப்போது அந்தத் துறவி, "உங்களுடைய தேர் இப்போது எங்கே போயிற்று? அந்தத் தேரில் இருந்து பிரித்து எடுத்த ஒவ்வொரு பகுதியையும் நீங்கள் "இது தேர் இல்லை" என்று கூறிவிட்டீர்கள். அப்படியானால் உங்களது தேர் இப்போது எங்கே உள்ளதென்று கூறுங்கள்?" என்று கேட்டார்.

துறவி வெளிப்படுத்தியது பேரரசனைத் திடுக்கிடச் செய்தது. துறவி தொடர்ந்து, "நான் கூறியதைப் புரிந்து கொண்டீர்களா? தேர் என்பது ஒன்று திரட்டப்பட்டது. சில பொருள்களைச் சேகரித்து தேராக்கி உள்ளனர். தேர் என்று தனியாக ஒன்றும் கிடையாது. அதேபோல் தயவு செய்து உங்களுக்குள் நோக்குங்கள். உங்களது ஆணவம் எங்கே உள்ளது? உங்களது " நான்" எங்கே உள்ளது?"நீங்கள் அந்த 'நான்' என்பதை எங்கும் காணமுடியாது. நான் என்பது பல விதமான சக்திகளின் வெளிப்படை,அவ்வளவுதான். உங்களது ஒவ்வொரு கூறுகளையும் ஆராய்ந்து பாருங்கள். அதன் பின் அவைகளையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அகற்றியிருப்பாருங்கள். முடிவாக நான் இருக்காது.

# வசை பாடுவது ஏன்?

சிலர் நம்மைப் பாராட்டுவார்கள். சிலர் நம்மைத் திட்டுவார்கள். திட்டும்போது நமக்குக் கோபம் வரும். திரும்பத் திட்டலாமா என்று நினைக்கவும் தோன்றும். திட்டினால்? திட்டியவர் உடனே திட்டுவதை நிறுத்திவிடுவாரா? அதுதான் இல்லை. மேலும் திட்டத் தொடங்குவார். நம் வேலையை நிறுத்திவிட்டு, அவர் வசவுக்கு வசவு பதில் சொல்லவே நேரம் சரியாக இருக்கும்.எனவே, அவர்கள் ஏன் திட்டுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்து ஏற்றபடி செயற்பட்டால் போதுமானது.

அண்ணா நண்பர்களோடு காரில் சென்று கொண்டிருந்தார்.

ஓர் ஊரில் ஒரு பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதில் பேசிய பேச்சாளர் அண்ணாவை வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருந்தார். காரை நிறுத்தச் சொல்லி, ஒரு ஓரத்தில் யாருக்கும் தெரியாமல் - முழுவதும் கேட்டுவிட்டுப் பயணம் தொடர்ந்தார்கள்.

காரில் இருந்த நண்பர் ஒருவர் அண்ணாவிடம்,"ஏன் அண்ணா உங்களை அவர்கள் வசைபாடுகிறார்கள்?" என்று கேட்டார். அண்ணா பதில் ஏதும் பேசாமல் மௌனம் காத்தார். கொஞ்சத் தூரம் சென்றபின் ஒரு மாட்டு வண்டியை அண்ணாவின் கார் முந்தவேண்டியிருந்தது. ஓரமாகச் செலுத்தி மாட்டு வண்டியைக் கடந்தார்கள். அப்போது மாட்டு வண்டி ஓட்டியவர் டிரைவரை நோக்கி,"மெதுவாகப் போங்கடா நாய்ப் பசங்களா."என்று வசைபாடினார். அப்போது காருக்குள்ளிருந்த நண்பர்களிடம்,அண்ணா சொன்னார். "பார்த்தீர்களா? கார் வேகமாகப் போகிறது. மாட்டு வண்டியால் இதற்குச் சமமாக, வரமுடியவில்லை. அந்தக் கோபம்தான் மாட்டு வண்டிக்காரருக்கு. அதனால் நம்மைத் திட்டுகிறார். அவருக்குச் சமமாக நாம் வசைபாடாமல் நம் வேகத்தை அதிகரித்துப் போகவேண்டிய இடத்தை அடையவேண்டும். இந்த மாட்டு வண்டிக்காரர் நிலைமையில்தான் அந்தப் பேச்சாளர் இருக்கிறார்."

நம் வளர்ச்சி பொறுக்காமல் சிலர் திட்டுவார்கள், நாம் அதைத் தாங்கிக் கொண்டு வளர்ச்சி வேகத்தைக்கூட்ட வேண்டும். சோர்ந்து போகக் கூடாது.

பிறர் ஏசும் ஏச்சை உரமாக்கிக் கொண்டு வளர வேண்டும்" என்று அடிக்கடி அண்ணா சொல்வார்.

"நம் வளர்ச்சி அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் நம்மைக் கவனிக்கிறார். நம்மையொத்து வளர முடியவில்லை. அந்த இயலாமை நம் மேல் கோபமாக மாறுகிறது. கோபம், கடுஞ்சொல் பேசவைக்கிறது. இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்தால், அவர் மேல் இரக்கம் உண்டாகும். நமது வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய அளவு கோல் பிறரது நியாயமற்ற வசை" என்கிறார் அண்ணா.

# துறவுக்குத் தகுதி என்ன

சுவாமி விவேகானந்தர் நரேந்திரனாக இருந்தபோது துறவறம் மேற்கொள்ள விரும்பினார். ஆனால் தமது தாயாரின் அனுமதி வேண்டும் என்று காத்திருந்தார். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தாயாரிடம் தமது துறவு விருப்பத்தைத் தெரிவிப்பார். ஒருமுறை அவ்வாறு துறவுக்கு அனுமதி கேட்டபோது " சமையலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா" என்றார் அன்னை. விவேகானந்தர் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்ததும் " கொஞ்சநாள் போகட்டும். பிறகு நீ சந்யாஸி ஆகலாம்" என்று கூறிவிட்டார். எப்போதெல்லாம் துறவற விருப்பத்தைத் தமது தாயாரிடம் வெளியிடுகிறாரோ அப்போதெல்லாம் இதே நாடகம் நடந்தேறியது. துறவுக்கும் கத்திக்கும் என்ன சம்பந்தம் என்று விவேகானந்தருக்குப் புரியவேயில்லை.

ஒருமுறை இவ்வாறு கத்தியைக் கொண்டு வந்து விவேகானந்தர் கொடுத்ததும் " இனி நீ துறவுக்குப் போகலாம் தடையில்லை" என்றாராம் அன்னையார். துறவுக்கு அனுமதி கோரும் பொழுதெல்லாம் கத்தியைக் கொண்டு வரச் சொன்ன காரணம் தெரிந்து கொள்ள விரும்பினார் விவேகானந்தர். அன்னையார் சிரித்துக்கொண்டே " முன்பு ஒவ்வொரு முறை நான் கத்தியைக் கொண்டு வரச் சொன்ன போதும் பாதுகாப்பான கைபிடியை நீ பிடித்துக் கொண்டு ஆபத்தான கூர்மைப்பகுதியை என் பக்கம் நீட்டுவாய், ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. ஆனால் நாளாக நாளாக ஆபத்தான கூர் பகுதியை நீ பிடித்துக்கொண்டு பாதுகாப்பான கைப்பிடி பக்கத்தை என் பக்கம் நீட்டத் தொடங்கினாய். மகனே தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிற சுயநலம் நீங்கி பிறரைப் பாதுகாக்க வேண்டும் என்கிற தியாக உணர்வு உனக்கு ஏற்பட்ட பிறகே துறவுக்கு அனுப்ப சம்மதித்தேன்" என்றார். சுயநலம் உடைய எவனும் துறவி ஆகவே முடியாது. தியாகமே துறவின் அத்திபாரம்.

*(சொன்னவர்: கோவை.உமா மகேஸ்வரி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வணிகவள நிலையம்

அண்மையில் நடத்திய உயர்தரப் பரீட்சை - பங்குனி, 2010

## பௌதிகவியல் பகுதி - I

**கடந்தவாரத் தொடர்ச்சி.....**

16. காட்டப்பட்டுள்ள சுற்றில் திரான்சிற்றர் நிரம்பல் வகையில் செய்யப்படுகின்றது எனக்கொண்டு சுற்றின் சேகரிப்பான் மின்னோட்டம் $I_C$ யைக் காண்க.
1) $10^{-3}$A
2) $10^{-2}$A
3) $10^{-1}$
4) 10A
5) 100A




17. சவர்க்காரக்குமிழ் ஒன்றின் ஆரை r ஆகும். சவர்க்காரக் கரைசலின் பரப்பளவை δ எனில் இக்குமிழியின் ஆரையை இரு மடங்காக்குவதற்கு தேவையான மேலதிக சக்தி,
1) $2\pi\gamma^2\delta$ 2) $8\pi\gamma^2\delta$ 3) $12\pi\gamma^2\delta$ 4) $24\pi\gamma^2\delta$ 5) $36\pi\gamma^2\delta$

18. $1mm^2$ குறுக்குவெட்டுப் பரப்புடையதும் $2\times10Nm^{-2}$ பங்கின் மட்டு உடையதுமான கம்பியொன்றின் உடைவு விகாரம் 0.002% ஆகும். அக்கம்பியில் தொங்கவிடக் கூடிய அதியுயர் நிறை,
1) 10N 2) 20N 3) 4N 4) 40N 5) 2000N

19. இரு பக்கமும் 45cm வளி நிரல் இருக்கத்தக்கதாக குழாயின் நடுவில் 10cm நீள இரச நிரல் வளி நிரலை பிரிக்கின்றது. குழாயின் வெப்பநிலை 27°C இல் உள்ளது. ஒரு பக்கத்தின் வெப்பநிலை 327°C ஆக அதிகரிக்கப்படும்போது இரச நிரல் அசையும் நீளம்,
1) 5cm
2) 7.5cm
3) 10cm
4) 15cm
5) 20cm




20. மின்னியக்கவிசை 1.5V, உட்தடை 0.3Ω கொண்ட எத்தனை கலங்கள் தொடராக இணைக்கப்படும்போது 12V, 12Ω என மதிப்பிடப்பட்ட மின்விளக்கு முழுப் பிரகாசத்துடன் ஒளிரும்,
1) 2 2) 3 3) 4 4) 6 5) 10

21. முடிவிடங்கள் AB இடையே 160V பிரயோகிக்கப்படும்போது பயப்பு வோல்ற் அளவு $V_0$
1) 20 V
2) 40 V
3) 60 V
4) 80 V
5) 120 V




22. 1.5V மின்னியக்க விசையுடன் கலம் ஒன்றின் முனைவுகளுக்கிடையில் 4Ω தடையுடைய ஒரு அம்பியர்மானி இணைக்கப்பட்டபோது அது 0.3A வாசிப்பை காட்டுகின்றது. சர்வ சமமான இன்னுமோர் அம்பியர்மானி இணைக்கப்படின் இரண்டாவது மானியின் வாசிப்பு,
1) 0.5 A 2) 0.3 A 3) 0.25 A 4) 0.17 A 5) 0.083 A

23. காட்டப்பட்ட சுற்றில் அம்பியர்மானி வாசிப்புகள் முறையே 1.00A உம் 0.75A உம் ஆகும். E இனதும் R இனதும் பெறுமதிகள் முறையே,
1) 9 A, 4 Ω
2) 6 A, 4 Ω
3) 2 A, 4 Ω
4) 9 A, 2 Ω
5) 4 A, 9 Ω




24. அருகில் காட்டப்பட்ட படலைச் சேர்மானத்திற்குச் சமவலுவான படலை,




1) 
2) 
3) 
4) 
5) 

25. செயற்பாட்டு விரியலாக்கிக்கு 0.2V பெய்ப்பு அழுத்தம் பிரயோகிக்கப்படுமாயின் பயப்பு அழுத்தம்,
1) 0.2V
2) 1.0V
3) 1.2V
4) 6V
5) 10V




26. $1\times10^{-5}K^{-1}$ நீள விரிவுக்குணகமுடைய திரவியத்தாலான திண்மக் கோளமொன்றின் வெப்பநிலையை 30°C இலிருந்து 60°C இற்கு உயர்த்தும்போது அதன் கனவளவில் ஏற்படும் சதவீத அதிகரிப்பு,
1) 0.09% 2) 0.03% 3) 0.01% 4) 0.3% 5) 3.6%

27. உருளைப் பாத்திரம் ஒன்றினுள் முசலம் ஒன்றினால் 27°C இலுள்ள வளி அடைக்கப்பட்டுள்ளது. பாத்திரத்தினுள் சிறிதளவு நீர் உள்ளது. பாத்திரத்தினுள் மொத்த அமுக்கம் 828mm Hg. 27°C இல் நீரின் நி.ஆ.அ 28mm Hg பாத்திரத்தின் கனவளவு அரைப்பங்காகப்படின் பாத்திரத்தினுள் மொத்த அமுக்கம்,
1) 1656mm Hg 2) 1628mm Hg 3) 428mm Hg
4) 414mm Hg 5) 856mm Hg

28. ஒரு கோளத்தின் மேற்பரப்பு $0.1m^2$ ஆகும். அதன் வெப்பநிலை 400K. அதிலிருந்து காலப்படும் வலு 150W. இக் கோளத்தை ஒரு இலட்சிய கரும்பொருளாகக் கருதி மேற்பரப்பு $2m^2$ ஆகவும், வெப்பநிலை 800K ஆகவும் இருக்கும்போது அதிலிருந்து காலப்படும் வலு,
1) 12KW 2) 16KW 3) 48KW 4) 96KW 5) 144KW

29. $10m^3$ கனவளவுடைய மூடிய அறையொன்றினுள் உள்ள வரியின் சாரீரப்பதன் 60%. தனி ஈரப்பதன் $24kg/m^3$ ஆகும். இப்பொழுது அறையினுள் 20kg நீர் சேர்க்கப்படுகிறது. நீர் முழுவதும் ஆவியாகிறது எனவும், வெப்பநிலை மாறவில்லை எனவும் கொண்டு அறையினுள் வளியின் புதிய சாரீரப்பதன்,
1) 60% 2) 62% 3) 65% 4) 70% 5) 75%

30. மிகப் பெரிய தட்டையான உலோகப் பரப்பு δ எனும் சீரான ஏற்ற அடர்த்தியை உடையது. திணிவு m உம் ஏற்றம் e உம் உடைய இலத்திரன் ஒன்று u எனும் கதியுடன் புள்ளி A உலோக மேற்பரப்பை விட்டு நீங்கி புள்ளி B இல் பரப்பிற்கு மீளுகின்றது. ஈர்வையை புறக்கணிப்பின் AB இன் உயர் பெறுமதி,
1) $\Sigma_0 eu^2/\sigma m$ 2) $\sigma eu^2/\Sigma_0 m$
3) $\Sigma_0 \sigma u^2/em$ 4) $\sigma eu^2/\Sigma_0 m$
5) $\Sigma_0 mu^2/\sigma e$

31. கதிர் தொழிற்பாட்டு மூலகத்தின் அணுக்கள் 60 நாட்களின் 1/32 பங்கு எஞ்சியிருந்தது எனின், அம் மூலகத்தின் அரைவால்வுக் காலம்?
1) 12 நாட்கள். 2) 32 நாட்கள். 3) 60 நாட்கள். 4) 64 நாட்கள். 5) முடிவிலி.

32. சிறிய தொலைக்காட்சிக் குழாயில் இலத்திரன் $2\times10^7m/s$ வேகத்தில் இயங்குகின்றது. இலத்திரனின் திணிவு $9\times10^{-31}kg$ புறோக்லீயின் அலை நீளம் ($h = 6.0 \times 10^{-34}JS$)
1) $2.2 \times 10^{-11}m$ 2) $3.3 \times 10^{-11}m$
3) $3.7 \times 10^{-11}m$ 4) $4.3 \times 10^{-11}m$ 5) $4.0 \times 10^{-10}m$

33. நீர்மானியின் வாசிப்புக்கும் (y) திரவத்தின் அடர்த்திக்கு (ρ) இடையிலான தொடர்பை திறம்படக் காட்டும் வரைபு யாது?




34. ஒரு நீண்ட உருளை வடிவப் பாத்திரமொன்றின் அடியிலிருந்து வெவ்வேறு உயரம் h இல் துளையிடப்பட்டு அதற்கு ஒத்த கிடை வீச்சு x பெறப்பட்டது. இத்தரவை திறம்படக் காட்டும் வரைபு யாது?




35. இரு ஒலிபெருக்கிகளை ஒரே விரியலாக்கிக்கு இணைக்கப்பட்டு ஒலிப்பெருக்கப்படுகின்றது. விரியலாக்கியின் அதிர்வு மீடிறன் பூச்சியத்திலிருந்து சீராக அதிகரிக்கப்படுகின்றது. அதிர்வு D என்ற உணரி மூலம் உணரப்படுகின்றது. அப்போது தொடராக உயர் இழிவு அதிர்வுகள் D மூலம் உணரப்படுகின்றது. வளியில் ஒளியின் வேகம் $330ms^{-1}$ எனின், D ஆல் உணரப்படும் முதலாவது உயர்வுக்கு ஒத்த மீடிறன்,
1) 165Hz
2) 330Hz
3) 495Hz
4) 660Hz
5) 825Hz




36. பிழையாக தரங்கணித்த (அளவுகோடிட்ட) வெப்பமானி ஒன்றின் அளவிடையில் 0°C, 100°C குறிகள் முறையே - 0.3°C, 99.8°C என்னும் வெப்பநிலைகளை ஒத்துள்ளன. இவ் வெப்பமானி 40°C ஐ வாசிக்கும்போது திருத்தமான வெப்பநிலை? (அண்ணளவாக)
1) 39.7°C 2) 40.1°C 3) 42.2°C 4) 44.6°C 5) 45.4°C

37. $1/\sqrt{2}$ முறிவுச்சுட்டி உடைய சதுரக் கண்ணாடிக் குற்றியில் 450 படுகோணத்தில் படும் ஒளிக் கதிர் பற்றிய கூற்றுக்களில் சரியானது,
1) எதிர்முகத்தினூடு வெளியேறும்.
2) அயல் முகத்தினூடு வெளியேறும்.
3) உட்செல்ல மாட்டாது.
4) எதிர்ப்பக்கத்தை மருவிச் செல்லும்.
5) அயல் பக்கத்தை மருவிச் செல்லும்.




38. A, B என்னும் ஊடகங்களில் ஒளியின் வேகம் முறையே $2\times10^8ms^{-1}$, $2.4\times10^8ms^{-1}$ எனின், இவற்றில் உண்டாக்கப்படும் அவதிக்கோணம் என்ன?
1) $Sin^{-1}(5/12)$ 2) $Sin^{-1}(5/6)$ 3) $Sin^{-1}(2/3)$
4) $Sin^{-1}(3/4)$ 5) 45°

(13 ஆம் பக்கம் பார்க்க)

**நன்றி : கொழும்பு வணிக வள நிலையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. h ஆழத்திற்கு திரவத்தைக் கொண்ட தடாகம் ஒன்றின் அடியிலுள்ள பொருளொன்று நோக்கப்பட்டபோது அது தோற்றும் ஆழம் என்ன? (n = முறிவுச்சுட்டி)
1) h/n 2) n/n 3) h 4) hn 5) (1-1/h)h

40. ஒலிமுதல் ஒன்றிலிருந்து $r_1$ தூரத்திலுள்ளபோது அதன் ஒலிச்செறிவு மட்டம் $\beta_1$ உம் $r_2(r_2 > r_1)$ தூரத்திலுள்ளபோது அதன் ஒலிச்செறிவு மட்டம் $\beta_2$ உம் ஆகும் எனின், ஒலிச்செறிவு மட்டம் மாற்றம் $(\beta_1 - \beta_2)$ யாது?
1) $20 \log (r_2/r_1)$ 2) $10 \log (r_2/r_1)^2$
3) $10 \log (r_2/r_1)$ 4) $10 \log (r_2r_1/ r_1+r_2)$
5) $10 \log (r_2 -r_1/ r_2)^2$

41. வளியில் ஒலியின் வேகம் V. மீடிறன் f ஐ உடைய நிலையான ஒலி முதலைத் தாண்டி ஓர் அவதானி $U_0$ வேகத்தில் செல்லும்போது அவர் உணரும் மீடிறனில் ஏற்றம் மாற்றம் $\Delta f$
1) $2U_0f/v$ 2) $U_0f/v$ 3) $v/U_0f$ 4) $vf/2U_0$ 5) $vf/U_0$

42. வேறோர் கிரகத்தில் ஓய்வில் விடப்படும் ஒரு துணிக்கை 8m தூரத்தைக் கடக்க 2sec எடுத்தது. எனின், 1m நீளமான ஊசல் ஒன்றின் அலைவு காலத்தை அக் கிரகத்தில் காண்க.
1) 1.57s 2) 3.14s 3) 6.28s
4) 9.42s 5) யாவும் பிழை.

43. அருகில் காட்டப்பட்டுள்ள திணிவின் அதிர்வு மீடிறன் யாது?
1) $1/2\pi\sqrt{3K/2m}$
2) $1/2\pi\sqrt{2K/3m}$
3) $1/2\pi\sqrt{3K/m}$
4) $1/2\pi\sqrt{K/3m}$
5) $1/2\pi\sqrt{K/m}$




44. உலோகமொன்றின் நுழைவாய் மீடிறன் fo ஆகும். அதன் மீது மீடிறன் f(> fo) உடைய மின் காந்த அலைபடும்போது வெளிவிடப்படும் ஒளி இலத்திரன் கொண்டிருக்கும் சக்தி,
1) h(f-fo) 2) hf/fo 3) hecf-fo 4) h/f fo 5) h/fo

45. $0^oC$ வெப்பநிலையில் வளியில் ஒளியின் வேகத்தின் இரு மடங்காகும் வேகம் உள்ளபோதும் வளியின் வெப்பநிலை என்ன?
1) $1092^oC$ 2) $819^oC$ 3) $809^oC$ 4) $546^oC$ 5) $1092^oC$

46. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தளவாடிக்குச் சமாந்தரமாக ஒளிக்கதிர் பட்டு மற்றைய தளவாடியில் தெறித்து முதல் தளவாடிக்கு சமாந்தரமாக வெளியேறுமாயின் தளவாடிகளுக்கு இடைப்பட்ட கோணம் என்ன?
1) $60^o$
2) $90^o$
3) $45^o$
4) $30^o$
5) $75^o$




47. குளம் ஒன்றின் அடியில் ஒரு வாயுக் குமிழி உருவாகி மேற்பரப்பை அடையும் போது அதன் விட்டம் இரு மடங்காகின்றது. எனின், குளத்தின் ஆழம் யாது? வளி மண்டல அமுக்கம் H m நீர் ஆல்
1) 7H 2) 8H 3) H 4) 2H 5) H/2

48. ஒரு உடல் $60^oC$ இல் இருந்து $50^oC$ இற்கு குளிர் 10 நிமிடம் எடுக்கின்றது. அறை வெப்பநிலை $25^oC$ ஆகவுள்ள நாளில் இவ்வுடல் குளிரவிடப்படுமாயின், மேலும் 10 நிமிடத்தின் பின்னர் உடலின் வெப்பநிலை யாது?
1) $38.5^oC$ 2) $40^oC$ 3) $42.85^oC$ 4) $45^oC$ 5) $47.8^oC$

49. வாயு ஒன்றின் பூச்சிய கெல்வின் வெப்பநிலையில் பூச்சியமாக இருக்கத்தக்கது,
1) இயக்கச்சக்தி. 2) அழுத்தசக்தி. 3) அடர்த்தி.
4) அதிர்வுச் சக்தி. 5) திணிவு.

50. வந்தர்வால்வுகளின் சமன்பாடு $(P + a/b_2)(V - b) = RT$ என்பதில் $a/V^2$ என்பதுடன் தொடர்புடையது யாது?
1) மூலக்கூறுகளின் பரப்பு.
2) மூலக்கூறுகளின் கனவளவு.
3) மூலக்கூறுகளின் சராசரி வேகம்.
4) மூலக்கூறுகளின் மோதுகை.
5) மூலக்கூறுகளுக்கிடையிலான கவர்ச்சி விசை.

51. வாயு ஒன்றின் கனவளவு எதிர் அமுக்க வரைபை படம் காட்டுகின்றது. இந்த வரைபை பயன்படுத்தி இத்தொகுதியில் செய்யப்பட்ட வேலை?
1) $4\pi KJ$
2) $3\pi KJ$
3) $2\pi KJ$
4) $8\pi KJ$
5) $\pi KJ$

52. ஒரு முனை மூடிய குழாய் 512Hz அடிப்படை மீடிறனில் அதிருகின்றது. இக் குழாயின் இரு முனைகளும் திறந்திருப்பின் அதன் அடிப்படை மீடிறன் (Hz இல்)
1) 1024 2) 512 3) 256Hz 4) 128Hz 5) 59Hz

53. உருளையொன்றை நெருக்குவதன் மூலம் v ஆரம்பக் கனவளவுடைய பலூனுள் உருளையிலிருந்து வளி உட்செலுத்தப்பட அதன் விட்டம் இரு மடங்காக்கப்படுகிறது. இதன்போது வளிமண்டல அமுக்கம் P இற்கு எதிராகச் செய்யப்பட்ட வேலை,
1) Pv 2) 7Pv 3) 3Pv 4) 8Pv 5) 4Pv

54. ஒரே குறுக்கு வெட்டுப் பரப்பும் சமநீளமுடைய இரு கோல்களின் வெப்பக் கடத்தாறுகள் $K_1$, $K_2$ முனைக்கு முனை இணைக்கப்பட்டுள்ளன. ஒரு முனை $T_h$ மறு முனை $T_c$ பேணப்பட்டுள்ளது. கோலின் மேற்பரப்பு வழியேயான வெப்ப இழப்பு இல்லை எனில், சந்தியின் வெப்பநிலை $T_1$ யாது?
1) $K_2/K_1 (Th+Tc/2)$
2) $K_2/K_1+K_2 (Th+Tc)$
3) $K_2+K_2/2 (Th+Tc/2)$ 4) $(K_1T_h + K_2T_c/K_1 + K_2)$
5) $K_1T_h + K_2Tc/2$




55. காட்டப்பட்ட மின்சுற்றில் கொள்ளளவியில் சேமிக்கப்பட்ட ஏற்றம்,
1) 6C
2) 4C
3) 6μC
4) 4μC
5) மேலுள்ள எதுவுமல்ல.




56. குவிவுவில்லையின் குவியத் தூரம் துணியும் பரிசோதனையில் பெறப்பட்ட வரைபை உருகாட்டுகின்றது. இக்குவிவு வில்லையின் குவியத் தூரம்,
1) 5cm
2) 10cm
3) 20cm
4) 40cm
5) 160cm




57. வட்ட இயக்கம் சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A- சட்டத்து மாட்டேற்றுச்சட்டம் என்பது ஆர்முடுகல் அடையாத மாட்டேற்றுச் சட்டமாகும்.
B - மையநோக்கு விசையும் மையநீக்கு விசையும் இரு வெவ்வேறு மாட்டேற்றுச் சட்டங்களில் வைத்து விளக்கப்படவேண்டியவை.
C - நியூட்டனின் இயக்க விதிகளும் சடத்துவ மாட்டேற்றுச் சட்டத்தில் மட்டுமே உண்மையாகும்.
மேலுள்ள கூற்றுக்களில் எது சரியானது?/எவை சரியானவை?
1) A 2) B 3) C 4) A, B 5) A, B, C

58. செவ்வகச்சுருள் ஒன்று N சுற்றுக்களை கொண்டிருப்பதுடன் A பரப்பையும் உடையது. அது சீரான காந்தப்புலம் B இல் சீரான கோண வேகம் ω உடன் சுற்றப்படுகிறது. தூண்டப்படும் உயர்மின்னியக்க விசை,
1) NBA / ω 2) NBA / ω 3) NBA / $\omega^2$ 4) NBAω 5) Bω / NA

59. m திணிவுடைய ஒரு பொருள் பூமியின் மேற்பரப்பிலிருந்து பூமியின் மேற்பரப்பிற்கு மேல் nR உயரம் எடுத்துச் செல்லும்போது பொருளில் ஏற்பட்ட அழுத்த சக்தி மாற்றம்?
1) mgR 2) mgnR
3) [(n+1)/n] mgR 4) n / (n+1)mgR 5) 0

60. இரு நீண்ட சமாந்தர கடத்திகள் A யும் B யும் முறையே I, 2I மின்னோட்டங்களை காவுகின்றது. இவ்வோட்டங்களினால் விளையுள் காந்தப்புலம் பூச்சியமாக இருக்கும் புள்ளி,
1) A இற்கும் B இற்கும் இடையில் அரைப்பங்கு.
2) A இன் இடது பக்கத்தில் 10cm இல் இருக்கும்.
3) A இன் இடது பக்கத்தில் 5cm இல் இருக்கும்.
4) B இன் வலது பக்கத்தில் 10cm இல் இருக்கும்.
5) B இன் வலது பக்கத்தில் 5cm இல் இருக்கும்.

## பகுதி II, A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. ஒரு மாணவன் வெற்று ஐஸ்கிறீம் கோப்பை, 50 சத நாணயங்கள் போன்றவற்றை பயன்படுத்தியும் மிதப்புவிதி தத்துவத்தினையும் பயன்படுத்தி நீரின் அடர்த்தியை கணிக்க முயல்கின்றான். அளவுச் சாடியும் மாணவனுக்கு வழங்கப்பட்டு உள்ளது. முதலில் அம்மாணவன் ஐஸ்கிறீம் கோப்பையினுள் 50 சத நாணயங்களை இட்டு கோப்பையை மட்டுமட்டாக நீரினுள் அமிழவைக்கின்றான். பரிசோதனையின்போது எடுக்கப்படும் வாசிப்புகள் பின்வருமாறு:-
நாணயம் ஒன்றின் சராசரித்திணிவு - m(gram)
கோப்பையை மட்டுமட்டாக நீரினுள் அமிழவைக்கத் தேவையான நாணயங்களின் எண்ணிக்கை - x.
ஐஸ்கிறீம் கோப்பையின் கொள்ளளவு - V ($cm^3$).

1) 50 சத நாணயத்தின் சராசரித் திணிவைக் காண்பதற்கு தேவைப்படும் அளவிடும் கருவியையும் பரிசோதனை முறையையும் சுருக்கமாகத் தருக.
.....
2) ஐஸ்கிறீம் கோப்பையின் கொள்ளளவு கணிக்கப்படும் முறையை சுருக்கமாகத் தருக.
.....
3) மேலே தரப்பட்ட 3 வாசிப்புகளையும் பயன்படுத்தி நீரின் அடர்த்தி (Pw) தொடர்புபடுத்தும் கோவையை எழுதுக.
.....
4) ஐஸ்கிறீம் கோப்பையின் திணிவு மேலே உள்ள கோவையில் இடம்பெறாமைக்கான காரணம் யாது?
.....
5) மேலே உள்ள பரிசோதனையில் தாக்கத்தை ஏற்படுத்தும் இன்னொரு காரணியின் பெயரைத் தருக.
.....
6) 20 ஐம்பது சத நாணயங்களின் திணிவு 110g, x = 9, V = $50cm^3$ எனின், நீரின் அடர்த்தியைக் காண்க.
.....
7) ஐஸ்கிறீம் கோப்பையின் கொள்ளளவை அளக்கும்போது ஏற்படும் சதவீத வழு 4 எனின், அளவுச்சாடியின் இழிவுக் கனவளவினைக் காண்க.
.....
8) மேற்படி பரிசோதனையின்போது ஏற்படக்கூடிய இடர்பாடுகள் தருக.
.....

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்

மாற்று மதத்தினர் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். மற்றவர்கள் பிரச்சினையாக நினைக்கும் ஒரு வேலையை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். உடன் பிறப்புக்கள் மீதான பாசம் அதிகரிக்கும். சிலர் உங்களை உற்சாகப்படுத்தும் வகையில் பேசலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### இடபம்

பிடிவாதமான செயற்பாடுகளை தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். காலையில் கசப்பான அனுபவங்களையும் மாலையில் மனதிற்கு இனிய சம்பவங்களையும் எதிர்கொள்ளும் நாள். குடும்பத்தினரின் யோசனையை கேட்டு சில காரியங்களில் இறங்குவீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல நேரிடலாம்.

### மிதுனம்

போட்டிகளை, எதிர்ப்புகளைச் சந்திக்கும் நாள். காரணம் இல்லாமல் சிலர் உங்களின் மீது கோபம் கொள்ளலாம். பிரியமான சிலரிடம் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகலாம். அதிக விலை கொடுத்து சில பொருள்களை வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆட்படலாம்.

### கடகம்

சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் சுறுசுறுப்பாக முடியும். பெருமைக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். மனதில் நினைத்திருந்த ஒரு விடயம் எதிர்பாராமல் நடந்து விடலாம். சக ஊழியர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரும்.

### சிங்கம்

தைரியம் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட சச்சரவுகள் தீர்விற்கு வரும். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். மாலை நேரத்தில் பொழுது போக்கு, உல்லாச விடயங்களுக்காக பணத்தை செலவிடலாம். பிள்ளைகள் செயற்பாடுகளை பார்த்து சந்தோஷம் அடைவீர்கள்.

### கன்னி

எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டிய நாள். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களிடம் முக்கியமான தகவல்களைச் சொல்லலாம். வயிறு உபாதைகளை தவிர்க்க கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். சோர்வு, சோம்பல் கூடு.

### துலாம்

எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்ள முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் தொடர்பான காரியத்திற்காக உங்களின் வேலைகளை போட்டு விட்டு அலைய நேரிடலாம். கோபம், வேகத்தை தவிர்க்க வேண்டிய நாள். பிள்ளைகள் விடயங்களில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகுவீர்கள்.

### விருச்சிகம்

சுபச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். தேவையற்ற செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கலாம். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும். திடீர் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

### தனுசு

காலையில் கரிசமான பொருள் செலவையும் மாலையில் சிறிதளவு பணவரவுகளையும் பெறலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை நிறுத்தி வைத்து விட்டு திட்டமிடாத வேலை ஒன்றை செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட நேரிடலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய மனம் இல்லாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### மகரம்

ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை அடுக்கடுக்காகச் செய்ய நேரிடலாம். குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். நண்பர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். சிலரிடம் வீண் வம்பு பேசி வெறுப்பேற்றுவீர்கள். பயணங்களுக்காகச் செலவிடலாம்.

### கும்பம்

ஒரு விடயத்தைப் பற்றி கவலைப்பட்டாலும், மற்றொரு விடயத்தில் சந்தோஷம் அடைவீர்கள். வீட்டில் சில வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதன் மூலம் அவமதிப்புகளுக்கு ஆளாகலாம். சேமித்த பணம் ஒன்றில் திடீரென கை வைக்க நேரிடலாம். மறதியால் அவதியுண்டு.

### மீனம்

அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். புதிய பொருள்கள் வாங்க திட்டம் போடுவீர்கள். உங்களின் நலனில் அக்கறை கொண்ட உறவினர் ஒருவரை சந்தித்துப் பேசுவீர்கள். மற்றவர்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிப்பீர்கள். விரும்பிய உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

## சாய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமையும், தீர்த்தத்திருவிழா நாளை வியாழக்கிழமையும் நடைபெறும். (204)

* * * * *

கொழும்புத்துறை, ஜூன் 30

மருதமடு அன்னையின் பெருந்திருவிழாவையொட்டிய நினைவுத் திருவிழா கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை வழிபாடும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

மடுத்திருப்பதிக்குச் செல்ல முடியாத பக்தர்களின் வசதி கருதி கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் வருடாந்தம் இத்திருவிழா கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. (204-135)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் ஸ்ரீபால சந்திரகுமார் றஜிந்தன்**

(யா/வட்டு. இந்துக் கல்லூரி, 6A மாணவன்)

பிறப்பு: 03.04.1990
ஆண்டவன் நிழலில்: 17.05.2010

மகனே! மகனே!! நீ எங்கே சென்றாய் ஐயா?
உன்னைப் பார்ப்பதற்கு எங்கள் இரு கண்ணும் துடித்திரிதே
எங்களை விட்டுப்பிரிய எப்படி ஐயா மனம் வந்ததோ
உன்னைப்போல் ஓர் பிள்ளையை எங்கு காண்போம்
எங்களது உயிரே நீ தானே ஐயா!
உனக்கென்றே இந்த மதில் எமனாய் இருந்ததோ ஐயா!
உன் உயிர் பிரியும் வேளை நீ யாரை நினைத்தாயோ ஐயா!
எங்குபார்த்தாலும் உன் உருவமே தெரிகின்றதே ஐயா!
நீ இல்லாத உலகம் எங்களுக்கு இருளே ஐயா!
எங்கள் உலகம் நீயே ஐயா!
உன் அழகு முகத்தைக்காண ஆவலாய் உள்ளது ஐயா!
ஆண்டுகள் பல சென்றாலும் உன் நினைவுகள்
எம்மைவிட்டுப் போவதில்லை ஐயா!
உன்னைப் பாதிவயதில் காலன் பிரித்தானோ ஐயா!
எங்களுக்கு ஓர் கூடராய் நீயே தோன்றினாய் ஐயா!
இந்தச் கூடர் எங்கே மறைந்தது ஐயா!
உன் பதினொராவது ஆண்டில்
எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்றதேன் ஐயா!
பெற்றவயிறு அனல்போல் கொதிக்கிறது ஐயா!
மீண்டும் ஒரு பிறவி எடுத்து எங்களிடம்
வந்து விடு ஐயா...!
உன் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனைப்பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா.

வட்டு. கிழக்கு,
வட்டுக் கோட்டை. (100039)



### கதியால் விற்பனைக்கு

வேலிக்குரிய கிளுவங்கதியால் வெட்டிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமரன் பாம், பழனி ஆண்டவர் லேன், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. தொ.பே.: 0776180675. (100050)

### புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கிலோ 480/= மட்டும். குமரன் பாம், 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். 077 6180675. (100049)

### இடம்மாற்றம்

ஆப்தீன் தையலகம் 28.06.2010 இல் இருந்து இல.54, பெரியகடை வீதி, உட்புறம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம். (100008)

### வீடு விற்பனைக்கு

அளவெட்டி தெற்கு, மேலையப்புலத்தில் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கனகரெட்ணம் ஸ்ரீதரன், இலங்கைநாயகி அம்மன் கோயில் வீதி. தொ.பே.: 021 2222354.

(100051)

### விற்பனைக்கு

Digital Printer (D.C.P), Canon N.P 1215, Canon N.P 7160, Canon IR 1600, Toshiba E.Studio-166, H.P Colour laser 2600N.

137, பலாலி வீதி, திருநெல்வேலி. 0771331784

### பணிப் பெண் தேவை

கணவன், மனைவி இருவர் உள்ள வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகளைச் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

தொடர்பு: 0779859218. சாவகச்சேரி. (அ/568736)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1, தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 05.07.2010 காலை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் செவ்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே.: 021 222 6944.
குஞ்சுபாம்: வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். தொ.பே.: 021 321 6290.
[illegible] (99917)
திருப்தி கோழி தொன்னவு செய்யப்படும்.



## INDIAN - இந்திய STUDENT VISA

A/L சித்தியடைந்த மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து Engineer / Graduate ஆக வாய்ப்பு

Anna Engineering University / Bangalore University

University Grant Commission Approved Degrees

- I.T Engineering, • Computer Science Engineering,
- Electronics and Communication Engineering, • Mechanical Engineering,
- B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy • B.Sc. Nursing • BBM. / BBA • B.Com (Computers)
- B.Sc. (Fashion & Apparel Design), • B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management), • BCA. (Computer Applicants),

Call : 077 9004194 / 0777 767818

SIC, 734, Hospital Road, Jaffna.



## நெஞ்சைவிட்டகலாத 15ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 29.10.1929
மறைவு 30.06.1995

**குருகுலம் ஏபிரகாம் லிங்கன்**
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் புகலிடமாய்
பண்பின் பொக்கிசமாய் கடமையில் கண்ணியமாய்
எம்மை வழி நடத்திச் சென்றீரே!
ஆண்டுகள் பதினைந்து அகன்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டகலாது.

உங்கள் நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

77, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (99967)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.07.1992

✱ மட்டக்களப்பு மாவட்டம் தமிழ்க் கிராமங்களில் நான்கு நாள்களுக்கு முன் இராணுவத்தினர் சுற்றிவளைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் 20 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் தொடுக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணை பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவிப்பு.

02.07.1992

✱ இலங்கை இராணுவத்தினரால் கட்டைக்காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 'பலவேகய - 2' நடவடிக்கை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு.

✱ அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க் கட்சிகளின் 'இரைச்சல் எதிர்ப்புப் போராட்டம்' நேற்று கொழும்பு நகர மண்டபத்தில் நடத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.

03.07.1992

✱ தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையைக் குழப்பி இரு சமூகங்கள் மத்தியிலும் மோதல்கள் ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு.

✱ தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனம் வெளியிட்ட செய்திகளுக்காக மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் இல்லையேல் அந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். அப்பத்திரிகை நிறுவனத்துக்கு அறிவிப்பு.

04.07.1992

✱ கட்டைக்காடு, புல்லாவெளிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நேற்று மீண்டும் மோதல்கள் வெடித்தன. அம்மோதலில் இராணுவத்தினரின் 4 கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் இடம்பெற்று வரும் 'பலவேகய - 2' இராணுவ நடவடிக்கையில் முதல் நான்கு நாள்களில் மட்டும் 57 படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

05.07.1992

✱ சுன்னாகம் பட்டினத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்கு தலில் பொது மக்கள் பலியானதாகவும் வீடுகள் தரைமட்டமானதாகவும் தெரிவிப்பு.

✱ ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வார் என இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிப்பு.

06.07.1992

✱ புல்லாவெளிப் பகுதியில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையின்போது இலங்கை விமானப் படையினரின் சகடை விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் நேற்று சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிப்பு.

✱ தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் மற்றும் வற்றாப்பளை அம்மன் கோயில் ஆகியவற்றின் மீது படையினர் நடத்திய தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸ வருத்தம் தெரிவித்திருந்ததாக அறிவிப்பு.

07.07.1992

✱ சீனச் சகடை விமானத்தை அரச படையினர் இழந்திருப்பதால் அவர்களின் இராணுவ விநியோக நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ தற்போது கிடைத்திருக்கும் ஆதாரங்களின்படி சீனச் சகடை விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர் எனக் கூறுவதை எங்களால் நிராகரிக்க முடியாது என விமான போக்குவரத்து அதிகாரிகள் தெரிவிப்பு.

08.07.1992

✱ இலங்கை அரசு கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கியமையே அங்கு வன்முறைகள் அதிகரித்தமைக்குக் காரணமாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு.

✱ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பது குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் தாம் நேரில் பேச இருப்பதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவிப்பு.

09.07.1992

✱ ஈழத்தின் வட பகுதியில் இலங்கை அரச படைகள் பொதுமக்கள் மீது நடத்தி வரும் தாக்குதல்களைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதரகத்தின் முன்னால் தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை இராணுவத் தலைமைப் பீடத்தில் மீண்டும் பிளவு ஏற்பட்டிருப்பதாக அரச கட்டுப்பாட்டில் உள்ள 'ஒப்சேவர்' நாளிதழில் தெரிவிப்பு.

10.07.1992

✱ இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நேற்று கொழும்பில் இலங்கை வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

✱ கடந்த ஞாயிறு இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்து உயிரிழந்த 19 பேரில் இலங்கை விமானப் படைத் துணைத் தளபதி வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னான்டோவின் மகனும் ஒருவர் என ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

11.07.1992

✱ திருகோணமலை மாவட்டம் கந்தளாய்ப் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 18 படையினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ தமிழ் நாட்டிலுள்ள ஈழத் தமிழ் அகதிகளை அவர்களது சொந்த இடங்களின் அடிப்படையில் பிரித்து தனி முகாம்களில் தடுத்து வைக்க தமிழ் நாடு அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிப்பு.

12.07.1992

✱ செட்டிகுளம் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 50 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடைசெய்திருப்பதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தமிழ் நாடு - பாட்டாளி மக்கள் கட்சி அறிவிப்பு.

13.07.1992

✱ செட்டிகுளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதை அடுத்து செட்டிகுளம் எல்லையோரங்களிலுள்ள தமது காவலரண்களைக் கைவிட்டு இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ இந்தியாவின் 9 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறுவதாகத் தெரிவிப்பு.

14.07.1992

✱ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களை அடுத்து வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களைப் பலப்படுத்துமாறு படையினருக்கு இராணுவ மேலிடம் உத்திரவிட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளுக்காக கடந்த ஆண்டு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த 6 ஜெட் விமானங்களாலும் அரச படைகளுக்கு அதிக பயனேதும் இல்லை என இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

15.07.1992

✱ தமிழகத்தில் இருந்து ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அழைத்து வரும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ள ஐ.நா அகதிகள் தூதரகம் முதல் தொகுதியாக 6 ஆயிரம் அகதிகளை அடுத்த வாரம் கப்பல் மூலம் மன்னாருக்கு அழைத்துவர இருப்பதாகத் தெரிவிப்பு.

✱ கொழும்பு செல்வதற்காக 'குமண' கப்பலில் ஏறிய யாழ்.அரச அதிபர், வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆகிய இரு அதிகாரிகளும் பயணம் மேற் கொள்ள முடியாதெனத் தெரிவிக்கப்பட்டு கப்பலில் இருந்து இறக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

# நவீன காட்சியறைகளில் ஆடைகள் திருடிய நான்கு பெண்கள் உட்பட எட்டுப் பேர் கைது

பறகஹதெனிய, ஜூன்30

புடவைக் கடைகளுக்குள் புகுந்து புடவை வாங்கும் தோரணையில் திருடி வந்தனர் எனக் கூறப்படும் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொகரெல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் நால்வர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது.

இவர்கள் ஓட்டோக்களில் சென்று மஹரகம, அநுராதபுரம், கண்டி குருநாகல் போன்ற பிரதேசங்களிலுள்ள நவீன காட்சியறைகளுக்குள் புகுந்து ஆடைகளை சூட்சுமமான முறையில் திருடி வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்படும் போது அவர்களிடமிருந்து 43 ஆயிரம் ரூபா பெறுமதி யான ஆடைகளும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் கைப்பற்றப்பட்ட ஆடைகளுடன் குருநாகல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)

# இராகுகாலம் முடியும்வரை காத்திருந்த கர்ப்பிணிக்கு ஓட்டோவிலேயே பிரசவம்

கொழும்பு, ஜூன்30

பிரசவத்துக்காக வைத்தியசாலை செல்வதற்கு இராகுகாலம் முடியும்வரை பொறுத்திருந்த கர்ப்பிணித் தாயொருவருக்கு ஓட்டோவிலேயே பிரசவம் நடந்த சம்வபம் காலி பிரதேச கிராமம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

கிராமத்தில் நல்ல வசதி வாய்ப்பு மிக்க இப்பெண் கர்ப்பமடைந்த நாள் தொடக்கம் காலியிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் பரிசோதனைகளை மேற்கொண்டு வந்ததுடன் பிரசவத்திற்கும் பெருந்தொகை பணம் செலவிட்டு அங்கேயே செல்லவிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், ஓட்டோவில் பிரசவித்த இப்பெண்ணை கிராம வைத்தியசாலையிலேயே சேர்க்க முடிந்தது என்று கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

தனியார் மருத்துவமனையில் பிரசவ செலவுக்காக சுமார் ஒரு லட்சம் ரூபா பணத்தை தயாராக வைத்திருந்த இப்பெண், இராகு காலம் முடிவடையும்வரை காத்திருந்து புறப்பட்டதால் செலவில்லாமல் ஓட்டோவிலேயே சுகப்பிரசவம் நடந்துவிட்டது - என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-04)

# கைத்தொழில் நிறுவனங்களின் செயற்பாடு குறித்து அமைச்சர் டக்ளஸ் விரிவாக ஆராய்ந்தார்

கொழும்பு, ஜூன்30

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கீழுள்ள தேசிய அருங்கலைச் சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகிய நிறுவனங்களின் செயற்பாடுகள், எதிர்காலத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளின் போது பிரதி அமைச்சர் வீரக்குமார திசநாயக்க மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தேசிய அருங்கலைச் சபையானது 1982ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். இதன்மூலம் பாரம்பரிய கைத்தொழில்கள் சார்ந்த பல்வேறு பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மூலம் இவ்வாறான பணிகள் நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

• இந்த நிலையில் கைத்தொழிலாளர்களின் வாழ்வாதரத்தை உயர்த்தும் அதே நேரம் அவர்களது உற்பத்திகளுக்கான சிறந்த விற்பனைச் சந்தையையும் கூட்ட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த நிலையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்ந்த நிதியம் ஏற்பாடு செய்து அதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கும் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்னெடுக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

# லண்டன் மாநாட்டில் டாக்டர் சுமதிபால

கொழும்பு, ஜூன்30

பேரிடர்கள் மற்றும் மனித நேய அவசர நிலைகளில் பொதுமக்களின் ஆரோக்கியத்தை பலப்படுத்திப் பேணுவதற்கான ஆராய்ச்சி லண்டனில் நடைபெறுகின்றது. இத்துறையில் ஈடுபட்டுள்ள பெரும் புள்ளிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள் இலங்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி அதுல சுமதிபால இம் மகாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளார்.

ஜூன் 29,30 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெறும் மகாநாட்டில் டாக்டர் சுமதிபால தமது நிபுணத்துவ ஆலோசனைகளை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது (ப)

# தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு காசோலைகள் கிடைக்கப்பெற்றன

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் சிலவற்றினூடாக மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்திற்கு தற்செயல் நிவாரண உதவிகோரி விண்ணப்பித்தோரில் சிலருக்குக் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் பிரதேச செயலகங்களுக்கு கிடைத்துள்ளன.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவாக ரூபா 10,000 வீதம் முதலாம் கட்ட உதவித்தொகையாகவும் இரண்டாம் கட்ட உதவித் தொகையாகவும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கொடுப்பனவுக்காக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ப.விக்னேஸ்வரராசன் (கற்கோவளம்), மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் பி.விஜயதாஸ் இளவரசி(மணற்காடு, குடத்தனை), நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் க.குணேஸ்வரி (முதலாம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு) ஆகியோர் முதலாம் கட்டக் கொடுப்பனவிற்காகவும், சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் சி.செபமாலை (புனித செபமாலை அன்னை வீதி, பண்டத்தரிப்பு), இ.சுகந்தி (பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய்), தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் இ.ஜெயமலர் (நீதிமன்ற வீதி, மல்லாகம்) ஆகியோர் இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்காகவும் தெரிவுசெய்யப்பட்டு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார். (50-288)

# சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேரக்கணிப்பாளர் சேவை

கைதடி, ஜூன்30

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் மீண்டும் நேரக் கணிப்பாளர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் நேரக்கணிப்பாளராகக் கடமையாற்றியவர் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து ஒரு வருடமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் புதிய நேரக் கணிப்பாளர் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால், ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கனகரத்தினம் ம.ம.வி. அதிபர் வே.ஞானகாந்தன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், பரீட்சையில் சித்திபெற்ற மாணவி ஒருவரைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்லைக்கழக வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும், யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.இராசலிங்கம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

நுணாவில் மேற்கைச் சேர்ந்தவர்களும் தற்பொழுது பிரான்ஸில் வசிப்பவர்களுமான திரு.திருமதி சங்கரதாஸ் தம்பதிகளின் புத்திரன் செல்வன் சாயிஸ் அவர்களின் பிறந்த நாளாகிய இன்று (30.06.2010) அவரை கொள்ளங்கிராய் பிள்ளையார் துணையுடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

# 1st Birth Day முதலாவது பிறந்த தின வாழ்த்து

சா
யி
ஸ்

வாழ்த்துவோர்:
தாத்தா, அப்பா, அம்மா, மிதுன் அண்ணா, கனடாவில் வசிக்கும் சித்தி, சித்தப்பா, அக்சனா, தனுஸ், அருண் மாமா, மாமி மற்றும் உற்றார், உறவினர்கள்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

30.06.2010

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாத நோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத் தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப்பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற் படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு - பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

**கால் ரூறிஸ்ற் இன்**

*(சுதர்ஸன் எலக்ரிக்கலுக்குப் பின்புறம்)*

392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 071 9315664, 0777 569205

(ச/568671)

## மரண அறிவித்தல்

### சரஸ்வதி அருளம்பலம்

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கைப் பிறப்படமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி அருளம்பலம் 25.06.2010 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுந்தரம் பிள்ளை-கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நாகநாதர் அருளம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி பாக்கியநாதன், லோகேஸ்வரி ஞானசேகரம், சிவபாலன் (லண்டன்), புஸ்பவதி லோகேஸ்வரன் (இலங்கை), தனபாலன் (லண்டன்), தர்மபாலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி மனோகரன், நாகலிங்கம், காலஞ்சென்ற நல்லதம்பி, சீவரட்ணம், சபாரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியநாதன், காலஞ்சென்ற ஞானசேகரம், தில்லைராணி, லோகேஸ்வரன், சியாமளா, சுசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தன், பாமதி இரட்ணகுமார், சுகந்தன், சந்திரபாலன், ஜெயச்சந்திரன், சசிகலா ஜெயாபரன், இந்திரகலா உமாகாந்தன், சயந்தவி, லவன், அகிலன், அனித்தா, வனுஷா, தனுஷன், ஜனுஷன், வனுஷன், கெயிலா, சயிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிஷானி, தருணன், பதுஷன், நவநீதன், சஞ்சீதன், லருஷா, அபிமன், தர்ஷிகா, ஐஸ்வர்யா, கிஷோ, மொனிஷா, கமிஷா, அபிராமி, சுமூகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

76/1, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
புஸ்பவதி லோகீஸ்வரன் (மகள்)

(100061)

## சைக்கிள்களுக்கு இலக்கத்தகடு

மூளாய், ஜூன் 30

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சைக்கிள்களுக்கான இலக்கத் தகடு வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தியுள்ளது

இதற்காக சில ஊழியர்கள் நியமிக்கப்பட்டு மேற்படி நடவடிக்கை பல் வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றது. (50-99)

## பாடசாலைக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள்

மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான யோகலிங்கம் என்பவர் தனது மகனின் ஞாபகார்த்தமாக இந்த ஒலிபெருக்கிச் சாதனங்களை கையளித்ததாக அதிபர் சி.பவநேந்திரன் தெரிவித்தார். (50-207)

## அலங்காரத் திருவிழா

உதயநகர், கைதடி மேற்கு அண்ணமார் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை தீ மிதிப்பு நிகழ்வும் இடம்பெறும். (204-288)

## கடை வாடகைக்கு

ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 0771686300

## தவறிவிட்டன

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகராசா சுகந்தன் என்பவரது (841802888V) என்னும் தேசிய அடையாள அட்டை மற்றும் 0905002824 என்னும் இலக்கமுடைய இராணுவ அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணம்-சின்னக்கடைச் சுற்றாடலில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0776913225 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் தம்பிராசா

தெல்லிப்பழை கிழக்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் தம்பிராசா 28.06.2010 திங்கட்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், இராசராணி, வசந்தராணி, மங்களேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 30.06.2010 புதன்கிழமை காலை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : கி. இராசா (சகோதரர்),
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4.
தொலைபேசி இலக்கம்
011 - 2587638

## பகிரங்க ஏலவிற்பனை-2010, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் பாவிக்கப்பட்ட தற்பொழுது பாவனையில் இல்லாத பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. பொருள்களின் விவரம் பின் வருமாறு:

1. பாவித்த மரத்தளபாடங்கள்
2. உருக்குக் கதிரைகள்
3. மீன்முறுக்கு இயந்திர உதிரிப்பாகம்
4. மின்விசிறிகள் மற்றும் மின்சார உபகரணப் பொருள்கள்.
5. பாவித்த வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பற்றறிகள்
6. அலுமினிய பெயர்ப் பலகைகள்
7. வெளி விசைப்படகு இயந்திரம் (Out Board Engine)
8. றோனியோ, நிழல்பிரதி, தொலைநகல், தட்டச்சு மற்றும் அச்சுப்பதிப்பு இயந்திரங்கள். (Ronio Machine, Photocopier, Fax Machine, Typewriter, Scanner, Printers)
9. வாகன உயர்த்தி (Jack)
10. சில்வர் நீர் வடிகட்டி, சாப்பாட்டுப்பெட்டி (Water Filters & Tiffin Carrier)
11. சுவர்க் கடிகாரங்கள், கணிப்பான்கள், கூட்டல் இயந்திரங்கள், கத்தி, கேத்தல்கள்.
12. கூரை இரும்புக் கேடர்கள் மற்றும் இரும்புப் பொருள்கள்.
13. கணனி ஒலிபெருக்கி சாதனங்கள். (Speaker Set)

மேற்படி பொருள்களின் ஏலவிற்பனையானது 15.07.2010 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மாவட்டச் செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அலுவலக நாள்களில் 01.07.2010 முதல் 13.07.2010 வரை காலை 9 மணிமுதல் பி.ப. 3 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருள்களைப் பெறுபவர்கள் உடனடியாக முழுப் பணத் தொகையையும் மாவட்டச் செயலக காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டு பொது 172 ஐப் பெற்று அன்று மாலை 4 மணிக்குப் பிந்தாமல் பொருள்களை மாவட்டச் செயலகத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

க.கணேஷ்,
மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(ச/568744)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி சக்திவேல்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி சக்திவேல் 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற சுப்பிரமணியம் சக்திவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லமுத்து தம்பதியரின் மருமகளும் சஞ்சீவனின் (லண்டன்) அன்புத் தாயும் விஜயகுலசிங்கம், பரமேஸ்வரி, ஜெயராசசிங்கம், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, இராஜகுலசிங்கம், சுமதி ஆகியோரின் சகோதரியும் அனுசியாதேவி, விமலாதேவி, பத்மாதேவி, சர்வானந்தராஜா, ரஞ்சனா, செல்வராசா, நாகேந்திரம், பத்மினி, விஜயராஜ் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2010) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு இல.29/06, புகையிரத நிலைய வீதி, புங்கன்குளம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.சக்திவேல்
(கணவர்)

இல.29/06, புகையிரத நிலைய வீதி,
புங்கன்குளம், யாழ்ப்பாணம்.

(100059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு விமானப் படைத்தள முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இராமநாதபுரம் ம.வியில்

கிளிநொச்சி, ஜூன் 30

இரணைமடு விமானப் படைத்தள ஓராண்டு நிறைவு நிகழ்வு கடந்த 21ஆம் திகதி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்பட்டது.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் முன்னதாக மங்கள விளக்கேற்றப்பட்டது. பின்னர் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன: பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பெரியார்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றதைத் தொடர்ந்து விமானப்படையினரின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்குப் பால்சோறு வழங்கப்பட்டதுடன் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்குப் புத்தகப்பை உட்பட கற்றல் உபகரணங்கள் விமானப்படையினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அத்துடன் போரின்போது ஊனமுற்ற இராமநாதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த சிலருக்கு சக்கர நாற்காலிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நிகழ்வில் விமானப்படை உயர் அதிகாரிகள், படை அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்படப் படையினரும், மாணவரும் கலந்துகொண்டனர். (405)

# கைத்தொலைபேசியூடான அழைப்புகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் வன்னிப் பாவனையாளர்

## குறித்த நிறுவனங்களை நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சியில் கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் பகல்வேளைகளில் கைத்தொலைபேசியினை ஓரளவு பாவிக்க முடிகின்ற போதிலும் மாலை 6 மணியின் பின்னர் இரவு 10 மணிவரை அழைப்புக்களைப் பெறமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நகரிலிருந்து சற்றுத் தூரத்தில் உள்ள இடங்களில் குறிப்பாக கிளி நொச்சியின் கிழக்குப் பிரதேசமான சிவிக் சென்ரர், வட்டக்கச்சி, மாயவனூர், இராமநாதபுரம், மாவடி, வட்டக்கச்சி சந்தையடி, கல்மடுநகர் ஆகிய பிரதேசங்களில் கைத்தொலைபேசியினை பாவிக்க முடியாத நிலை உள்ளது. இப்பகுதிகளில் தொலைபேசிக் கோபுரங்கள் எதுவும் நிறுவப்படாமல் உள்ளதாலும், கிளிநொச்சி, இரணைமடு பகுதியில் உள்ள கோபுரங்கள் வீச்சு எல்லை குறைவாக இருப்பதாலும் இப்பகுதியில் கைத்தொலைபேசியினைப் பாவிக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைத்தொலைபேசி 'சிம்' கார்ட்களையும், பணம் மீள் நிரப்பும் அட்டைகளையும் இப்பகுதியில் போட்டி போட்டு விற்பனை செய்துவரும் கைத்தொலைபேசி நிறுவனங்கள் கைத்தொலைபேசிப் பாவனை விடயத்தில் இவ்வாறு அக்கறையின்றி இருப்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று மாதமாகியுள்ள நிலையில் இப்பகுதி கைத்தொலைபேசி பாவனையாளர்களின் பிரச்சினை குறித்து குறித்த நிறுவனங்கள் அக்கறையின்றி இருப்பது தொடர்பாகப் பாவனையாளர்கள் தமது முகவர்களுக்குப் பலமுறை முறைப்பாடு செய்துள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட கைத்தொலைபேசி நிறுவனங்கள் விரைந்து செயற்பட்டு இப்பகுதி மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-405)

# 7 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் முருங்கனில் ஆயுத முனையில் கொள்ளை

மன்னார், ஜூன் 30

முருங்கன் பிரதேசத்திற்குட்பட்ட கற்கடந்தகுளம், பிச்சைக்குளம் ஆகிய கிராமங்களில் கடந்த 27ஆம் திகதி அதிகாலையில் சுமார் 7லட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இக்கொள்ளையில் ஆறு கொள்ளையர் ஈடுபட்டதாகக் களவு கொடுத்த வீட்டுரிமையாளர்கள் மேலும் விசாரணையில் தெரிவித்தனர்.

இவர்கள் கைக்குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் பல்வேறு ஆயுதங்களுடன் இக்கொள்ளையில் ஈடுபட்டதாக அவர்கள் கூறினர்.

கற்கடந்த குளத்தில் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், பிச்சைக் குளத்தில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் இரு வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இக்கொள்ளைகள் அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றதாகவும் வீட்டு உரிமையாளர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்தனர்.

சமீப நாள்களாக மன்னார் நகரம் உட்படப் பல கிராமங்களிலும் ஆயுதக் கொள்ளையரின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் எனவே பொதுமக்கள் தங்கள் நகைகளையும், பணத்தையும் வங்கிகளில் வைப்பிலிட்டுப் பாதுகாக்கும்படியும் பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர். (50-80)

# வாகனங்களின் அதிகரிப்பினால் மன்னாரில் வீதி விபத்துக்கள்

மன்னார், ஜூன் 30

மன்னார் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டது. இதனால் வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன.

மன்னாரில் பல்லாயிரக் கணக்கில் சைக்கிள்களும் ஆயிரக் கணக்கில் மோட்டர் சைக்கிள்களும் நூற்றுக் கணக்கில் சிற்றூர்திகளும் முச்சக்கரவண்டிகளும் பேருந்துகளும் ஓடுங்கிய வீதிகளில் இரவும், பகலும் ஓடித் திரிகின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாதுள்ளது.

மன்னாரில் பிரதான ஏ-14 வீதியைத் தவிர அனைத்து வீதிகளும் குன்றும் குழியுமானவை.பிரதான வீதிகளிலும் நடைபாதைகளை அங்காடிகள் ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலையில் பொதுமக்கள் எங்ஙனம் நடமாடுவது எனக் கேள்வி எழுப்புகின்றனர்.

வாகனங்களும் அசுர வேகத்தில் ஓடித் திரிகின்றன. இதன் விளைவாகத் தினமும் ஏற்படும் வீதி விபத்துக்களைத் தடுக்க முடிவதில்லையென்று போக்குவரத்துப் பொலிஸார் காரணம் சொல்கின்றனர். (50-80)

# வன்னியில் விசர்நாய்களின் அட்டகாசம் அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி, கல்மடு நகர் பகுதியில் விசர் நாய்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கடந்த இருமாதங்களுக்கு முன் இப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் நீண்டகாலம் பராமரிப்பு இன்றி நின்ற நாய்கள் விசர் நாய்களாக அலைந்து திரிகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் நாய்களைக் கண்டு அஞ்சுகின்றனர்.

பல பொதுமக்களைக் கடித்துள்ள சில விசர் நாய்கள் இறந்துள்ளதால் அவர்கள் நாய்களைக் கண்டு அஞ்சி விலகிச் செல்கின்றனர். மனிதர்களை மட்டுமின்றி ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் மற்றைய நாய்களையும் இந்த நாய்கள் கடித்து வருகின்றன.எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விசர் நாய்களை ஒழிக்கும் நடவடிக்கைகளை விரைவாக எடுத்து இப்பகுதி மக்களின் அச்சமற்ற நடமாட்டத்திற்கு உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-405)

# மன்னாரில் பொலிஸாரின் அணிவகுப்பு நேற்று

மன்னார், ஜூன் 30

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை மாபெரும் காவல் துறையின் அணிவகுப்பு நடைபெற்றது. சுமார் முந்நூற்றுக்கும் அதிகமான பொலிஸார் கலந்துகொண்ட இந்த வைபவத்தில் மன்னார் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அணி வகுப்பு மரியாதையை முடித்துக்கொண்டு இவர்கள் நடை பவனியில், மன்னார் நகரத்தை வலம் வந்தனர். இவ் வைபவத்தில் மன்னார் மக்களும் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுத் தங்கள் பங்களிப்பை நல்கினர். (50-80)

கிளிநொச்சி நகருக்கு அண்மிய திருநகர்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 'கிறேன்' மூலம் கம்பங்கள் நடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:கிளிநொச்சிச் செய்தியாளர்)

## 40 வருடங்களுக்குப் பின்னர்

# சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மன்னார் பதிவாளர் திணைக்களம்

மன்னார், ஜூன் 30

கடந்த நாற்பது வருடங்களாகச் சொந்தக் கட்டடமில்லாமல் இயங்கிவந்த மன்னார் பதிவாளர் திணைக்களம் தற்போது தனது சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றது.

மன்னார் அரச செயலகத்தில் ஒரு பகுதியிலுள்ள மேல் மாடியில் இது இயங்குவதாக மன்னார் உதவிப் பதிவாளர் கூறினார். ஒரு காலத்தில் மன்னார் கச்சேரியின் பின் பகுதியில் இயங்கிவந்த இத்திணைக்களம் சென்ற 2003ஆம் ஆண்டு மன்னார் பிரதேசச் செயலகத்தின் பழைய கட்டத்திற்கு இடம்மாறியது. பின்னர் 2007இல் மீண்டும் மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தின் மேல்மாடிக்கு இடம்மாறியது.

கடைசியாகச் சென்ற மாதம் முதல் தனது சொந்தக் கட்டடத்தில் அது இயங்க ஆரம்பித்துள்ளது. (50-80)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையேயான சதுரங்கப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் விளையாடும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். (படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற மீளக் குடியமர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உதவியின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதற் படத்திலும், யாழ்ப்பாண உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த இரு படங்களிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உதவித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் இறுதி இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: சுகந்தன்)*

# புலம்பெயர்ந்த தமிழர்களை.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் ஊகிப்பதற்கு உதவியாக இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் இராணுவ நடவடிக்கைகள் சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவும், பல சந்தர்ப்பங்களில் இரகசியமாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நூற்றாண்டில் இந்தியாவின் இராணுவத் தலையீடுகள் முதன்முதலில் 1971ஆம் ஆண்டு ஆரம்பமாகி இருந்தது. ஜே.வி.பி.யை அடக்குவதற்கு என்று இலங்கை அரசின் கோரிக்கையின் பெயரில் இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்திருந்தன.

அதன் பின்னர் 1987ஆம் ஆண்டில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு என்று கூறி இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்திருந்தன.

இந்த இரண்டு நடவடிக்கைளும் இலங்கை அரசின் அனுமதியுடன், அரசின் அழைப்பின் பெயரிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதேபோன்று புலிகள் யாழ். குடாவைக் கைப்பற்ற மேற்கொண்டிருந்த 'ஓயாத அலைகள்-4' நடவடிக்கைகளின் போது, யாழ். குடாவில் முற்றுகைக்கு உள்ளாகி இருந்த இலங்கைப் படையினரைக் காப்பாற்ற இந்தியப் படையினர் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராகி இருந்தார்கள். பலாலி தளத்தைக் கைப்பற்றி ஒரு நாள் முழுவதும் அதனைத் தக்கவைத்துக் கொண்டு இலங்கைப் படையினரை வெளியேற்றுவதற்கு இந்தியப் படையினர் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால், இறுதி நேரத்தில் பல்வேறு காரணங்களால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. அந்த நடவடிக்கையும் இலங்கை அரசின் அழைப்பின் பெயரிலேயே மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இவை எல்லாம் ஒரு புறம் இருக்க, இலங்கை அரசின் அனுமதி இல்லாமல் இலங்கையில் படைநடவடிக்கைகள் எடுப்பதற்கான திட்டங்கள் சிலவற்றையும் இந்தியப் படையினர் முன்னர் வகுத்திருந்தார்கள்.

1987ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கைப் படைகள் யாழ்ப்பாணம் வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையை மேற்கொண்டிருந்த போது, யாழ். மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போடும் 'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கை 04.06.1987 அன்று இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை அரசின் அனுமதி இன்றி இலங்கையில் இந்தியா மேற்கொண்ட ஓர் அதிரடி இராணுவ நடவடிக்கை இது.

இது போன்று இலங்கை அரசுக்கு எதிராக இலங்கை மண்ணில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு இந்தியா பல இரகசியத் திட்டங்களை வகுத்திருந்த விடயம் பின்நாட்களிலேயே வெளிவந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

80 களின் ஆரம்பத்தில் ஈழ்ப் போராளிகளை அடக்குவதற்கு என்று ஜே.ஆர். அரசு மேற்குலக நாடுகளின் பக்கம் சாய ஆரம்பித்ததைத் தொடர்ந்து இலங்கையை வழிக்குக் கொண்டு வருவதற்கும், இலங்கைமீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கும் இந்தியா பல திட்டங்களை வகுத்திருந்தது. இனப்பிரச்சினையைக் காரணம் காண்பித்து இந்தியாவின் ஜென்ம விரோதிகளான அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் இருந்தெல்லாம் இலங்கை அரசு ஆயுதம் மற்றும் பல்வேறு உதவிகளையெல்லாம் பெற ஆரம்பித்திருந்ததைத் தொடர்ந்து, இலங்கையை ஆக்கிரமிக்கும் நோக்கம் இந்திய அரசியல் தலைமையிடம் வலுப்பெற ஆரம்பித்திருந்தது. அதற்கான திட்டமும் தீட்டப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில்தான், இந்திய இராணுவத்தின் தளபதி பொறுப்பை கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜீ புதிதாக ஏற்றுக்கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து இந்தியப் படைகள் நவீனமயப்படுத்தப்பட்டன. புதிய போர் யுக்திகள் வகுக்கப்பட்டன. நவீன ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவம் தனது பலத்தைப் பரீட்சித்துப் பார்க்க விருப்பப்பட்டது. அதேவேளை இலங்கை மீதும் ஓர் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளவேண்டிய அரசியல் தேவையும் உருவாகி இருந்ததால், இலங்கை மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு இந்தியப் படைத்தளபதி சுந்தர்ஜீயிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை மீது மேற்கொள்ளப்பட இருந்த படையெடுப்புக்கு யார் யார் தலைமை வகிப்பது, எந்தெந்த இலக்குகளைத் தாக்குவது, எந்தெந்தப் படைப்பிரிவுகள் தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றுவது என்றெல்லாம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இலங்கை மீது மேற்கொள்ளப்பட இருந்த தாக்குதல் நடவடிக்கைக்கு 'திரிஷக்தி' என்று பெயரும் சூட்டப்பட்டிருந்தது.

ஏதோ காரணத்துக்காக இந்த நடவடிக்கை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

இதேபோன்று இலங்கைக்கு எதிராக மேற்கொள்வதற்கென்று மற்றொரு நடவடிக்கையும் திட்டமிடப்பட்டிருந்தது. ராஜீவ் காந்தியின் பணிப்புரையின் பெயரில் இந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்காக இந்திய இராணுவத்தின் பல்வேறு படை அணிகளைக் கொண்ட தனிப் பிரிவொன்றும் 1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டிருந்தது."-("MO-SL'(Mission Of - Sri Lanka) என்று இதற்கு பெயரிடப்பட்டிருந்தது. 87ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட 'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கைக்கு இலங்கைப் படையினர் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தால் இந்தியப் படையின் இந்த விஷேட பிரிவினர் களமிறக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், இலங்கைப் படையினர் எதுவுமே செய்யமுடியாது அடங்கிப் போயிருந்ததால் அதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

இதேபோன்று,1987-88ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்த போதும், இலங்கையில் மேற்கொள்ளுவதற்கு என்று இந்திய இராணுவத்தினால் மற்றொரு இரகசியத் திட்டத்தை தீட்டியிருந்தார்கள்.

இந்தியாவுக்கு எதிராக ஜே.வி.பியினர் தென்பகுதியில் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து வன்முறையில் இறங்கியிருந்த காலப்பகுதியில் இந்தியப் படையினர் ஓர் இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டிருந்தனர்.

இந்தியப் பொருட்களை கடைகளில் விற்கக்கூடாது என்று உத்தரவிட்டு இந்திய விரோதப் போக்கை ஜே.வி.பியினர் மிக மோசமாக தென்பகுதிகளில் மேற்கொண்டு வந்த வேளையில், மலைநாட்டில் இருந்த இந்தியத் தமிழர்களுக்கு எதிராகவும் ஏதாவது தாக்குதல்கள் இடம்பெற்றுவிடும் என்று இலங்கையில் இருந்த இந்தியப் படையினர் எதிர்பார்த்தார்கள். அப்படி மலையகத்தில் இருந்த இந்தியத் தமிழர்களுக்கு எதிராக ஏதாவது தாக்குதல் இடம்பெறும் பட்சத்தில் மலையகத்தில் ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இந்தியப் படையின் அதிகாரி லெப்டினட் ஜெனரல் திபீந்தர் சிங்கின் தலைமையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதற்காக பலாலி தளத்தில் ஒரு விஷேட பரசூட் கொமாண்டோ அணி தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஹெலி மூலமாக இவர்களை மலைநாட்டில் தரையிறக்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

அதேவேளை, மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் 76ஆவது காலாட் படைப்பிரிவை மட்டு-பதுளை ஏ-5 வீதி வழியாக மலைநாட்டுக்கு நகர்த்தும் திட்டத்தையும் இந்தியப் படையினர் கைவசம் தயார் நிலையில் வைத்திருந்தார்கள். ஆனால், மலையகத்தில் இந்தியத் தமிழர்களுக்கு பாரிய அச்சுறுத்தல் எதுவும் ஏற்படாததால் இந்த திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

மேற்குறிப்பிட்டது போன்று, ஈழப் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்ட பொதுவான இராணுவ நடவடிக்கைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

இலங்கை விடயத்தில் இந்தியா மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளத் திட்டமிட்ட மேற்குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கைகள் பொதுவாகவே இலங்கையின் அரசியலைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். ஆனால், குறிப்பாக ஈழத் தமிழர்களையும், ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் குறிவைத்தும் இந்தியா பல இரகசிய நடவடிக்கைகளை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தது.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர்கள் அறிந்திருக்க வேண்டியதும், நினைவில் மீட்டுப் பார்க்கவேண்டியதுமான விடயங்கள் அவை. தமிழ்நாட்டில் தங்கியிருந்து தமது போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்த ஈழவிடுதலை அமைப்புக்களைப் பிளவுபடுத்தியது, கருணா விவகாரத்தில் சம்பந்தப்பட்டது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை குழப்பியது, 4ஆம் கட்ட ஈழ யுத்தத்தின் பொழுது சதிகளைச் செய்தது என்று ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட இரகசிய நடவடிக்கைகள் பல இருக்கின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இதுபோன்ற இரகசிய நடவடிக்கைகள் பற்றியும், எதிர்காலத்தில் இடம்பெறச் சாத்தியமாக இருக்கின்ற சில இரகசிய நடவடிக்கைகள் பற்றியும், இந்த இரகசிய நடவடிக்கைகளில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஈழத் தமிழர் என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும், - மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம்.


## கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 761
சீட்டிழுப்பு திகதி 28.06.2010

எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 04 22 34 47

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 18,706,704.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 13 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 289 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 563 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 14229 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8072 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 202426 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 31869 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,832,680.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 18,736,596.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

522ஆவது படையணி நடத்திய கிரிக்கெட்:

# கிசாந்தனின் துல்லிய பந்துவீச்சு, காந்தரூபனின் அதிரடி; கிண்ணத்தைக் கைப்பற்றியது சாவகச்சேரி சிவன் வி.க.

யாழ்ப்பாணம்,ஜூன்30

522ஆவது படையணியினரால் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளிடையே நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் த.கிசாந்தனின் துல்லியமான பந்துவீச்சினாலும் ஏ.காந்தரூபனின் அதிரடி ஓட்டங்கள் குவிப்பினாலும் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியினர் ஏழு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர்.

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஒரு மாதமாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க.கிரிக்கெட் அணியும் சாவகச்சேரி சிவன் வி.க. கிரிக்கெட் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணியினர் முதலில் துடுப்பாட்டத்திற்குத் தீர்மானித்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் ஸ்ரீ முருகன் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. அணியைச் சேர்ந்த பா.உதயசங்கர் 3 சிக்ஸர் ஒரு பவுண்டரி உட்பட 26 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் சிவன் வி.க. அணி வீரர் த.கிஷாந்தன் மூன்று ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

73 ஓட்டங்கள் வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிவன் அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.காந்தரூபன் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரி உட்பட 27 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

13.1. ஓவரில் 73 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கேடயத்தை தனதாக்கியது.

இந்நிகழ்வில் 52ஆவது படையணி தளபதி பிரிகேடியர் லால் பெரேரா, 522 ஆவது படையணி கட்டளைத் தளபதி கேணல் ஹேமந்த பண்டார, 523ஆவது படையணி கட்டளைத் தளபதி அபே நாயக்கா, மேஜர் ரணக்கொட, நகர கட்டளைத் தளபதி மேஜர் ஹேமரத்தின, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இறுதிப் போட்டியின் நடுவர்களாக சார்ஜன்ட் எச்.எஸ்.ரி. மெண்டிஸ், லான்ஸ் கோப்ரல் ஏ.எம்.பியந்தகுமார ஆகியோர் கடமையாற்றினர்.

(50-207)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்30

உரும்பிராய் செல்லப்பா விளையாட்டுக் கழகம் 25ஆவது வருட நிறைவை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் இன்று புதன் கிழமை தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

# சுகாதாரச் சீர்கேடான நிலையில் காணப்படும் துரையப்பா விளையாட்டரங்கு மலசலகூடம்

## உரியவர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன்?



வலி.வடக்கு,ஜூன்30

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள மலசலகூடம் உரியமுறையில் பராமரிக்கப்படாமையால் மிகவும் சுகாதாரச் சீர்கேடான முறையில் காணப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தின் மிகவும் பிரபல்யம் வாய்ந்த இந்த விளையாட்டரங்கு அண்மைக் காலமாக தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

நாளாந்தம் சுமார் 300 இற்கும் குறையாத சுற்றுலாப் பயணிகள் இந்த மல சலகூடத்தை பயன்படுத்திவரும் நிலையில் சுகாதாரச் சீர்கேடான முறையில் இந்த மலசலகூடம் காணப்படுகின்றமையால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மிகப்பெரிய அளவில் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில் டெங்கு ஒழிப்பு அலுவலர்கள் இத்தகைய பொது மலசல கூடங்களின் சுகாதாரச் சீர்கேட்டையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மலசலகூடத்திற்கு வேண்டிய நீர் வசதிகளை உரியமுறையில் வழங்குவதுடன் அவற்றைச் சுகாதாரமான முறையில் பேணுவதற்கும் யாழ்.மாநர சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென விளையாட்டு வீரர்கள் தெரிவிக்கின்றனர். (50-86)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனான நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியையும் 2ஆம் இடத்தைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியையும் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

# மாகாணக் கரம் சுற்றுப் போட்டியில் வட மத்திய மகளிர் அணி சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 29

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரம் போட்டியில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கரம் சுற்றுப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

(50-86)

# சென்.மேரிஸ், யங் ஹென்றிஸ் அணிகள் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம்,ஜூன்30

தியாகிகள் தின உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (50-23)

# பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்; வவுனியா கோமரசன்குளம் ம.வி. மூன்றாமிடம்

வலி.வடக்கு,ஜூன்30

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் இடத்தை வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம் 10 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சுஜீவன் 16 ஓட்டங்களையும் குயின்ரன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 07 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அமல்ராஜ், இகந்தன், பிரகாஷ் தலா 02 ஓவர்கள் பந்து வீசி முறையே 09, 10, 13 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 8.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜஸ்மிதன் 11 ஓட்டங்களையும் பிரதீபன் 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சுஜீபன் 02 ஓவர்கள் பந்து வீசி 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், குயின்ரன், கார்த்திக், நிரூபன் தலா 02 ஓவர்கள் பந்து வீசி முறையே 01, 03, 13 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (50-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தியாகிகள் தினத்தினை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம்(பிற்பகல் 3.45 மணி)
* சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் ரெட் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

(50-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் கலவரம் வெடித்தது; துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் பலி!

## 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

ஸ்ரீநகர், ஜூன் 30

காஷ்மீரில் அப்பாவி இளைஞர்களை துணை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர் எனக் கூறி, பயங்கரக் கலவரம் வெடித்தது. வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்காக பொலிஸார் நடத்திய துப் பாக்கிச்சூட்டில் சிறுவன் ஒருவன் உட்பட 2 பேர் துடி துடித்துப் பலியாகினர்.

மேலும், காஷ்மீரின் வடக்குப் பகுதியிலுள்ள மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலும் நேற்றுமுன் தினம் நடந்த கலவரம் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

காஷ்மீர் மாநிலத்தில் சபோர் பகுதியில் கடந்த 25ஆம் திகதி வன்முறைச் சம்பவம் நடந்தது. மத்திய ரிசர்வ் பொலிஸார் மீது வன்முறையாளர்கள் கற்களை வீசினர். எனவே, இறப்பர் குண்டு மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகளால் பொலிஸார் சுட்டனர்.

அதில், சகீல் அகமது கனி மற்றும் பிர்துஸ் அகமது ஆகிய இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர். இதையடுத்து, அப்பாவி இளைஞர்கள் மீது துணை இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என ஹுரியத் மாநாடு மற்றும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி போன்ற பிரிவினைவாத கட்சிகள்குற்றஞ்சாட்டின.

மேலும், உயிரிழந்த இளைஞர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்காக சபோர் நகரை நோக்கி நேற்றுமுன் தினம் பேரணி செல்லப்போவதாக பிரிவினைவாதத் தலைவர்கள் அறிவித்தனர். இதனால், காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிகளில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

எனவே, ஹுரியத் மாநாடு கட்சியின் தலைவர் மிர்வேஸ் உமர் பாரூக், ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்ன தலைவர் யாசின் மாலிக் மற்றும் முக்கிய தலைவர்களான பிலால் கனி லோன், மௌவுலானா முகமது அப்பாஸ் அன்சாரி, சையது ஹசன், சாகிதுல் இஸ்லாம் ஆகியோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

ஸ்ரீநகரில் இருந்து சபோர் செல்லும் பாதையில் பேரணி எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்காக துணை இராணுவப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

சபோர் நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும், நூர்பா பகுதியில் சுமார் ஆயிரம் பேர் குவிந்து நின்று அரசுக்கு எதிராகவும், காஷ்மீர் விடுதலைக்கு ஆதரவாகவும் கோஷம் எழுப்பினர். அவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 10 வயது சிறுவன் பலியானான்.

பின்னர், நகரை நோக்கி அந்த சிறுவனின் சடலத்தை எடுத்துச் சென்றபோது மீண்டும் வன்முறை வெடித்தது. எனவே, கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கூட்டத்தை பொலிஸார் கலைத்தனர்.

இதுபோல, லவயபோரா என்ற இடத்தில் நடந்த வன்முறையின்போது, பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, இரண்டு நாட்களுக்கு முன் பலியான பிலால் அகமது வானியின் உடலை எடுத்துக் கொண்டு சபோர் பொலிஸ் நிலையம் நோக்கி 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஊர்வலமாகச் சென்றனர்.

அவர்களைக் கலைப்பதற்காக, முதலில் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. அதன் பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில், தாஜாமுல் என்ற இளைஞர் உயிரிழந்தார்.

# கமல்ஹாசனை கௌரவிக்க புதுடில்லியில் திரைப்பட விழா

நடிகர் கமல்ஹாசனின் கலைச் சேவையைக் கௌரவிக்கும் பொருட்டு மத்திய அரசின் சார்பில் டில்லியில் ஜூலை 2 முதல் 4 ஆம் திகதிவரை மூன்று நாள்களுக்கு சிறப்புத் திரைப்பட விழா நடைபெறுகிறது.

இதுகுறித்து தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கமல்ஹாசன், தன்னுடைய நான்காவது வயதில் 'களத்தூர் கண்ணம்மா' படத்தின் மூலம் அறிமுகமாகி 200 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்து சாதனை புரிந்தவர். 50 ஆண்டுகளாகத் திரையுலகில் சிறப்பான பங்களிப்பை ஆற்றி இன்றும் முன்னணி நடிகராகத் திகழும் கமல் - மாநில, தேசிய, சர்வதேச அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்றவர்.

இந்திய சினிமாவை, குறிப்பாகத் தமிழ் சினிமாவை சர்வதேச அரங்குக்கு கொண்டு சென்றவர்களில் இவர் முக்கியமானவர்.

கமல்ஹாசனின் 50 ஆண்டு கால கலைச் சேவையைக் கௌரவிக்கும் வகையில் அவர் பெயரில் திரைப்பட விழா நடைபெறுகிறது. இந்த விழாவை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அம்பிகா சோனி தொடக்கி வைக்கிறார். விழாவில் கமல்ஹாசனின் 'ஹே ராம்', 'அன்பே சிவம்', 'விருமாண்டி', 'தேவர் மகன்', 'நாயகன்', 'தசாவதாரம்', 'சாகர சங்கமம்' உள்ளிட்ட படங்கள் திரையிடப்படுகின்றன.- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# எரிபொருள் விலையுயர்வை எதிர்த்து இந்தியா முழுவதும் பா.ஜ.க. பேரணி

## ஜூலை 1, 2 ஆம் திகதிகளில் தீவிர பிரசாரம்

புதுடில்லி, ஜூன் 30

பெற்றோல், டீசல் விலை உயர்வை எதிர்த்து ஜூலை முதலாம், இரண்டாம் திகதிகளில் மாநில தலைநகரங்கள், முக்கிய நகரங்களில் பேரணி, பொதுக்கூட்டங்கள் நடத்த பாரதிய ஜனதாக் கட்சி திட்டமிட்டுள்ளது.

எரிபொருள்கள் விலை உயர்வு விவகாரத்தில் காங்கிரஸ் எதிர்ப்புக் கட்சிகளை ஒருங்கிணைக்கவும், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் இந்தப் பிரச்சினையை எழுப்பவும் பா.ஜ.க.முடிவு செய்துள்ளது.

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்த மத்திய அரசுக்கு தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் பரிந்துரைத்ததா என்பது குறித்து விளக்கமளிக்க அதன் தலைவர் சோனியா காந்தி கடமைப்பட்டுள்ளார். இந்த விவகாரத்தில் அவராகவே முன்வந்து, எதற்காக எரிபொருள்களின் விலை உயர்த்தப்பட்டது என்றும், விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள என்பவை குறித்தும் பதில் அளிக்க வேண்டும் என்று பா.ஜ.க. கேட்டுக்கொண்டுள்ளது.

விலைஉயர்வை எதிர்த்து இந்தியா முழுவதும் ஜூலை முதலாம், இரண்டாம் திகதிகளில் தீவிர பிரசாரம் மேற்கொள்ள பா.ஜ.கவின் முக்கிய தலைவர்கள் தயாராகி வருகின்றனர். பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரி, ரட்லம் நகரிலும், எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் ராய்ப்பூரிலும், மூத்த தலைவர்கள் வெங்கையா நாயுடு சென்னையிலும், ராஜ்நாத் சிங் புவனேஸ்வரத்திலும், முரளி மனோகர் ராஞ்சியிலும் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதனிடையே, எரிபொருள்கள் விலை உயர்வுப் பிரச்சினை தொடர்பாக ஒத்தகருத்துள்ள கட்சிகளை ஒன்றிணைப்பது குறித்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் சரத் யாதவ், பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரியை சந்தித்துப் பேசியுள்ளார்.

ராஷ்ட்ரீய ஜனதாத் தளம், சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகள் இரட்டை வேடம் போடுகின்றன எனவும், எரிபொருள் விலை உயர்வை எதிர்க்கும் இக் கட்சிகள், அரசுக்கு எதிரான தீர்மானங்களில் மத்திய அரசை கவிழாமல் காப்பாற்றி வருகின்றன எனவும் பா.ஜ.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

# அமெ. பயங்கரவாதிகள் பட்டியலில் இந்திய வம்சாவளி 6 வயதுச் சிறுமி

## காரணம் தெரிவிக்க ஒபாமா அரசு மறுப்பு

வோஷிங்டன், ஜூன் 30

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமியை, அமெரிக்க அரசு பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சிறுமி, விமானத்தில் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தில் வசிப்பவர் டொக்டர் சந்தோஷ் தோமஸ். இவரது ஆறு வயது மகள் அலிஷா. தோமஸ், சமீபத்தில் தனது மகளுடன் விமானத்தில் செல்வதற்காக டிக்கெட் முன்பதிவு செய்ய சென்றார். அங்கிருந்த போக்குவரத்து முகவர், அலிஷாவுக்கு விமான டிக்கெட் வழங்க மறுத்துவிட்டார். சிறுமி அலிஷாவின் பெயரை பயங்கரவாதிகள் கண்காணிப்புப் பட்டியலில் அமெரிக்க அரசு சேர்த்துள்ளது எனவும், அலிஷா விமானத்தில் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதைக் கேட்ட தோமஸ், ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தார்.

இதையடுத்து, இந்தப் பயங்கரவாதப் பட்டியலைத் தயாரித்த அமெரிக்க உள் நாட்டு பாதுகாப்புத் துறையை அணுகி, விளக்கம் கேட்டார். இதற்குப் பதில் அளித்த பாதுகாப்பு துறை அதிகாரிகள், சிறுமியின் பெயர் பயங்கரவாதிகள் கண்காணிப்புப் பட்டியலில் இடம்பெற்றது உண்மைதான் என ஒப்புக் கொண்டதோடு, இந்தப் பட்டியலில் இருந்து அலி ஷாவின் பெயரை நீக்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

இதுகுறித்து தோமஸ் கூறுகையில், ஆறு வயதுச் சிறுமி யாரை அச்சுறுத்த முடியும். வேண்டுமானால், தனது சகோதரியை அச்சுறுத்தலாம். அமெரிக்க அரசை அச்சுறுத்த முடியுமா - என்று கூறினார்.

இந்நிலையில், அலிஷா விமானத்தில் செல்வதற்கு அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இருந்தாலும், ஒவ்வொரு முறை விமானத்தில் செல்லும்போதும், கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே அவருக்கு அனுமதி அளிக்கப்படும். சிறுமியின் பெயர், பயங்கரவாதிகள் கண்காணிப்புப் பட்டியலில் என்ன காரணத்துக்காக சேர்க்கப்பட்டது என்பது தொடர்பான விவரங் களை அமெரிக்க அரசு தெரி விக்கவில்லை.

# இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்தை பாக். உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## அமெ. ஜனாதிபதி ஒபாமாவிடம் மன்மோகன் சிங் வலியுறுத்து



டொரன்டோ, ஜூன் 30

இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களை பாகிஸ்தான் ஊக்குவிப்பதை நிறுத்த வேண்டும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக டொரன்டோ வந்துள்ள அவர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்துப் பேசினார்.

இரு தலைவர்களிடையிலான பேச்சு 30 நிமிடம் நீடித்தது. அப்போது பாகிஸ்தான், ஆப்கானிஸ் தான் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாகப் பேசினர்.

இரு தலைவர்களிடையிலான பேச்சுக் குறித்து இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அங்கு அமைதியான சூழல் ஏற்பட எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் விவாதித்தார்.

மும்பையில் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுடன் அமைதி நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இருப்பினும் இந்தியாவுக்கு அளித்த உறுதிமொழியை பாகிஸ்தான் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அதாவது இந்தியாவுக்கு எதிரான எத்தகைய பயங்கரவாத அமைப்புகளும் பாகிஸ்தான் மண்ணில் செயற்பட அனுமதிக்கக் கூடாது என்பதே அது.

சிகாகோவில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள டேவிட் கோல்மென் ஹெட்லி விவகாரமும் இரு தலைவர்களிடையிலான விவாதத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தானுடனான அமைதிப் பேச்சில் இந்தியா மட்டும் ஆர்வம் காட்டுவதில் எவ்வித பயனுமில்லை. இப்பிராந்தியத்தில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் பாகிஸ்தானும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று ஒபாமாவிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்தியா, அமெரிக்கா இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர். அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய வருகையை மிகுந்த ஆவலுடன் தாம் எதிர்பார்கிறார் என மன்மோகன் தெரிவித்தார்.

- இவ்வாறு நிருபமா தெரிவித்தார்.

# அத்வானி வருகையையொட்டி இராமேஸ்வரத்தில் பாதுகாப்பு

சென்னை, ஜூன் 30

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி இன்று இராமேஸ்வரம் வருகை தருவதையொட்டி, அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் வரும் அத்வானி அங்கு நடக்கும் ஸ்படிக லிங்க பூஜையில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்கிறார்.

அவரது வருகையொட்டி மதுரை விமான நிலையம், கோசுவாமி மடம், இராமேஸ்வரம் கோவில் உள்ளிட்ட பகுதியில் மத்திய புலனாய்வுதுறை மற்றும் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள்.

2 நாட்கள் கோசுவாமி மடத்துக்குள் வெளிநபர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கு தெரிவானோரின் விவரங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 2009 / 2010 ஆம் கல்வியாண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் நேற்று யாழ். பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன. அவர்களின் விவரங்கள் வருமாறு:-

### உயிரியல் விஞ்ஞானம்

முத்துலிங்கம் ரஞ்சித், புண்ணிய மூர்த்தி திவ்வியா, பத்மநாதன் ஜெயந்தி, சத்திய பாலன் சிந்துயா, ராஜதுரை தர்மதர்ஷனன், பார்கவி ராஜேஸ்வரசர்மா, விஜய குமார் நிருஜா, ரங்கநாதன் சிந்துஜன், லோக நாதன் கிஷாந்தி, மகாதேவா லவ பிரகாஷ்,

பிருந்தினி பரமசிவம், அனுஷா உமா பதி, அனற் நிந்துஷா இமானுவல், கிருஷ்ணதாஸ் சிவபிரஷாந், கவிதா தவசேகர சிங்கம், ரட்ணவேல் சிறிகிருஷ் ணன், நல்லமுத்து பார்த்தீபன், நிரோஜி கிருஷ்ணகுமார், கிருசாந்தி பாலச்சந்திரன், திருநாவுக்கரசு துசாந்தன்,

லோஜினி செல்வரத்தினம், சிவரூபன் நிஷாந்தன், யபருல்லா முகமட் முபாசிர், திருச்செல்வம் அபிரா, விவேகானந்தன் சுயந்தன், வேலாயுதம் கிருஷ்ணாளினி, நாகேந்திரன் பிரதீபன், பேரின்பநாயகம் சுபாகர், யமுனா நடராசமணி, விக்கிரமன் அன்ரன் ராஜோ,

கோபிநாத் தாரணி, சுரேகா தனபாலன், தில்லைநாதன் தாரணி, தாமிரா வீரசிங்கம், மதியாபரணம் பிரதீஸ், நடராஜா ராகவன், ஜெயராஜா அனித்தா, மொகமட் அமீன் மொகமட் அவ்கர், புகாரிடீன் மொகமட் சுகைல், மீரா வசந்த குமார்,

நவரட்ணலிங்கம் ஜதார்த்தனன், தெய்வநாயகி பொன்னம்பலம், யோக ராஜா அவின் கிறிஸ்ரபி எட்மினா, தயானி யோகலிங்கம், ஞானசீலன் அல்வன் டிலஷாலி, நாகேந்திரம் வனஜா, அந்தோனி றோமினா, தோமஸ் விமலதாஸ் குரூஸ்,

### சித்திரமும் வடிவமைப்பும்

குகதாசன் குஜந்தி, வைரமுத்து சுபாஸ்கரன், பாலச்சந்திரன் யசோதா, நாகலிங்கம் ஐஸ்வர்யா, முகமட் முகாரி பிஸ்றுல் பாத்திமா, தவராசா கோபிகா, சுப்பிரமணியம் சந்துரு, கனகநாயகம் பிரகாஷ், சிவப்பிரகாசம் கிருஷாந், சுந்தரலிங்கம் ரகோத்தமன்,

அழகராசா ஜெயந்தினி, சிவபாதம் துஷ்யந்தன், ஹமித்து மொகமட் றியாஸ், யோசெப் ஜஸ்மின் நிலானி, கிருபைராஜா சசிதரன், மொகமட் மௌபூத் பாத்திமா மஷானா, தவராசா அஜித்குமார், யாழினி கிருஸ்ணகுமார், சபாபதி சிவானந்தம், இளங்கோவன் டர்சியா,

பாலசுந்தரம் ரகுநாதன், அமீனுட் ஹடீன் பாத்திமா மஹிரா, கோணேஸ் சுரேஸ், பதுறுல் காமில் பதூர் நிஷா, அப்துல் நஸீர் மொகமட் அர்ஷாத், மொகமட் முஸ்தபா மொகமட் இபாம், மொகமட் தகிர்நுஷா, அருளையா கோசலன்,

### நடனம்

மகேந்திரன் கௌசிகா, புவனசுந்தரம் அபிலாசினி, யசிந்தா இந்திரன், ரஞ்சன் கௌதமி, நிஷாந்தி யோகேஸ்வரன், சுந்தரம் சிந்துகா, யோகேஸ்வரன் ஆஷா, சலமன் அனி அருள்மொழி குரூஸ், பாலசுப்பிரமணியம் சிந்துகா, தேவராஜா பிரதீபா,

சுதர்சினி இராமசாமி, அருள்சாலினி விவேகானந்தா, சண்முகலிங்கம் வித்தியா, சுந்தரராஜன் சரண்யா, வினோஜிதா தவராஜா, தமிழரசன் றோசின் ரேகா, கனகசபை தர்மிகா, செல்வராசா சிந்துயா, நவரெட்ணம் மாதங்கி, கேதாரம் சுயானா,

செல்வராஜா ரவன்ஜனி, சுவர்ணா கணேசன், நவீனா கோபாலகிருஸ்ணன், ஷர்மினி பரமலிங்கம், சுதாஜினி பாக்கியநாதன், வரதராஜன் பாரதி, கார்த்திகா லோகநாதன், சந்திரபாலன் காயத்திரி, சஞ்ஷியா சிவலிங்கமூர்த்தி, சுகேந்திரன் சுரேகா,

துரைராசா ஜென்சியா, ரவீந்திரன் சாருகா, கிளிப்பஸ் லிப்யசரா, கருணாநிதி சுகீபா, சண்முகராஜா தீவிகா, நிரோஷா நிமலன், சாம்பவி மயில்வாகனம், மகேஸ்வரன் கிருபாகரி, கல்சியா கண்ணதாசன், பரமேஸ்வரன் கார்த்திகா,

ராஜரெட்ணம் நிரோஜினி, குமுதினி ராசகுமார், ராஜேஸ்வரன் வைஸ்ணவை, அபிநயா நடராஜா, பாலசுப்பிரமணியம் உகந்தினி, தர்மராசா அபிதா, தர்ஷினி கணேசன், துஷாரகி தனபாலசிங்கம், பிறவுண் கிறிஸ்ரியன் லோட்ஸ் லாவன்யா, கணேச மூர்த்தி பிரசன்யா,

சண்முகராஜா தேவகுமாரி, சத்தியசீலன் சஞ்ஜிதா, டில்சியா அந்தோனிப் பிள்ளை, மங்களா கனகராஜா, ஞானசேகர் சோபிகா, சுப்பிரமணியம் கிருத்திகா, வரதராஜன் பிரவீனா, மரியதாசன் ஜீவானந்தி, குணரட் ணம் நிஷாந்தினி, யசோதா அருளானந்தம்,

ஈஸ்வரன் நித்திலா, தட்சாலினி குலசேகரம், குப்புசாமி நித்தியகல்யாணி, ஆனந்தகிருஸ்ணன் சிறிகாந், சிவராசா கார்த்திகாஜினி, நவனகுமார் திவ்வியா, தங்கவேல் தர்சினி, ராஜேந்திரன் ஹிந்துஜா, லாவன்யா மாசிலாமணி,

### சட்டம்

பாலபாஸ்கரன் சுதர்சன், வெள்ளைதம்பி ஹசீனா, நூர்டீன் முகமட் சர்ஜூன், ஆனந்தவதனி புஸ்பராஜா, லோகநாதன் தனுஷ் அனந்தினி, சிவராசா ரம்மியா, ஜோர்ச் சரா, ஒபடா ஆராய்ச்சிகே விதுரன்கே பிரியதர்சனா, டினிதி சந்திரிகா வீரஹேர, மொகமட் மீராசாகிபு ரகீப் அகமட்,

சதுரிகா மடுவந்தி விஜயசிங்க, சவுந்தரலிங்கம் சரணியா, ஏஞ்சலா விதுசினி சிறிதரன், டுகன்னா முதியான்சல ஹுங்கம கீதராசிறி தீபான்சலி வின்யகுமாரி, ஹேரத் முதியான்சலகே அருணசாந்தா குணதிலக, பலலாஹேவா வாசம்ஹிடினேஸ்கா லக்மலி சமரசிங்கி, உதயகுமார் பிரசாந்தினி, சயகரலாகி ஷாமிலா டனஞ்ஜனி, அப்துல் ஹமீட் முகமட் றிஸ்வான், ஸகீத் லிபீ பாத்திமா பௌஷா,

தர்மிகா சிவராஜா, சிவசுப்பிரமணியம் தனுசா, சூரியசிவா அபிநயா, முகமட் நபீல் பாத்திமா றிகாஷா, அமிலா விஜெசிறி குணவர்த்தனா, பிரியதர்சினி தருமநாதன், ராஜகோபால் தினுசா, கோலம்ப முகாந்திர மகே கோகிலா சஜீவனி, முகமட் பாரூக் றிவ்கா, டி.எம்.எம்.எச். திசநாயக்க,

தனபாலசிங்கம் கிருஷாந், அப்துல் ரகுமான் பாத்திமா ஷரீனா, ஏ.பி.ஏ.ஜி. பூர்ணிமி, பவானந்தன் நிஜந்தா, விதுசினி மகாலிங்கம், உதயகுமார் றசிந்தா, ஞானசம்ளபந்தன் அபிராம், பேணாட் அல்பிரட் சூசை, டபிள்யூ.எம்.கே.இந்திரஜித்,

அப்துல்கலிம் நவ்யா நத்ரீன், சர்மிளா ஜெகதீஸ்வரன், விக்ரர் இமானுவல் தேவ விதுரன், சிவஞானசுந்தரம் சோபிதா, எ.எல்.எஸ். ஹர்சினி, கே.ஜி.எல்.என். விதுஷானி, பொன்னம்பலம் தர்சாயினி, நவரத்தினசிங்கம் பிருந்தா, ராசமகேந்திரன் தர்சா, காத்தலிங்கம் துசியந்தினி,

### விவசாயம்

மொகமட் மசூர் மொகமட் பிஸ்ரன், மனோகரன் ஜெயதீபன், யாழினி பாலச்சந்திரன், சுவராங்கி கதிர்காமலிங்கம், சேனநா யக்க உதசிகா சந்துருவாணி, ஏலியஸ் டினேஸ், றஜிதா குலசிங்கம், பாலசுப்பிரமணியம் நிறோஜினி, யாழினி சண்முநாதன், நிரேசினி ஸ்ரீதுங்க,

மைத்ரேயி குகதாஸ், நடேசன் ரிபேறியஸ், மயில்வாகனம் கபிலன், வித்தியா வேலும் மயிலும், ஜெயசீலன் பவித்திரா, தேவராஜன் சத்தியேந்திரா, திவ்யலக்ஷ்மி சிதம்பரநாதன், குகதாசன் ஜனுசன், மனேகரன் சாகீதனா, தெய்வேந்திரம் தீபன்,

யசோதரா பேரின்பநாதன், சத்விகா முருகானந்தன், பவித்திரா ஞானரத்தினம், விஜயராஜா றொசானி, கதிரேசன் தனஞ்சயன், பாலச்சந்திரன் தர்மினி, ரத்தினச பாபதி கபில்நிசாந், பகீரதி ஸ்ரீச பாலிங்கம், லக்சிகா தங்கராஜா, தவராஜா பார்த்தீபன்,

நிஷானி பரஞ்சோதிநாதன், சிவகுருநாதன் சிவசக்திகரன், சதானந்தன் பிரதாபன், சதானந்தன் கௌசிகன், அருணோதய ராஜா சஞ்ஜீவ், தனிநாயகம் லக்ஷ்மிபாமா, சற்குணராசா தனுசன், மர்யஹர்சினி சூரியகுமார், பிரதீபா ஜெகதீஸ்வரன், தவேந்திரன் சுகன்யா,

பாரதி முடியப்பு, ஜசிந்தா கணேஸ்வரன், பத்மநாதன் பாவலன், வேலாயுத பிள்ளை தர்சன், அனுஷ்லா சிவநாதன், பிருகஸ்வினி ரஞ்சன், மகாலிங்கம் லக்சன், பிறேம்சுஜா வரதலிங்கம், சிவகுமாரன் ரஜீபன், தர்மேந் திரன் நிவேதினி,

குகேஸ்வரராஜா தியானா, சங்கீதா கதிர் காமஈஸ்வரன், வாகீசன் திவாகர், சுதந்திரன் கஜீபன், நிஜாந்தினி யோகேந்திரன், ஜெயராஜ் [illegible] ரமணன், பாலசுப்பிரமணியம் [illegible] நாதபிள்ளை, சரண்யா நித்தியானந்த [illegible] ராஜா, சற்குணராஜா பாமினி, பரராஜசிங்கம் இந்திரகுமார்,

சண்முகலிங்கம் வினுஜன், அருணாசலம் சுகந்தன், ஞானகோபால் கஜரூபா, சௌர்தீன் பாத்திமா சஸ்னா, மதிவதனி சண்முகம், பிரசாந்தி சிவநாதன், துஷ்யந்தினி சுந்தர மூர்த்தி, விமலச்சந்திரன் விமலகன், சின்னத் துரை கஜேந்திரன், மொகமட் ஹனீபா மொகமட் சர்பாராஸ்,

இருதயநாதன் எஸ்ரா ஜெயம் பெர்னாண்டோ, வைகுந்தநாதன் கார்த்தீபா, ஜேசுதாசன் கருணராஜ், பேரின்பநாதன் மகிந்தன், ராஜரட்ணம் துஷிந்தன்,

### மருத்துவம்

ரங்கநாதன் மோகனப்பிரியன், விஜயகுமார் நிதேஷ்பன், கதிர்காமநாதன் லவண்யா, கிங்ஸ்லி ரஜிவாசன் பிரான்சிஸ், பவித்திரா கமலநாதன், தியாகராஜா துசியந்தன், சுவர்ணா சச்சிதானந்தம், நிர்த்தனா பஞ்ச லிங்கம், பேரின்ப பால சுப்பிரமணிய சர்மா கபிலேசன், சித்திர வேலாயுதம் பாலவிநோதன்,

ஹூலே தபிதா ஜெபசீலி, தனஞ்சயன் சஞ்சயன், கே.எம்.எம்.இர்பான், கருணாகரன் சாமுவல் ரஜீன், சிந்துரேகா லோகேஸ்வரன், சேவற்கொடியோன் சரண்யா, ராஜரட்ணம் பிருந்தா, எம்.வை.எஸ்.யூசுப், கணேசமூர்த்தி சுதர்சன், இந்துஜா தவகுலரட்ணம்,

தனபாலசிங்கம் நிதர்சன், சந்திரன் பார்த்தீபன், எம்.எம்.ஜமீஸ், பி.ஜி.எஸ். மதுசங்க, ஏ.பி.டி.லக்மலி, திலகேந்திர லிங்கம் ரசில்கரன், சுந்தரலிங்கம் கௌதமி, சுகன்யா செல்வநாதன், வைரவநாதன் சிவதர்சினி, செல்வராஜா நிமலன்,

ஜெயரட்ணம் ஜனனி, சண்முகலிங்கம் லிங்காஜினி, ஜி.எச்.என்.சி.தயா கீர்த்தி, பரஞ்சோதி ரிதஞ்சனா, பிறேம் குமார் பிரசாத், கஜேந்திரன் அச்சுதன், நிருசிகா சோதிநாதன், சி.எம்.சமரசிங்க, எம்ஆர்.முனாஸ், பாலச்சந்திரன் கணேஸ்கர்,

எம்.எல்.சண்முகரட்ண, யோகலிங்கம் குபேந்திரன், ஏ.ஜி.என்.எம்.கே. பண்டார, ஜி.வி.ஆர்.சாமர, ஜெயபாலன் பிரணஸ்வா கீதன், செல்வநாயகம் பிருஷ்கபி, அன்ரனிராஜன் அனிஸ்ரன், கே.பி.எஸ். கிரிபத்துவா, ஜோன்பிலிப் ஜோன் செல்ரன்,

சங்கரலிங்கம் திலுக்ஷி, ஏ.ஏ.எம். அக்ரம், ரவீந்திரன் அகல்யன், எம்.சித்திக், சிவநாதன் சங்கர், ரங்கநாதன் அபிராம், எம்.வி.யு. கிரிசாந்தி, ஏ.ஜி.எம்.மபாஸ், தில்லையம் பலம் முகுந்தன், வில்வநாதன் கவினா, கே.ஜே.எம்.கியாஸ்,

சுவர்ணா பத்மநாதன், பிரியந்தினி சத்தியசீலன், எச்.எம்.எம்.ஹேரத், கதிரமலை உமாசுதன், பி.பி.பிறைற், செல்வரட்ணம் நிசாந்தன், எல்.எஸ்.எம். பீரிஸ், பஞ்சாட்சரம் கார்த்தீபன், சந்திரகுமார் தக்ஷனா, வினோதா யோகசுந்தரம்,

கிருஸ்ணபிள்ளை ஜெயகிருஸ்ணா, சாஹித்யா ராதாகிருஸ்ணன், மாணிக்கம் சிவதீபன்ராஜ், விஸ்வலிங்கம் அருணாத், சிவராஜா துஷாரன், ஏ.என்.எம். சன்பார், கணேசராஜா நிரூபன், தியாகராஜா சர்மிளா, சக்திவிநாயகம் அனோஜன், என்.டி.எச். பெர்ணான்டோ,

யூ.சி.விஜயசிங்க, பி.ஜி.எக்ஸ். சியாமளி, கோபாலகிருஸ்ணன் தினேசன், எச்.பி.எஸ். தீபமாலா, பத்மநாதன் காயத்திரி, டபிள்யூ.எம். பிறாஜினி, யோகதாஸ் சுகன்யா, விஜயன் பிரபோதினி, மோகனசுந்தரம் விஜயகாந், ஜெயராஜா சஞ்ஜீவன்,

வசந்தகுமார் அமுதகுமார், சிவபாதம் பிரணவன், கணேசமூர்த்தி சஞ்ஜீவன், மதிசேகரன் ஜீவகரன், வருணநாதராஜா வினிதரன், நடராஜா ஜாதவன், சிவஞானம் சஞ்ஜீவன், மனோஜினி பவசண்முகம், விந்தன் மதுமிதா,

### பௌதிக விஞ்ஞானம்

சரவணமுத்து கவிதரன், துரைசாமிக் குருக்கள் திவாகர சர்மா, திருவாசகர் காஞ்சனா, ஜனனி சிவசோதி, இராஜரட்ணம் கோகுலவாசன், கருணாகரன் கஜீபன், சர்வானந்தம் துஷாந்தன், திரவியராசா தகீசன், இளம்பூரணன் அனந்த நேசன், குணபாகன் விஸ்வ ரூபன்,

சாமினி நகுலேஸ்வரன், கந்தசாமி அருள்ஞானவேல், செல்வரட்ணம் சஹானா, சிவலிங்கம் சிவதனுசன், சடாட்சரம் தனுசன், இராமலிங்கம் சேயோன், பாலசுப்பிரமணியம் திருக்[illegible] ரமணன், ஜெயராசா இமானுவல் லக்[illegible] செல்வநாயகம் ஜெகதீபன், சண்முகநாதன் நித்திலா,

சுரேஸ் சதுர்ராமன், கைலநாதன் தனுசன், ராதாகிருஸ்ணன் நிருசன், பாஸ்கரன் குருபரன், ஸ்ரீமுருகன் பிரணவன், கணேச மூர்த்தி கவிதன், யோகராஜா அச்சுதன், மகிழினி தங்கரத்தினம், வினோதினி விஜயரட்ணம், அருளானந்தம் பிரதீபன்,

திருச்செல்வம் தர்சன், துளசிகா விஜயநாதன், தங்கரட்ணம் முருக நிரோஜன், டபிள்யூ.ஜி.டபிள் யூ.ஞானதயாளன், தர்மகுலசிங்கம் சிறோஜன், நவரத்தினம் சிவரூபன், மதுரா சட்டநாதன், கணேஸ்வரன் பிருந்தா, பரமநாயகம் வரோதயன், லோகேஸ்வரன் கௌரிநாத்,

தியாகராஜா பிரசாந்தன், சமந்த தாரணி ஜெயக்குமார், உமாபதி யாதவன், தங்க ராஜாசிவராஜிப், ராசேந்திரா சுஜீவன், செல்வராசா கௌசிகன், கயிலாய பிள்ளை பிரசன்னா, செல்வராஜா மயூரன், திசாயினி ராஜதுரை, புண்ணிய மூர்த்தி முருகன்,

ஜெயசீலன் பிரதாபன், சுதந்திரபாலன் கௌரிநாத், தர்மராசா ஜசிந்தன், டொறினன் உஷிய அன்ரன்யோ ஸ்பா, அண்ணாமலை நிராகரன், சிவசக்தி சுதர்சினி, நடராஜா ரமணன், பாலசுப்பிரமணியம் சாரங்கன், சுகன்யா பாலேந்திரா,

உஷாந்தினி செல்வரட்ணம், பாலகோபால் புரந்திரதாசன், குணரெட்ணம் தினேஸ், அபிராமி விக்னராஜா, சிவலிங்கம் லோகேஸ்வரன், பவித்திரா உமாதேவன், கணேஸ்வரச்சந்திரன் ராகவன், தேவேந்திரம் கௌசிகன், அருணகிரிநாதன் அச்சுதன், யோகேந்திரராஜா தாட்சாயணன், யோசப் தர்சன் பீரிஸ்,

விவேகானந்தம் வித்தகன், பேரின்பநாதன் எழில்மாறன், தயாளன் துவாரகன், எம்.ஜே.எம்.ரிசாத், கேதாரம் ஆதித்தன், ராசநாயகம் கிரிசந்தீபன், வேலுப்பிள்ளை பென்சமின் அனோஜன், யோசப் ஜெயக்குமார் நிலுக்சன் குரூஸ், உருத்திரலிங்கம் பிரசன்னா, சபாபதிப்பிள்ளை திபாகர்,

அமலதாசன் தினேஷ், எம்.எஸ்.எம். கலிஸ்ரா, கணேஸ்வரன் சக்திதரன், கிறிஸ்ரி ரவீந்திரன் கிளமென்ற் கிங்ஸ்ரன், வள்ளுவன் அனிதா, அகிலன் அனோஜன், செபஸ்ரியாம்பிள்ளை நொயிலின் விஜயசாகினி, ராஜேந்திரம் கிருஸ்ணகுமார், கணேசலிங்கம் கரிதரன், சச்சிதானந்தம் சிவானுயா, முருகுப்பிள்ளை கிருசாந், தியாகராஜா பிரதீப்,

### சித்த மருத்துவம்

நடராஜா நிதர்சன், என்.எம்.பரீட், சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபன், திரவியராஜா ஜிலக்ஸனா, தர்சினி தர்மகுலசிங்கம், சர்வானந்தா விதுர்சன், கோகுலவாசினி வேலும்மயிலும், கஜந்தி சண்முகராஜா, கேதீஸ்வரன் சிவரஞ்சினி, ராஜரட்ணம் ஹரிசுதன்,

தங்கராசா குணநாதன், வல்லிபுரம் நிதர்சன், யோகராஜா ஜீவன், வினோதினி மகேந்திரராசா, சண்முகரத்தினம் திருக்குமரன், பிரதாஜினி, தனபாலன், கயல்விழி சபாரட்ணம், நிவேதினி செல்வரட்ணம், ஜெகநாதன் காஞ்சனா, லக்சனா சொரூப லிங்கம்,

ஜெயபாலன் செந்தில்செல்வன், சந்திரலிங்கம் பூங்குழலி, முத்துலிங்கம் துவாரகா, சிவாபலராஜா கௌஸ்யா, விஜயசுந்தரம் தினேஸ்குமார, வள்ளிதர்சினி பாலச்சந்திரன், சந்திரசேகரம் கீர்த்தனன், காசிநாதன் வினர்த்தன், கீர்த்தினி ஸ்ரீகாந்தா, சேனாதிராஜா தாரணி,

ராவித்தா ரவி,சஜானுதா நித்தியானந்தம், கனிமொழி மனோகரராசா, அந்தோனி டரல்றேயன், ராஜ்மோகன் மனோராஜ், சனஜன் டினோசன், விக்ரோர் பேபி ஜேசஸ், அப்துல் கலாம் நிக்ளா, ஆப்தீன் பாத்திமா சபீலா, அபிலாசினி நடராஜா,

சண்முகானந்தன் அனோஜன், அகமட் லிபீ மொகமட் றிவாஸ், தாட்சாயினி விவேகானந்தா, யோகநாதன் கஜந்தன், வேலுப்பிள்ளை சிவதீசன், சிவதர்ஷனா செல்வராஜ், ரவீந்திரன் குயின்ரன், அசாத் பாத்திமா சாயிலா, டிலானி தேவகுணா னந்தன், ஜெனோஜினி ஜெகதீஸ்வரன்,

எம்.ஐ.ஐ.ஜகான், ஜீவரட்ணம் வசந்தினி, ஐ.எம்.எவ்.எஸ். சண்பரா, பாலச்சந்திரன் கிருத்திகா, ராசலிங்கம் ஜெயசுதா, சங்கீதா நடராஜா, மகேஸ்வரன் ஞானகரன், ரஜிதா ஸ்ரீகாந்தன், எம்.ஏ.ஆர்.கே. பாத்திமா, ஜனுப் பிரியா சுகுமார்,

தனுசா விநாயகம்பிள்ளை, ராஜரெட்ணம் சுகந்தன் ராஜரெட்ணம், கீதராணி உமா சுதன், தாரகா கருணாகரன், காசி

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் - குவைதாவின் பலம் ஆப்கானில் குன்றிவிட்டது

## அமெ. உளவுத்துறைத் தலைவர் தகவல்

வாஷிங்டன், ஜூன் 30

''ஆப்கானிஸ்தானில் அல் - குவைதாவின் பலம் குறைந்து விட்டது. 60 முதல் 100 பேர் வரை மட்டுமே அங்கு எஞ்சியுள்ளனர்'' என அமெரிக்க உளவுத்துறைத் தலைவர் லியோன் பனெட்டா, தாம் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''ஆப்கானிஸ்தானில் அல் - குவைதாவின் பலத்தை நாங்கள் குறைத்து விட்டோம். அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே மிஞ்சி இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை 60 முதல் 100 இற்குள் தான் இருக்கும் என்று நம்புகின் றேன்.'' என்றும் அவர் அதில் தெரிவித் துள்ளார்.

''அல் - குவைதா தீவிரவாதிகளின் தலைவர் பின்லேடன் பாகிஸ்தானிலுள்ள மலைப்பிராந்தியத்திலுள்ள, பழங்குடி இன மக்கள் வாழும் பகுதியில் பதுங்கியிருக்கிறார். அங்குள்ள காட்டுப்பகுதிக்குள் வெகுதொலைவில் அவர் பதுங்கியிருக்கிறார்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அந்தப் பகுதிக்குள் வெளியாள்கள் யாரும் எளிதில் நுழைந்துவிட முடியாது. அதன் தரைப்பகுதி உலகிலேயே மிக மோசமான பகுதியாகும். அவரைச்சுற்றி பல தீவிரவாதிகள் பாதுகாப்பு வலயம் அமைத்து சூழ்ந்து இருக்கிறார்கள்'' என்றும் அவர் விவரித்துள்ளார்.

''எங்கள் நடவடிக்கை மூலமாக அல்-குவைதா தலைமை மீது பயங்கர அழுத்தம் கொடுத்து வருகிறோம். அல்- குவைதா இயக்கம், தலிபான் அமைப்பு ஆகியவற்றின் தலைவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களைப் பிடித்து விட்டோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அல் - குவைதாவின் தலைமையில் 3ஆம் இடத்தில் இருப்பவரே, இப்போது எங்கள் முகாமில் சிறை வைக்கப்பட்டிருக் கிறார். நாங்கள் தொடர்ந்தும் இந்தத் தீவிர வாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வருகிறோம்.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''அமெரிக்க இராணுவத்தின் அதிரடி நடவடிக்கைகளால் அவர்கள் மிகவும் பலவீனமாகிவிட்டார்கள். எங்கள் நடவடிக்கை தொடரும்போது, பின்லேடனும், அவரது வலது கரமாகத் திகழும் அல் ஜவ ாஹிரியும் தற்போது பதுங்கியிருக்கும் இடத்தை விட்டு வெளியே வருவார்கள். அப் போது அவர்களை உயிருடன் பிடிப்போம்.'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

''பின்லேடன் பதுங்கியிருக்கும் சரியான இடத்தைக் கண்டுபிடிக்கவும் எங்கள் உளவு அதிகாரிகள் பாடுபட்டு வருகிறார்கள்.'' என்றும் லியோன் பனெட்டா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கனடா சுற்றுலாத்துறை தூதரானார் ஹிந்தி நடிகர்

வான்கூவர், ஜூன் 30

கனடா சுற்றுலாத்துறையின் தூதராக ஹிந்தி நடிகர் அக்ஷய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நடிகர் அக்ஷய் குமார் கனடாவில் ''நமஸ்தே லண்டன்'', ''சிங் இஸ் கிங்'' ஆகிய திரைப்படங்கள் மூலம் பிரபலமானவர்.

கனடாவில் இடம்பெற்ற குளிர்காலத் திற்கான ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தில் நடிகர் அக்ஷய் குமார் டொரண்டோவில் பங்கு பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2012 ஆண்டு வரை அக்ஷய் குமார் தூதராக இருப்பார். இது குறித்து அவர் குறிப்பிடுகையில், ''நான் தூதராக நியமிக்கப்பட்டுள்ளேன். இது மகிழ்ச்சி அளிக்கிறது. கனடாவின் சுற்றுலாவை இந்தியாவில் பிரபலப்படுத்துவேன்'' என்றார்.

2009ஆம் ஆண்டில் இந்தியர்களால், 82 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை கனடாவின் சுற்றுலா மையம் ஈட்டியுள்ளது.

வத்திக்கான் நகரில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த வெய்னா நகர பேராயர் கர்தினால் கிரிஸ்டோப்பரை பதினாறாவது ஆசீர்வாதப்பர் வரவேற்றார்.

# அமெரிக்காவில் உளவுப் பணியில் ஈடுபட்டுவந்த 10 ரஷ்யர்கள் கைது!

வாஷிங்டன், ஜூன் 30

அமெரிக்காவில் சாதாரண மக்களைப் போல தங்கி உளவு பார்த்துவந்த 10 ரஷ்யர்களை அமெரிக்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இதனால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த பத்து பேரும் கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவில், சாதாரண மனிதர்கள்போல வசித்து வந்துள்ளனர்.

மாணவர்கள் என்ற போர்வையில் தங்கிக்கொண்டு உளவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டுவந்துள்ளனர். கைதான பத்து பேருக்கும் ரஷ்ய உளவு அமைப்பு பயிற்சி அளித்துள்ளது என்று கூறப்படுகிறது.

பல்வேறு முக்கிய தகவல்களைப் பெற்று அவற்றை ரஷ்ய அரசுக்குக் கொடுப்பதற்காக இவர்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.

அமெரிக்க அணு ஆயுதங்கள், ஈரானின் நிலைப்பாடு, அரசியல் கட்சிகள், சிஐஏ ஆகியவை தொடர்பான தகவல்களையும், அமெரிக்க ஆயுத இருப்பு நிலை பற்றிய தகவல்களையும் சேகரிக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் ஊடுருவுதல், உளவு பார்த்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# எரிவாயு லொறி வெடித்து பாகிஸ்தானில் 18 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஜூன் 30

பாகிஸ்தானில் சமையல் எரிவாயு நிரப்பப்பட்ட லொறி வெடித்ததில் 18 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

சிந்து மாகாணத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ஹைதராபாத் நகரில் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. லொறி எதிர்பாராதவிதமாக வெடித்ததில், அப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்களும் லொறிகளும் பலத்த சேதமடைந்தன.

பல கட்டடங்கள் தரைமட்டமாகும் அள வுக்கு அந்த வெடிப்பு இருந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர், கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்தவர் களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

காயமடைந்த அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தில் தீவிரவாதிகளுக்குத் தொடர்பு இருப்பதற் கான வாய்ப்புகள் இல்லை என பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சர்வதேச பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு உலக நாடுகள் ஆயுத ஒழிப்பில் ஈடுபட வேண்டும்

## ஜி-8 நாடுகளின் கூட்டுப் பிரகடனத்தில் வலியுறுத்து

சர்வதேச ஸ்திரத்தன்மையையும், பாதுகாப்பையும் உறுதிசெய்யும் பொருட்டு உலக நாடுகள் அனைத்தும் ஆயுத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என ஜி-8 நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை ரொறொன்ரோவில் நடைபெற்ற ஜி-8 நாடுகளின் தலைவர்களின் ஆலோசனைக்கூட்டத்துக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்தில் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக அமைதிக்கும், பாதுகாப்புக்கும் ஆயுதப் பரவல் பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகள் இதில் உரிய சமூக அக்கறையுடன் செயல்படவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச சமுதாயத்தைக் கருத்திற் கொண்டு அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் அந்த நாடுகள் கையெழுத்திடவேண்டும். இதன் மூலமே அமைதியான, பாதுகாப்பான உலகத்தை நமது எதிர் கால சந்ததியினருக்கு நாம் அளிக்க முடியும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் தீவிரவாதம் தான் நமக்கு முன் உள்ள பெரிய சவால். உலக நாடுகளிடம் உள்ள அணு ஆயுதங்கள் தலிபான், அல்-குவைதா போன்ற தீவிரவாதக் குழுக்களிடம் கிடைக்கும் பட்சத்தில் நாம் மிகவும் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே மீண்டும் அமைதி பேச்சுகள் தொடங்கியுள்ளன. இது வரவேற்கத் தக்க ஒரு விடயம். அப்பிராந்தியத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்பட இவ்விரு நாடுகளின் பேச்சுகள் முக்கிய பங்கு வகிக்கும் என இக்கூட்டத்தில் ஜி-8 நாடுகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது ஜி-8 நாடுகள்.

# இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே அணு சக்தி ஒப்பந்தம் கைச்சாத்து

## 36 வருடகால தடை நீக்கம்

ரொறொன்ரோ, ஜூன் 30

இந்தியா-கனடா ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் காரணமாக 36 ஆண்டு காலம் இருந்து வந்த தடை நீங்கியுள்ளது.

கனடா தலைநகர் ரொறொன்ரோவில் 'ஜி-20' நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அதில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பரைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் அவர்கள் இருவர் முன்னிலையில் இந்தியா-கனடா இடையே ஆக்கபூர்வ அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய அணுசக்தித் துறை செயலாளர் ஸ்ரீகுமார் பானர்ஜி, கனடா வெளியுறவு அமைச்சர் லோரன்ஸ் கேனன் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் என்று பிரதமர் மன்மோகன் சிங் கருத்துத் தெரிவித்தார். கடந்த 1974ஆம் ஆண்டில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கு அணு ஆயுத பொருட்களை வழங்கக்கூடாது என்று கனடா உள்ளிட்ட அணு ஆயுதங்களை விநியோகம் செய்யும் 46 நாடுகளைக் கொண்ட குழு தடை விதித்திருந்தது.

34 ஆண்டுகளுக்குப்பின்னர் கடந்த 2008ஆம் ஆண்டில் இந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட 7 நாடுகளுடன் இந்தியா அணுசக்தி ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

36 ஆண்டுகளுக்குப் பின்னர் 8ஆவது நாடாக கனடாவுடன் ஆக்கபூர்வ அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற பேச்சுகளுக்குப்பின் இரு நாடுகளின் சார்பில் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதில், அணுசக்தி ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக்கவும், விரைவில் அமுல்படுத்தவும் இரு பிரதமர்களும் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள இரு நாடுகளின் தலைவர்களும், பயங்கரவாதம் எந்த வடிவில் தலைதூக்கினாலும் அதை ஒடுக்குவதற்குக் கூட்டாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டுள்ளனர் என்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் அணுசக்தி மூலப்பொருளான யுரேனியம், அணுசக்தி தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை கனடாவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்துகொள்ள முடியும். ஆக்கபூர்வமான தேவைகளுக்கு மட்டுமே இந்தியா அணுசக்தியை பயன்படுத்தவேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அணுசக்தி ஒப்பந்தம் தவிர சுரங்கம், கலாசாரம், உயர்கல்வித் துறை ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்க வகை செய்யும் மேலும் 3 ஒப்பந்தங்களும் இந்தியா-கனடா இடையே கையெழுத்தாகியுள்ளன. ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் இரு தலைவர்களின் பேச்சுகளின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

கனடா டொரண்டோ நகரில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் இறுதியில் அனைத்து நாட்டு தலைவர்களும் சேர்ந்து 2010ஆம் ஆண்டு மாநாட்டின் நினைவாக படம்பிடிப்புக்கு கொடுத்த போஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமது பணிகளைச் சுலபமாக நிறைவேற்றுவதற்கு பல் வேறு வழிகளி லும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசாங்கம், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ ஆளுநர், இராணுவம், கடற்படை, பொலிஸ் உயரதிகாரிகள், உத்தி யோகத் தர்கள், அரச திணைக்களங்களின், கூட்டுத்தாபனங்களின் தலை வர்கள், உத்தி யோகத்தர்கள், ஐ.நா.நிறுவனங்கள், வங் கிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், வணிக நிறுவனங்கள், மத நிறுவனங்கள், அதன் தலைவர்கள், மாவட்டச் செயலக, பிரதேச செயலக, உதவி அரசாங்க அதி பர்கள், செயலக உத்தியோகத்தர்கள், பொது நிறுவனங்கள் எல்லா வற்றுக்கும் மேலாக பொதுமக்கள் ஆகிய சகலருக்கும் தமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அரசாங்க அதிபராகப் பதவியேற்ற காலத்தில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தம், இடப்பெயர் வுகள், தரைவழிப்பாதை மூடப்பட்டமை, நிஷா வெள்ள அனர்த் தம், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்க ளில் வாழ்ந்த மக்களை மீளக்குடிய மர்த்தல், உயர்பாதுகாப்பு வல யப் பிர தேசங்களில் குறிப்பிட்ட அளவான மக்களை மீளக் குடியர்த்துதல் ஆகிய பணிகளில் தன்னுடன் இணைந்து பணி யாற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் அவர் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துள்ளார்.

இடர்முகாமைத்துவம் மட்டுமன்றி வடக்கின் வசந்தம் வேலைத்திட்டங்கள், யாழ். மாவட்டத்தை அபிவிருத்திப் பாதை யில் அழைத்துச் செல்வதற்கு வேண்டிய நிலை யில் பெண்கள், சிறுவர்கள், விசேட தேவையுள்ளவர்கள், முதியோர், நலி வடைந்தவர்கள், யாவரினதும் தேவைகளையும் பூர்த்தி செய்யவும் கல்வி, சுகா தாரம், கலாசாரம், நுண்கலை, விளையாட் டுத்துறை போன்றவற்றிலும் யாழ். மாவட்டம் சிறந்துவிளங்க நேரம், காலம் பாராமல் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் கிராம, பிரதேச, மாவட்ட மட்டத்தில் தங் களை அர்ப்பணித்து தம்முடன் இணைந்து செயலாற்றியமைக்கு நன்றி கூறுவதுடன், யாழ். மாவட்ட செயலக மகுடவாசகத்தின் தொனிப்பொருளான ''நல்லாட்சியே நமது நோக்கு'' என்பதன் வரைவிலக் கணத் துக்கு அமைவாக யாவரும் தொடர்ந்து கடினமாக உழைத்து, யாழ். மாவட்ட சமூக பொருளாதார, கலாசார நிர்வாகத்தில் முதன்மை வகிக்கும் மாவட்டமாகத் திகழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் தித்து நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மக்களின் தேவை கருதியே எமது சேவையை நாம் மேற்கொண் டோம். எனவே தயவுசெய்து ஒய்வுபெறுவது சம்பந்தமாக எதுவித நிகழ்வுகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அனை வரையும் கேட்டுள்ளார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆங்கிலபாட ஆசிரியராக ( S.L.T.S. - I) பணி புரிந்து இலங்கை அதிபர் சேவை 2 - II) இற்கு பதவி உயர்வு பெற்று யா/ வல்வெட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபராகப் பதவி ஏற்றுள்ள

**சோ. ஜெயதேவா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி யுயர்வுகளைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

வதிரி, கல்விச் சமூகம்,
கரவெட்டி. யா/ பெ.மராட்சி மத்திய மகளிர் கல்லூரி.


# பொன்சேகாவின் ரிட்மனு விசாரணை இன்றியே தள்ளுபடி

கொழும்பு, ஜசூன் 30

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்துக்கு எதி ராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த ரிட்மனுவை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே மேன்முறை யீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த மனு மேல்நீதிமன்ற நீதியரசர்களான தலை வர் சக்தியா ஹெட்டிகே, ரோகிணி மாரசிங்க, சரத் ஆப்றுவ் ஆகியோர் முன்னிலையிலேயே நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பாக சட்டமா அதிபரால் எழுப் பப்பட்ட ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட நீதி மன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள் ளாமலேயே தள்ளுபடி செய்தது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் பொன்சேகா தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதைத் தடுப்பதற்குப் போதுமான காரணங்கள் மனுதாரர் களால் முன்வைக்கப்படவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தது. இதன்படி, இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வழக்கு விசாரணைக்குப் போதுமான காரணிகள் இருக்கின்றமையைச் சுட்டிக்காட்டி மனு வைத்தள்ளுபடி செய்தது.

# அரச ஊழியர்சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 ஆம் இறுதிக் காலாண்டில் 6.2 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி 2010 முதல் காலாண்டில் 7.1 சதவீதமாக உயர்ந்தது.

வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில் சில கீழே தரப்படுகின்றன.

✱ இலவசப் பாடப்புத்தகங்கள், போஷாக்கு உணவு, பாடசாலைச் சீரு டைகள், மானிய போக்குவரத்து மற்றும் ஏறக்குறைய 30லட்சம் பாடசாலை சிறு வர்களுக்கான புலமைப்பரிசில்கள் என்ப வற்றுக்கு மொத்தமாக ரூபா 7,363 மில்லி யன் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✱ ஏறக்குறைய 74,000 கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு மேம் பாட்டுக்கு உதவும் வகையில் ரூபா 2,500 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இடம்பெயர்ந்த மக்களின் உணவுக்காக**

✱ நலன்புரி நிலையங்களில் வாழும் ஏறக்குறைய 25,000 இடம்பெயர்ந்த மக்களின் உலர் நிவாரணம் மற்றும் உணவுக்காக ரூபா 7,500 மில்லியன் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

✱ 'சமுர்த்தி' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்மைபெறும் குறை வருமானமுடைய குடும்பங்களுக்கு அவற்றின் வருமான விரிவாக்கல் ஒத்துழைப்புக்காக ரூபா 9,300 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

✱ ஏறக்குறைய 4,50,000 அரச ஊழியர்களின் இளைப்பாறல் நன்மைகள் மற்றும் ஏறக்குறைய 6,000 அங்கவீன முற்ற படைச்சிப்பாய்களின் கொடுப்பன வுகள் போன்ற சமூகப் பாதுகாப்பு ஏற் பாடுகளுக்காக ரூபா 1,02,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விவசாய அபிவிருத்திக்கு 35, 000 மில்லியன் ரூபா**

✱ ஏறக்குறைய 20 லட்சம் விவ சாயிகளில் பெருந்தொகையான நன்மை பெறும் விவசாய சமூகத்துக்கு ஒத்துழைக் கும் வகையில் உர மானியங்கள், மானியக் கடன்கள் மற்றும் உத்தரவாத விலை களில் நெல் கொள்வனவு போன்ற செலவினங்களுக்கான ஏற்பாடு ரூபா 35,000 மில்லியன் ஆகும்.

✱ இலவச சுகா தார சேவை யைத் தொடர்ந்தும் வழங் கும் வகையில் அர சின் சுகாதாரப் பரா மரிப்பு வசதிக ளைப் பயன் படுத் தும் உள்ளக மற் றும் வெளிநோயா ளர்களுக்கான மருந்துப் பொருள் களை விநி யோகித் தல் செல வினத் துக்காக ரூபா 13,300 மில்லி யன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

✱ இலங்கைப் புகையிரதம் மற் றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை என்பவற்றின் செலவினங்களை ஈடுசெய்வதற்காக மானிய அடிப் படை யிலான போக்குவரத்துச் சேவையை மேற் கொள்ளுதல் - வரவு-செலவுத் திட்ட ஒத்துழைப்பு ரூபா 6,650 மில்லி யன் ஆகும்.

✱ நீர் வழங்கலில் அரச முதலீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கு வதற்கான வரவு-செலவுத்திட்ட ஏற்பாடுகள் 2010 இல் 1,00,000 புதிய இணைப்புகளை உறுதிப்படுத்துவதுடன், இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் 1,50,000 ஆக அதிகரிக்கப்படும்.

✱ மின்வலுத்துறைக்கான அரச முதலீட்டுச் செலவினத்தின் கீழ் 2010 இல் 2,50,000 புதிய மின் இணைப்புகளும் அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் 3,00,000 புதிய இணைப்புக ளுக்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**வீதி புனரமைப்புப் பணி விஸ்தரிப்பு**

✱ தற்பொழுது நடைபெற்று வரும் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 530 கிலோ மீற்றர் தேசியப் பாதைகளும், 34 புதிய பாலங்களும் மற்றும் 300 கிலோ மீற்றர் மாகாணப் பாதைகளும் 2010 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படும். ஏறக்குறைய 200 கிலோ மீற்றர் கொங்கிரீட் பாதைகளுடன் 720 கிலோமீற்றர் கிராமியப் பாதைகளும் 181 கிலோர்மீற்றர் அதிவேகப் பாதை களும், 104 பாலங்கள் மற்றும் 1,500 கிலோமீற்றர் தேசியப் பாதை கள் என்பனவும் அடுத்த மூன்று வருடங்களின் போது தரம் உயர்த்தப்படும். 1,800 கிலோமீற்றர் மாகாணப் பாதைகள் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினால் ஒத்துபைப்பு வழங்கப்படும். மேலும் 15,000 கிலோ மீற்றர் கிராமியப் பாதைகள் நடுத்தர காலத் தின் போது சேர்த்துக்கொள்ளப்படும்.

✱ ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான வசதி கள், நிர்மாணம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயற் பாட்டு வெளியார் சேவைத் திறன்களின் அபிவிருத்தி, மருத்துவ முயற்சிகளும் ஆய்வும், பெருந்தோட்டக் கைத்தொழில், நகர அபிவிருத்தி, கைத்தொழில் நகரமயமாக்கல், சர்வதேச சந்தை வசதிகள், புதுப்பிக்கக்கூடிய சக்தி, உயர் கல்வி, மருத்துவ வசதி கள், விவசாயம், கால்நடை மற்றும் பாரிய அளவிலான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் சேவைகள் உள்ளடங்கலான பரந்த பல விடயங்களில் தனியார்துறைக்கு முதலீட்டு வாய்ப் புகளை இந்த வரைபுத் திட்டம் வழங்குகின்றது.

✱ மின் உற்பத்தி, பகிர்வு மற்றும் துறைமுக வசதி, பெருந் தெருக்கள், நீர்ப்பாசனம், குடிதண்ணீர், கைத்தொழில், நீர் வழங் கல் என்பவற்றில் புதிய ஆற்றல்களை ஏற்படுத்துவதற்குத் தற் பொழுது இடம்பெற்று வருகின்ற அரச முதலீடுகள் ஏற்றுமதித் திற னையும் இறக்குமதிப் பதிலீடுகளையும் அதிகரிக்கும் அதேவேளை, முதலீட்டு காலநிலை மற்றும் வியாபார அபிவி ருத் தியை மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

**அபிவிருத்தியில் ஒவ்வொன்றுவரையும்...**

✱ எமது வளர்ச்சியை 8சதவீதத்துக்கு கூடிய இலக்கொன்றிற்கு துரிதப்படுத்துவதற்கான உறுதியான வழி உயர்ந்த முதலீடாகும். அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஒவ்வொரு பங்கு பற்றுநரும் இச்செயன்முறையில் பங்களிப்பதற்கு முடியுமான வகையில் இவ்வரைபுத் திட்டம் அரசை இயலச் செய்கின்றது. வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைத்தல், குறைந்த மற்றும் இலகுவான வரிக்கட்டமைப்பு ஒன்றுடன் வரி அடிப்படையை விரிவாக்குதல், உறுதியான நிதி மற்றும் மூல தனச் சந்தை வசதிகள், உட்கட்டமைப்பில் அரச முதலீட்டை விரிவாக்குதல் என்பவற்றுக்கான எமது முயற்சி மற்றும் ஆற்றல் மிகு அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதரத்துக்கான வசதிகள், சமூகத்தில் ஒவ்வொருவரையும் அபிவிருத்தியில் ஊக் கமிகு பங்காளராக இருப்பதற்கு வகை செய்யும். (அ-சி)


## ஆதிபராசக்தியின் அருளும் ஆசியும் பரிபூரணமாக அடைவதற்கு யாழ்ப்பாணத்தில் வாழும் பக்த கோடிகளுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

தென் இந்தியா தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சமயபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருளும் ஆசியும் பெற்று கடந்து 25 ஆண்டுகளாக தமிழக பக்த கோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் ஏற்பட்ட சகல குறைகளையும் தீர்த்து பக்த கோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் சகல சுபிட்சங்களையும் ஐஸ்வர்யங்களையும் ஏற்படுத்தி பக்தகோடிகளிடையே அழியாதபேரும், புகழும் பெற்று தெய்வமாக ஜோதிக்குள் ஐக்கியமாகி மறைந்த அருள்வாக்கு ஸ்ரீலஸ்ரீ S. பகவதி அம்மையாரின் குமாரரும் பரம்பரை அருள்வாக்கு தொழில் வாரிசும் ஆகிய, தேவி உபாசகர் தவத்திரு. S. செல்லம் அருள்தாஸ் சாஸ்திரிகள் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முறையாக வருகை தந்துள்ளார். தங்கள் ஜாதகம், கைரேகை இரண்டும் இல்லாமல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அருளால், தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் உள்ள நன்மை தீமைகளை தெரிந்துகொள்ளவும். எதிர் காலத்தை பற்றி அறிந்து கொள்ளவும் தாங்கள் நியாயமாக நினைத்த காரியங்கள் வெற்றி அடையவும், திருமணத்தில் தடைகள் உள்ள ஆண்களும் பெண்களும். திருமணமாகி பல ஆண்டுகள் சென்றும் குழந்தை பாக்யம் இல்லாதவர்களும். செய்யும் தொழில் மந்தம் மற்றும் தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் உள்ள சகல பிரச்சனைகளுக்கும் சாஸ்திரிகளை நேரில் சந்தித்து அம்மனின் அருளும் ஆசியும் பெற்று தங்கள் குடும்பதை சேர்ந்த அனைவரும் வாழ்க்கையில் சகல சௌபாக்யங்களும் நன்மைகளும் அடையுங்கள். சாஸ்திரிகளை சந்திக்குமிடம்

ஹரிஸ் இன்
தொ.பே: 0777067687 175, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



அங்கீகரிக்கப்பட்ட கணினி மல்டிமீடியா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகள்

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Page Designing
Internet and E-mail AutoCAD
Dip. in Computerized Accounting
#Quick Books # Accpack # MYOB
JOIN WITH LEADERS IN ACCOUNTS
Tally Accounting Training

நவீன தொழில்நுட்பங்கள்
Advanced Video Editing
மென்பொருள்களையும் உள்ளடக்கிய
Dip. in Video Editing & Multimedia
Adobe Premiere Pro CS3, Particleillusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects,Nuendo,
100%

முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு மேலதிக விபரங்களுக்கு

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403


# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை அபிமன்னன் (இராசகிளி)

(ஓய்வு பெற்ற இயந்திர இயக்குநர், நெல் சந்தைப்படுத்தும் சபை நாவாட்டான், மன்னார்)

பொற்களஞ் தம்பை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அபிமன்னன்(இராசகிளி) நேற்று (29.06.2010) மாலை தற்காலிக வதிவிடமான பொல்வத்தை, இளவாலை யில் காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - நாகமுத்து தம்பதியரின் மருமனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் ரதிச்செல்வி, பங்கையற்செல் வன் (விஷ்டா விஷன் கலர் லாப்) ஆகியோரின் அன்புத் தந் தையும் உதயகுமார், நந்தினி ஆகியோரின் மாமனும் கோகி லன், பிரியங்கா, சுடர்விழி, மதுரங்கா, தசாங்கன் ஆகியோரின் பேரனும் அமரர் கதிரவேலு, அமரர் நடேசன், சிவப் பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.06.2010) புதன்கிழமை பொல்வத்தை, இளவாலை இல்லத்தில் பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் முள்ளானை இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
பொல்வத்தை, இளவாலை. மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வார நிகழ்வுகள் ஜூலை 12 இல் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் இவ்வருடத்துக்கான உள்ளூராட்சி வாரம் ஜூலை 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அனுஷ்டிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக ஆட்சி முறை ஒன்றின் அம்சங்களில் ஒன்றான உள்ளூராட்சித் துறையின் பொறுப்புக்கள், செயற்பணிகள் தொடர்பில் சிவில சமூகத்தின் மத்தியில் நல்ல தொரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பொதுமக்களின், பாடசாலை மாணவர்களின் மற்றும் அவ்வப் பிரதேசங்களில் செயற்படுகின்ற பல்வேறு அமைப்புக்களினதும் பங்களிப்பை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வது என்னும் குறிக்கோளுடனும் வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி சேவைகளினுடாக நல்ல தோர் எதிர்காலம் என்னும் தொனிப் பொருளுடனும் வாரநிகழ்வுகள் அனுஷ்டிக்கப் படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் முதலாவது நாளில் சுகாதாரப் பணிகளும் சிரமதானப் பணிகளும்

இரண்டாவது நாளில்:- கல்வி, நூல் நிலைய அபிவிருத்தி, விளையாட்டு ஆகிய வைகளும்

மூன்றாவது நாளில்:- சுற்றாடல் பணிகளும்

நான்காவது நாளில்:- அபிவிருத்தி செயற்திட்டங்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளும்

ஐந்தாவது நாளில்:- மக்கள் பயன்பாட்டுச் சேவைக்கும்

ஆறாவது நாளில்:- தகவல் தொழில் நுட்பச் சேவைக்கும்

ஏழாவது நாளில்:- பரிசளிப்பும் ஊக்குவிப்பு நிகழ்வுகளும் அனுஷ்டிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## யாழ்.பல்கலைக்குத் தெரிவானோர்...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் வக்கிரன், ராசேந்திரம் நிஜான், ஜெயராஜா டானியல் தேவநேசன், உமாப் பிரியா தியாகராஜா, என்.எவ்.ருஷ்ணா, விநாயக மூர்த்தி மிராஜ்,

கணனி விஞ்ஞானம்

சிவபாதசுந்தரம் தவனீஸ், ஸ்ரீதரன் துவாரகன், தவரெட்ணராஜா ஜோன் ஜெயந்தன், ஸ்ரீகாந்தன் சுபாங்கன், இந்திர குமார் வத்சலன், தவபாலன் கிரிதரன், என்.டபிள்யூ.எல்.வெல்லாள, டபிள்யூ.பி.மதுசங்க, அல்ஸ்ரனன் சிந் துஷா, ஏ.எம்.கே.பி.அதிகாரி,

புஸ்பலிங்கம் மிதுன், பி.சி.ஆர். விஜயசிங்க, எம்.எம்.அனுபமா, எச்.எஸ்.முதுமால,ஜெயகோபால் ஜனார்த்தனன், கே.எம்.எஸ்.ஆர்.கங்கார, நடேசபிள்ளை கேதீஸ்வரன், எம்.ஜி.ஆர்.என்.வி.கருணாதிஸ்ஸ, விநாயகமூர்த்தி முகுந்தன்,

எம்.ஏ.எம்.பெரேரா, டி.எச்.எம்.எஸ்.ரி. தசநாயக்க, ஆர்.எம்.எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க, டபிள்யூ.எஸ்.எஸ்.பிறேமதாச, ஆர்.எம்.கே.எஸ். ரத்நாயக்க, எம்.எஸ். எட்வேட், ஏ.எஸ்.எம். சப்றாஸ், சிவதர்சினி தேவராசா, அழகுராஜா ஜீவிதன், தவராசா தினேஸ், ஸ்ரீசண்முக வேல் ஸ்ரீதிவாகரன்,

சபாரட்ணம் சரண்ராஜ், எம்.எஸ்.எவ். சப்ரினா, சூசைப்பிள்ளை மேரி தனுசா, ஐ.ஐ.ஏ.யு.ஐ.இஜபத்துல்ல, யோகராசா மோகனராஜ், எம்.எச்.எம்.சிபார், எவ்.ஹம்சத், திருச்செல்வம் அஜந்தன், வி.ஜி.யு. விடுரங்க, ஆர்.எம்.வி.என்.விஜிதஸ்ரீ, பி.டி.ஜிலிமலாஜ், பரமராஜசிங்கம் உதயசங்கர், பி.பி.எம்.டி.எம்.பஸ்நாயக்க.

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஜூலை 5 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## அதிபர்களை சமூகமளிக்க அறிவுறுத்து

தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடந்த மே மாதம் ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்ட தென்னிலங்கை கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றிய அதிபர்களை இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-1)

## சமுத்திரதேவா மீண்டும்பணியில்

நெடுந்தீவு, ஜூன் 30

நெடுந்தீவு பல நோக்குக் கூ. சங்கத்தின் சமுத்திரதேவா படகின் திருத்த வேலைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன. திருத்தப் பணிகள் அடுத்த வாரத்தில் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சமுத்திரதேவா படகு பயணிகளின் பொருள்களை ஏற்றிச்செலலக்கூடியதாக உள்ளது எனவும். அதன் கலப்பத்து வேலைகள் முடிவடைந்ததும் சமுத்திரதேவாவை பயணிகள் சேவையில் இணைத்துக் கொள்வது, நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு உறுதுணையாக இருக்கும் எனவும் குமுதினிப் படகு அடிக்கடி பழுதடையும் நிலையில் உள்ளதால் வீதி அபிவிருத்தி அதிகார சபை மாற்று நடவடிக்கையாக நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் மற்றும் தனியார் படகான அக்குவாட்டியையும் பயன்படுத்தி தடங்கலற்ற போக்குவரத்துச் சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நெடுந்தீவு மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம், சட்டம், விவசாயம், சித்த மருத்துவம் ஆகிய கற்கை நெறிகளுக்கான பதிவுகள் 12 ஆம் திகதியும் -

மருத்துவக் கற்கை நெறிக்கான பதிவுகள் 13 ஆம் திகதியும் - நடைபெறும் என்று அனுமதிக்களுக்கான உதவிப் பதிவாளர் ஆர். கிருஷ்ணகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தப் பதிவுகளை காலை 9 மணி முதல் பி.ப. 4 மணிவரை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் நாளை பதவியேற்க இருக்கிறார்.

அரச அதிபர் நியமனத்துக்கான கடிதங்கள் நேற்றுப் பிற்பகல் இருவருக்கும் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய இமெல்டா சுகுமார், வன்னியில் இடம்பெற்ற யுத்த நெருக்கடியான கால கட்டத்தில் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியுள் எமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ- 1- 9)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசின் ஊடாக உதவிபுரிய விரும்பாவிட்டால் நேரடியாக உதவ முடியும். அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

குமரன் பத்மநாதன் இப்போது எமக்கு உதவுகிறார். இது வரவேற்கத்தக்கது. ஆனால், புலிகள் வெளிநாடுகளில் செய்துள்ள முதலீடுகள் பல்வேறு பெயர்களில் உள்ளன. இவை அனைத்தும் குமரன் பத்மநாதனுக்குத் தெரியும் எனக் கூறமுடியாது.

புலம்பெயர்ந்தவர்களின் உறவுகள் வன்னியில் இருக்கலாம். அவர்களுக்கு உதவவேண்டிய கடப்பாடு புலம் பெயர்ந்தவர்களுக்கு உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

## பட்ஜட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ அரசின் 2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று பதில் நிதி அமைச்சர் சரத் அமுனுகமவால் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வருடத்தின் அரை ஆண்டில் இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இது முழு ஆண்டுக்குமே உரியது என்று சரத் அமுனுகம அவரது வரவு-செலவுத் திட்ட உரையில் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் பொருட்டு நாடாளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு கூடியது.

வழமையாகக் கொண்டுவரும் வரவு-செலவுத்திட்டம் அடங்கிய பெட்டி இல்லாமல் ஒரு சில 'பைல்' களுடன் மட்டுமே சபைக்குள் நுழைந்த அமைச்சர் சரத் அமுனுகம, 2.05 மணியளவில் வரவு-செலவுத்திட்ட உரையை ஆரம்பித்து 4.05 மணியளவில் நிறைவு செய்தார்.

வழமையான வரவு-செலவுத் திட்டத்தைவிட இம்முறை வரவு-செலவுத்திட்டம் மிகவும் சுருக்கமாகவே அமைந்திருந்தது. வழமையாக வரவு-செலவுத் திட்டம் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருக்கும். அதில் முதல் பிரிவு வரவு-செலவுத் திட்ட உரையையும், இரண்டாவது பிரிவு முன்மொழிவுகளையும் கொண்டிருக்கும். இம்முறை இரண்டு பிரிவுகளும் ஒன்றாகவே இருந்தன.

அதாவது, வரவு-செலவுத்திட்ட உரையிலேயே முன்மொழிவுகளும் சுருக்கமாக அடங்கியிருந்தன. (அ-சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்தமையே அதற்கான காரணம் ஆகும்.

இக்கடனைப் பெற வேண்டுமானால் நிதி மறு சீரமைப்பை அரசு துரிதப்படுத்த வேண்டும் என்றும் துண்டுவிழும் தொகையைக் குறைப்பதற்கு பரந்த அளவிலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் நாணய நிதியம் வலியுறுத்தி இருந்தது.

இந்நிலையில் இலங்கையின் தற்போதைய பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இந்த மூன்றாவது கட்டக் கொடுப்பனவை வழங்குவதற்கு நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்துக் கருத்துத் தெரிவித்த நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரும், பதில் தலைவருமான நயூகி ஸினோரா கூறுகையில், இலங்கையின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்து வருகின்றமையையும், கடந்த காலத்தை விட பலமாக இருக்கின்றமையையும் கருத்தில் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். (ச)


**இதோ! விசேட கழிவுடனான தள்ளுபடி விற்பனை**

* பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையான அனைத்து பாட நூல்களும்
* மருத்துவ புத்தகங்கள் உட்பட அனைத்து புத்தகங்களும் கழிவு விலைவில்
* பாடசாலை தர உள்ளீட்டுப் பொருள்கள்,
* Over Head Projector, O.H.P. Screen, white Board, Planal Board, Green Board
* ஆய்வுகூட உபகரணங்கள்

உட்பட அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
22, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

* கூடுதல் பெறுமதிக்கு கொள்வனவு செய்யும் பாடசாலைகளுக்கு போக்குவரத்துக்கான பங்களிப்பு வழங்கப்படும்.

**வேலை வாய்ப்பு**

1. சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
வடமராட்சிப் பகுதியில் இயங்கிவரும் தொழில் நிறுவனம் ஒன்றிற்கு NCT தகைமையோ அல்லது அதற்கு சமமான தகைமையுடைய சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் உடன் தேவை.

2. விற்பனையாளர் (பெண்)
யாழ்.நகரப் பகுதியில் இயங்கி வரும் தொழில் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை அனுபவம் உள்ள பெண் ஒருவர் உடன் தேவை.

குறிப்பு: கணனி அனுபவம், ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 0777916936**

Seminar

**மாபெரும் 6 நாள் கருத்தரங்கு**
**A/L 2010**
**LOGIC**
**எஸ்.எஸ்.மனோகரன்**
ஆரம்பம்: 03.07.2010 சனி 10 மணி
அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்க.
**BEACON** யாழ். நகர்.

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.
★ விற்பனையாளர்
★ களஞ்சியக்காப்பாளர்
★ சிட்டை எழுதுநர்
★ கணக்கு எழுதுநர்
★ வாகனச் சாரதி

* முன் அனுபவம் மின்சாரப் பொருள்கள் தொடர்பான அறிவு விரும்பத்தக்கது.
* 02.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் 10 - 4 மணிக்கிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

**செல்வா எலெக்ரிக்கல்,**
21, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி. 021 321 8617

**கார் விற்பனைக்கு**

WP GL தொ ரிலக்கமுடைய Nissan FB 15 கார் விற்பனைக்கு உண்டு
★1999 மொடல் good Condition F/O
★Alloy Wheel ★Power Mirror
★Pioneer Setup ★ABS System, A/C
★ Security alarm, remote lock
★Original fog Lambs ★136 000 km
★Manual/ Petrol
மேற் குறிப்பிட்ட விசேட வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு.
Price : 1.625 m
தொடர்பு: 0773404158

**கணனிப் பயிற்சி**

★ கற்கைநெறிகள் யாவும் உங்கள் விடுகளில் வைத்து கற்பிக்கப்படும்.
★ Ms Office, DTP, Web Design, Graphic Design, Internet & E-mail
★ குறிப்பு: கணனி இல்லாதவர்களுக்கு மாத "Laptop" மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
★ பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
T.P.: 0779672038 நல்லூர்.

**கன்ரர் வாகனம் விற்பனைக்கு**

52 - xxxx இலக்கமுடைய டவுள்க் கப் (Double cap IZUZU Canter) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
பிரகாஸ் எலக்ரோனிக்,
பருத்தித்துறை. 0773222837

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**AAT (Srilanka)** Foundation, intermediate & Final
Medium: English & தமிழ்
புதிய பிரிவு ஆரம்பம் : 03.07.2010 சனிக்கிழமை
க.பொ.த.(சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.

**Certificate Course in English**
Four Batches have Successfully completed the course fifth batch will be commenced on 03.07.2010
*Day Classes: Monday & Friday, Week end Classes : Saturday & Sun*

**External Degree** (Jaffna University)
*GAQ, BA I & BA Final, 1st in com, Bcom (1&II), Final.*
ஆரம்பம்: 03.07.2010 (Saturday) 9 am

*Further Detail:* Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.06.2010 இ[illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

bcs
The Chartered Institute for IT

HIGHER EDUCATION QUALIFICATIONS

Are you looking for a Chartered IT Qualification?

You will find it right here at The Chartered Institute for IT

BCS is the Industry body for IT Professionals.
Our Higher Education Qualifications are the essential qualifications for a career in computing and Information Technology (IT)

BCS The Chartered Institute for IT
Regional Office Sri Lanka
No 3, Maitland Crescent
Colombo 7
Sri Lanka

Tel +94 (11) 2 69 8566
Fax +94 (11) 2 69 1503
www.bcs.org.uk


# கைத்தொலைபேசித் தகவல்கள் அழிந்து போனால்!

இன்றைய உலகில் கைத்தொலைபேசி பல்வேறு பணிகளுக்கான சாதனமாகச் செயற்படுகிறது. பாடல், வீடியோ, போட்டோ, இன்டர்நெட், இமெயில், இணையப் பயன்பாடு, இடம் அறிதல், வழி நடத்தல், வங்கிக் கணக்குகளைக் கையாளுதல், தகவல்கள், தொடர்புகள், பத்திரிகைத் தகவல்கள் என இதன்மூலம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

அப்படிப்பட்ட நிலையில், ஒரு கைத்தொலைபேசியில் உள்ள தகவல்கள் அழிந்துபோனால், கைத்தொலைபேசி தொலைந்து போனால், மீண்டும்ஒருங்கிணைப்புச் செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் என்னவாகும்? நம் அன்றாட வாழ்க்கையே ஸ்தம்பித்துவிடும் அல்லவா?

ஒன்லைனில் சேமித்து வைக்கக்கூடிய வசதி ஒன்றினை ஓர் இணையத்தளம் தருகிறது. இந்தச் சேவையின் பெயர் Seven என்ற முகவரியில் உள்ள இணையத் தளத்திலிருந்து டவுன்லோட் செய்து, கைத்தொலைபேசியில் பதியவும். இந்த மென்பொருள் வசதியும் சில செயல்படு முறைகள் உள்ள கைத்தொலை பேசிகளில் மட்டுமே செயற்படு கிறது. இதனைப் பதிந்தவுடன் மிக எளிதாக, கைத்தொலை பேசியில் உள்ள அனைத்து தகவல்களையும், இந்தத் தளத்தில் பதிந்து வைத்து, இவை தொலைந்து போகும் காலத்தில் மீண்டும் பெற்றுப் பயன் படுத்தலாம்.

★★★


யாழ் நகரில் தற்பொது...!

TRADEMASTER®
DIGITAL PRINTING

நிறுவனத்தினராகிய நாம் யாழ்மக்களுக்கு 2003 ம் ஆண்டிலிருந்து மறைமுகமாக செய்துவந்த எமது சேவைகளை தற்போது **நேரடியாக** வழங்குவதுடன் ஒரு சதுர அடி டியிற்றல் பிறிண்களை **40/=** விற்கு 18 மாத உத்தரவாதத்துடன் தருகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

இல.173/5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:0217538770, 0772394422.





Digital Printing
டிஜிற்றல் பிறிண்ட்

சிறிராம் Karat Meter
Mangala Show Room

ஒரு சதுர அடி 30/=

Best Quality
6 COLOURS

Konica Studio & Colour Lab, Jaffna.

கொணிக்கா கலர் லாப்,
இல-14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.



தகவல் தொழில்நுட்ப துறையில்
பாரிய முன்னேற்றத்தை
தோற்றுவிக்க...

PCH
Benchmark ICT

இனி வரும் காலங்களில் நாம் பீச் ஹவுஸ் நிறுவனத்தின் பாரிய முன்னேற்றத்தை வெளிப்படுத்தவுள்ளோம்

Computer Hardware Solutions, Software Applications & Business Applications, Servers & Storage devises, Printing Solutions, Power Protection Solutions, Network Solutions, Systems Integration, Integrated Solutions, Microsoft Solutions, Audio Visual Presentation Systems, Imaging Products and Peripherals, Office Automation Solutions, Telecommunication Solutions, Bank note Processors, Surveillance Solutions, Physical Security Solutions, Data Security Solutions, HRM Solutions, Annual Maintenance Contracts, Computer Accessories.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இனத்தின் தொல் முதல் தாயினம்



மனித இனத்தின் ஆதி முன்னோடி குரங்கானது நிலத்தில் தன் கால்களால் நடந்து உலாவிய கால அளவினைவிட மரத்தில் இருந்து வாழ்ந்த கால அளவு குறைவாக இருந்துள்ளது. ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

இன்றைய மனித இனத்தின் நேரடி மூதாதையான ஆஸ்ட்ராலோ பிதிகஸ் அபாரன்சிஸ் இனத்தின் 3.2 மில்லியன் வருட பழமையான மனித எலும்புக் கூடு ஒன்று 1974 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பெண் குரங்கின் எலும்புக்கூடு என்பதால் அதற்கு லூசி (Lucy) என்று பெயரிடப்பட்டது. லூசியின் எலும்புக்கூடு சிறியதாக இருந்தமையால் அது மனிதர்களைப் போல இருந்திருக்க முடியாது - மனிதர்களைப் போல நிமிர்ந்து நடைபோட்டிருக்க முடியாது என்ற ஒரு கருத்து இருந்து வந்துள்ளது. ஆனால் 3.6 மில்லியன் வருடகால பழமையான ஆண் எலும்புக் கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 'லூசி' பற்றிய கருத்து மாற்றமடைந்துள்ளது.

கிறீன்லாந்து இயற்கை வரலாற்று அரும்பொருள் காட்சியகத்தின் விஞ்ஞானிகள் கூறுகையில், "இந்தப் புதிய கண்டுபிடிப்பின் பிரகாரம் லூசியும் அதன் உறவினர்களும் எம்மைப் போலவே நிலத்தில் இரண்டு கால்களால் நடந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும் என்று உறுதிபடக் கூறுகிறார்கள்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டுப் படிவத்துக்கு "கடனூமு"(Kadanuumuu) என்று பெயரிடப்பட்டுள்ளது. மத்திய எதியோப்பியாவிலுள்ள அபார் (Afar) மொழியில் பெரிய மனிதன் என்பது இதன் பொருளாகும். அங்கேதான் இந்த புதிய மனித எலும்புக்கூட்டு படிவம் கண்டுபிடிக்கப்பட்டது.

"கடனூமு" வின் சில கால் தசைகள் மனிதருக்குப் போலவே இடுப்பு எலும்புடன் இணைக்கப்பட்டவையாகத் தென்படுகின்றன. இப்படி இருந்தால் அந்த மனிதன் விரும்பியிருந்தால் ஒற்றைக் காலிலும் நிற்கக் கூடியதாய் இருந்திருக்கும். இதுவே மனிதரைப் போல் உடலை சமன்படுத்தி நடப்பதற்குத் தேவையான திறமையாகும்.

இந்த மனிதனால் உண்மையாகவே தன்னை சமன்படுத்தி நிலத்தில் ஒரு காலை ஊன்றி மறுகாலை தூக்கி நடந்திருக்க முடியும் என்கிறார்கள் அவர்கள். (ப) ★★★

# முதலைக்கு மேல் சவாரி செய்யும் சிறுமி!

அமெரிக்காவைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமி சமந்தாயங். இவருடைய செல்லப் பிராணிகள் எவை என்று அறிந்தால் நீங்கள் அதிர்ச்சித் திகில் அடையக்கூடும். அந்நாட்டில் வாழ்கின்ற ஒரு வகையான முதலைகளைத்தான் இவர் செல்லப்பிராணிகளாக வைத்திருக்கின்றார். இந்த மாதிரியான முதலைகளை மரணத்தின் தூதுவர்கள் என்றுதான் அங்கு வர்ணிப்பார்கள். ஆனால் இந்தச் சிறுமிக்கு இவைதான் நண்பர்கள்.இவற்றுடன் இருந்தால் அதைப்போல் வேறு மகிழ்ச்சியே இல்லை என்கிறார். இச்சிறுமியின் குடும்பத்தினருடைய குலத்தொழில் முதலைகளை அடக்கி ஆள்வதுதான் . இவர் இம்முதலைகளை அடக்கி ஆளும் வித்தையைத் தந்தையிடம் இருந்து ஆறாவது வயதில் கற்றுக் கொண்டார். இவருடைய பண்ணையிலே ஒன்று, இரண்டு அல்ல 350 அமெரிக்க முதலைகள் இருக்கின்றன. இவர் அவற்றின் மேல் சவாரி செய்வார். அவற்றைக் கட்டி அணைத்து முத்தம் கொடுப்பார். இந்த முதலைகளும் இவரின் சொல்லுக்கு அடங்கி நடக்கும். ★★★★★

# விண்வெளியில் தனியே வசிக்க வாய்ப்பு!

இப்போது விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் ஒன்றாகத்தான் தங்க வேண்டும். ஒரு விண்வெளி வீரர் தனிமை விரும்பியாக இருந்தாலும் அவர் தனியே தங்க வாய்ப்பிருக்காது. அதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவிருக்கிறது, அமெரிக்கா லாஸ் வேகாஸில் உள்ள பிகெலோவ் விண்வெளி இருப்பிடக் கட்டுமானத் தொழிற்சாலை.

இத்தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டுள்ள எதிர்காலத்துக்கான மாதிரி விண்வெளி இருப்பிடங்கள் பெரிய தர்ப்பூசணியைப் போலக் காட்சியளிக்கின்றன. இவற்றின் உள்ளே சென்றாலே ஒரு வசதியான வசிப்பிடத்துக்கான அனைத்து வசதிகளையும் காணமுடிகிறது.

எங்கள் தொழிற்சாலைக்கு வந்து இவற்றைப் பார்க்கும் ஒவ்வொரு விண்வெளி வீரரும் பெரிதும் வியந்து போகின்றனர். இந்த அளவுக்கு ஓர் இருப்பிடத்தை உருவாக்க முடியும் என்று அவர்களால் நம்பவே முடியவில்லை என்று இந்தத் தொழிற்சாலையின் நிறுவுனரான ராபர்ட் பகெலோவ் தெரிவிக்கிறார். இன்னும் நான்காண்டு காலத்தில் இந்த விண்வெளி வசிப்பிடங்கள் விண் வெளிக்குச் செல்லப் போகின்றன. அப்போது இவை முதல் விண்வெளி தனி வசிப்பிடங்களாக இருக்கும்.

பேயிங் கஸ்டமர்களுக்கான இருப்பிடங்கள் அதற்கடுத்து ஓராண்டுக்குப் பின் ஏற்படுத்தப்படும். விண்வெளி நிலையம் அமைக்கும் நிபுணத்துவமோ, பொருளாதார வசதியோ இல்லாத நாடுகள் அந்தக் குடியிருப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும். எல்லாவற்றுக்கும் மேலாக, 2016ஆம்ஆண்டில் ஒரு பெரிய விண்வெளிக் குடியிருப்பு அமைக்கப்படும். அப்போது அங்கு ஒரே நேரத்தில் 36 விண்வெளி வீரர்கள் வசிக்க முடியும். அது, தற்போதைய சர்வதேச விண்வெளி நிலையத்தில் வசிக்கும் விண்வெளி வீரர்களைப் போல ஆறு மடங்கு அதிகம்.

2017ஆம் ஆண்டில் 15 முதல் 20 ராக்கெட் ஏவுதலுக்குக் கட்டணம் செலுத்தியுள்ளது பகெலோவ் நிறுவனம்.

அதற்குப் பின் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ராக்கெட் ஏவுதலைப் பயன்படுத்திக் கொள்ளும். அதன்மூலம் வர்த்தக ரீதியாக விண்வெளிக்கு ஆள்களைக்கொண்டு செல்ல முடியும் என்று நம்பப்படுகிறது. தனியாரின் இந்த முயற்சிக்கு அமெரிக்க அரசும் ஆதரவு அளிக்கிறது.

விண்வெளிக்கு ஆள்களைக்கொண்டு செல்லும் திறன்கொண்ட விண்கலங்களை உருவாக்குவதற்கு மேலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு உதவுவதற்காக 2011ஆம் ஆண்டில் 600 கோடி டொலர்கள் என்ற பெருந்தொகையை முதலீடு செய்யவுள்ளது ஒபாமா அரசு.

தனியார் நிறுவனங்களின் வர்த்தக ரீதியான விண்வெளி முயற்சிகள் வெற்றி பெற்றால், பணம் செலுத்தும் எவரும் விண்வெளிக்குப் பயணம் செய்து அங்கு குறிப்பிட்ட நாள்களுக்குத் தங்கலாம்.

பகெலோவ் நிறுவனத்தின் விண்வெளி வசிப்பிடத்துக்குப் பூமியிலிருந்து செல்லவும், அங்கு 30 நாள்களுக்குத் தங்கவும் தற்போது ஏறக்குறைய 112 கோடி ரூபாய் கட்டணமாக விதிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது அதிகமாகத் தெரிந்தாலும், ரஷியாவின் சோயுஸ் விண்கலத்தின் மூலம் தனது வீரர்களைச் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்ப நாசா செலுத்தும் கட்டணத்துடன் ஒப்பிடும்போது குறைவுதான். சூடான்சர் என்ற பெயர்கொண்ட, 6,400 கனஅடி பரப்புக் கொண்ட விண்வெளி இருப்பிடத்தை முதலில் விண்வெளிக்கு அனுப்ப பகெலோவ் திட்டமிட்டுள்ளது. அதன்பிறகு 11,700 கனஅடி பரப்புக் கொண்ட இரண்டாவது சூடான்சர் விண்வெளிக்கு அனுப்பப்படும்.

விண்வெளி இருப்பிடங்கள் நிறுவப்பட்டதும், தாங்களாக உணவு, நீர், காற்று விநியோகத்தை மேற்கொள்ள முடியும், திடீரென ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும் என்று பகெலோவ் நிரூபித்துக் காட்டும். இந்நிறுவனம் தற்போது கூறும் விடயங்கள் எல்லாம் ஏற்படுத்தப் பட்டால், எதிர்கால விண்வெளி வசிப் பிடத்துக்கும், பூமியில் உள்ள ஓட்டல் களுக்கும் பெரிதாக வித்தியாசம் இருக்காது என்று கூறப்படுகிறது. ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org